# வைகறை வெளிச்சம்

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume-13
Issue-3

மார்ச்-2020 (ரஜப்-1441)

விலை ரூ. 20/-



## குஜராத் 2.0

## அகதிகளாக்கப்பட்ட டெல்லி முஸ்லிம்கள்

டெல்லி கலவரம் :
டெல்லியை விட்டு வெளியேறும் குழந்தை



## NPR/NRC அஸ்ஸாமில் நடந்தது என்ன?

மூத்த வழக்கறிஞர்
ஹாபிஸ் ரஷீது அஹமது சௌத்ரி



## அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் தோற்றது ஏன்?

## CAA-2019 குடியுரிமை சட்டத் திருத்தத்தால் யாருக்கு என்ன பாதிப்பு?

بسم الله الرحمن الرحيم

"
தங்களுடைய சத்திய
உடன்படிக்கைகளை
முறித்துக் கொண்டு,
(நம்) தூதரை (ஊரைவிட்டு)
வெளியேற்றவும்
திட்டமிட்ட மக்களுடன்
நீங்கள் போர் புரிய
வேண்டாமா? அவர்களே
(வாக்குறுதி மீறி
உங்களைத் தாக்க) முதல்
முறையாக துவங்கினர்;
நீங்கள் அவர்களுக்கு
அஞ்சுகிறீர்களா?
(அப்படியல்ல!)
நீங்கள் முஃமின்களாக
இருப்பீர்களானால்,
நீங்கள் அஞ்சுவதற்கு
தகுதியுடையவன்
அல்லாஹ் ஒருவனேதான்
(அல்குர்ஆன் - 9:13)
"


குஜராத் 2.0, அகதிகளாக்கப்பட்ட டெல்லி முஸ்லிம்கள் - 6

அந்தப் பெண்களாக நீங்கள் மாறினால்..! - 16

சிஏஏவுக்கு எதிரான போராட்டடத்தில்
காவல்துறையினரின் அராஜகம் - 19

**NPR / NRC** அஸ்ஸாமில் நடந்தது என்ன? - 24

ஜமாஅத்துல் உலமா சபை நிர்வாகிகள்
திரு. ரஜினிகாந்த் அவர்களுடன் சந்திப்பு - 32

பிராமணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள்...
முஸ்லீம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்... - 34

உலகெங்கும் முஸ்லிம்களை அழிக்கும் தொழில் - 38

மௌலானா ஆசாதின் இந்திய சுதந்திரப் போராட்டமும்
நம் தலைவர்களின் நடுநிலை மாறாமலும் - 41

நான் விரும்பும் ஹிஜாப் - 43

அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் தோற்றது ஏன்? - 47

எதற்கெடுத்தாலும் பாகிஸ்தானா? - 52

**CAA-2019** குடியுரிமை சட்டத் திருத்தத்தால்
யாருக்கு என்ன பாதிப்பு? - 57

இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்)
சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஓர் அறிமுகம் - 61

அதிரை சாஹின் பாக்கில் போராட்டத்தில் **NRC, NPR, CAA** - 65

2019 வாக்கு இயந்திரம் மோசடி அம்பலம்..! - 66



மார்ச்-2020 (ரஜப்-1441)

# வைகறை
## வெளிச்சம்

ஆசிரியர்
**மு. குலாம் முஹம்மது,** M.A.,
Journalism & Mass Communication

துணை ஆசிரியர்
**கே.எம். இலியாஸ் ரியாஜி,** M.A.,

தனி இதழ் : ரூ. 20 /-
ஆண்டுச் சந்தா
உள் நாடு : ரூ. 240 /-
வெளி நாடு : ரூ. 3000 /-
பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்
**DARUL ISLAM FOUNDATION TRUST**
என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு 8148129887



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdiction of Chennai courts.



**VAIGARAI VELICHAM**
52/1, Mannady Street, Room No. 7, Mannady,
Chennai - 600 001. Tel : 81481 29887
Email : darultrust@yahoo.com
Web : www.darulislam.in

http:/www.facebook.com/vaigarivelicham

தலையங்கம்

# நீதிக்கோர் எடுத்துக்காட்டு..!

நமது உச்ச நீதிமன்றம், பல முக்கியமான வழக்குகளில், வாயிதாவைப் போட்டு விடுகின் றது. அதனால் உடனடி நிவாரணத்தை எதிர்பார்த்த மக்கள் - மனித உரிமை ஆர்வலர்கள் இவர்க ளெல்லாம் விரக்தியுற்று நிற்கின்றார்கள். கஷ்மீரில் 370-ஐ குறித்த வழக்கிலும் இதையே செய்தார்கள்.

CAA என்ற குடியுரிமை சட்டத் திருத்தம் 2019 நிறைவேற்றப்பட்ட போதும், ஒரு நீண்ட நாள் வாயிதாவைப் போட்டது.

டெல்லிக் கலவரத்தைத் தூண்டிய சங்கப் பரிவார கபில் மிஸ்ரா - கலவரத்தின் போது கலவரக்காரர்களாகவும் - வேடிக்கைப் பார்ப்பவர் களாகவும் நின்று கொண்டிருந்த காவல்துறையினர் இவர்களுக்கு எதிராகக் குவிந்த மனுவும் காலக் கண்டப்பட்ட வாயிதாகளாக மாறிவிட்டன.

அதே நேரத்தில் 1984-ல் நடந்த இனப்படு கொலை போன்ற படுகொலைகளை 2020-ல் டெல்லியில் அனுமதிக்க மாட்டோம் என அறிவித்த, நீதிபதி முரளிதரனை உடனேயே இடமாற்றம் செய் யும் உத்திரவை பிறப்பிக்க முடிந்தது.

இவையெல்லாம் இந்தப் பாசிச அரசுக்கு சிறுபான்மையினருக்கு எதிரான அவர்களின் கொலை வெறித் தாண்டவங்களை நடத்தி முடிப் பதற்கு போதிய கால அவகாசங்களைத் தந்தது. எல்லாம் முடிந்தபின், இந்த வழக்குகளை தாமே இறந்துவிடுகின்றன.

இதனை உச்ச நீதிமன்றத்தின் மூத்த வழக்கறிஞர் கள் பிரசாத் பூஷன், அபிஷேஹ் சிங்வி ஆகியோர் மிகுந்த வேதனையோடு தெரிவித்திருக்கின்றார்கள்.

இன்றைய பாசிஸ்ட்டுகள் இந்தியாவின் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்தபின், இந்தியா ஓர் அறிவிக்கப்படாத நெருக்கடியில் இருப்பதாக அனைவரும் கூறுவார்கள்.

நெருக்கடி நிலை என்றாலே இந்திரா காந்தியின் ஆட்சிதான் அனைவருக்கும் நினைவில் நின்றாடும். இந்திரா காந்தி நெருக்கடி காலத்தில் யாருக்கும் எந்த உரிமையுமில்லை என்றாக்கினார். தனக்கு எதிரி என நினைத்தவர்களையெல்லாம் சிறையில் தள்ளினார். சித்திவதைகளைக் கட்ட விழ்த்திட்டார்.

மக்கள் ஒடோடி சென்றார்கள் உச்ச நீதி மன்றத்தை நோக்கி. அப்போது இருந்த நீதிபதிகளில் ஒருவர் Y.V.சந்திரசூடு என்பவர். அவர் நெருக்கடி கால நடவடிக்கைகளையெல்லாம் சரிகண்ட நீதிபதிகளுள் ஒருவர்.

இப்போது நிவாரணங்களைத் தேடி நீதி மன்றங்களை - உச்ச நீதிமன்றத்தை அணுகு கின்றவர்கள், எப்படி விரக்திக்கும், வியசனங்களுக் கும் ஆளாகி நின்கின்றார்களோ அதேபோல்தான் அன்று நெருக்கடி காலத்திலும் நீதிபதிகள் விரக்தியை நீதியாகத் தந்தார்கள்.

நெருக்கடி காலத்தில் பட வேண்டிய அடிகளை யெல்லாம் பட்டபின் 1978-ல் சந்திரசூடு அவர் களிடம் சிலர் கேட்டார்களாம், நெருக்கடி கால அநீதிகளை நீங்கள் எப்படி நியாயப்படுத்தினீர்கள்? என்று. அவர்,

நாங்களெல்லாம் அப்போது கோழைகளாக இருந்தோம் என்று பதில் சொன்னாராம். Front Line Dec.5, 2019.

மேலே நாம் சொன்னவை, பாபரி மஸ்ஜித் விவகாரத்தில் வழங்கப்பட்ட அநீதியைப் பற்றிய ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்கள். A.G. நூரானி என்ற மூத்த வழக்கறிஞர்.

நீதிபதிகளாக அஞ்சா நெஞ்சம் கொண்டவர் கள்தாம் இருந்திட வேண்டும். சொந்த சுகம் - பதவி அல்லது பீதி இவற்றால் அநீதியின் அரசர் களாய் இவர்கள் இருந்து விடுகின்றார்கள்.

வரலாறு முழுவதும் இதுபோன்ற கோழை களும், அநீதியாளர்களும், ஆட்சியிலும், நீதி வழங்கும் பீடங்களிலும் அமர்ந்திருக்கின்றார்கள். இதற்கு நேர் மாறான வரலாற்றை இஸ்லாமிய ஆட்சியில் மட்டுமே சந்திக்க முடியும்.

இஸ்லாத்தின் நீண்ட வரலாற்றில் ஹாரூன் அல்ரஷீத் என்றொரு ஆட்சியாளர். கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் வரலாற்று நாயகன். இவருக்கிருந்த உலக இராணுவ பலம் மிகவும் பெரியது. விரிந்து பரந்த ஒரு பூமிக்கு ஆட்சியாளர். செல்வம் கொட்டிக் கிடந்தது. உலக வரலாற்றை வரைபவர்கள். ஹாரூன் அல்ரஷீது அவர்களின் அளவுக்க வளம் பெற்ற ஓர் ஆட்சியாளன், நிச்சயமாக வாழ்வை சுவைக்கும் பேராசையில், எல்லா ஒழுக்கக் கேடுகளிலும் வீழ்ந் திருப்பார்கள் என்றே எழுதுகின்றார்கள். ஆனால், அவர் எளிமையான வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். தன் கையில் கிடைத்த பணத்தை யெல்லாம், ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவதற்குப் பயன்படுத்தினார்.

விஞ்ஞான வளர்ச்சியில், இஸ்லாமிய உலகம் புதுப்பது எல்லைகளை எட்டிப்பிடித்தது. இவரு டைய ஆலோசனை அவையில் முஸ்லிம்களோடு, சகோதர சமுதாயத்தைச் சேர்ந்த அறிஞர்களும் ஆய்வாளர்களும், வீற்றிருந்தார்கள். அன்றைய

விஞ்ஞான அறிவில் உயர்ந்து நின்றவர்கள், அவர்கள் எந்த மதத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும், அவரது அவையில் இடம் பெற்றார்கள்.

உலகில் அறிவைத் தேடிடுவோர், ஹாரூன் அல்ரஷீது அவர்களின் ஆட்சித் தலைமையகத்தை நாடி வந்தார்கள். வந்தவர்களை வரவேற்றார். உணவும், உறைவிடமும் தந்தார். அத்தனையையும் இலவசமாக வழங்கினார்.

உலகின் இதர பகுதிகளிலிருந்த நூல்களை யெல்லாம் அரபு மொழியில் மொழிப் பெயர்க்க பல நூறுபேரை மொழிப் பெயர்ப்பாளராக அமர்த்தி இருந்தார். எல்லா வசதிகளோடும் ஊதியங்களையும் தந்தார்.

இந்த நூல்களை இலக்கியங்களை, நகல் எடுக்க உலகெங்குமிருந்து வந்த மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும், நகல்களை எடுப்பதிலிருந்து அனைத்தையும் இலவசமாக வழங்கினார்.

இறைவனை அஞ்சுவதில் இணையற்றவர். இப்படியெல்லாம் வளங்களை அள்ளி வழங்கிய அவர் சொந்த வாழ்க்கையில் சிக்கன மாகவே இருந்தார்.

கலீபா ஹாரூன் அல்ரஷீது அவர்கள் ஒரு வல்லரசு என்றால் மேலை நாட்டில் சார்மிலாங் என்றொரு கிறிஸ்தவ வல்லரசன் இருந்தார். ஆனால் சார்மிலாங் - ஹாரூன் அல்ரஷீது அவர்களுடன் மிகைத்த நட்பு கொண்டவராக இருந்தார். அடிக்கடி பரிசுகளை அனுப்பிக் கொண்டிதார்.

இப்படி ஒருபெரும் ஆட்சியாளராய் வீற்றிருந்த ஹாரூன் அல்ரஷீது அவர்களின் ஆணைகள் பலவற்றை அவருடைய தலைமை நீதிமன்றத்தின் நீதிபதி அபூ யூசுப் அவர்கள் "செல்லாது" என தீர்ப்பளித்தார்.

அவருடைய ஆட்சியின் கீழ் வாழ்ந்த முஸ்லி மல்லாத மக்கள், நீதிமன்றம் நம்மைப் பாதுகாக்கும் என்ற அசையாத நம்பிக்கையால் வார்ந்தார்கள். ஆனால் எல்லோரிடமும் ஹாரூன் அல்ரஷீது நீதி மட்டும் அல்ல பாசமும் நிறைந்த பரிபாலகர் என்ற நம்பிக்கையே மிகைத்த நின்றது.

ஹாரூன் அல்ரஷீது அவர், ஒருநாள் தனது ஆணைகள் பவற்றை ரத்து செய்த தலைமை நீதிபதியை அழைத்து வர ஒர் அதிகாரியை அனுப் பினார். அதிகரி நீதிபதி அபூ யூசுப் அவர்களிடம் வந்தார்.

"கலீபா அவர்கள் உங்களை அழைத்து வர சென்னார்கள்" என்றார். அதற்கு நீதிபதி யூசுப் அவர்கள் "கலீபாவை அவருடைய வேலையைச் செய்யச் சொல், நான் என்னுடைய வேலையை செய்கின்றேன்" என்று கூறி திருப்பி அனுப்பி விட்டார்கள்.

கலீபா ஹாரூன் அல்ரஷீது அவர்கள். அதிகாரியை மீண்டும் அனுப்பினார். "கலீபாவுக்கு சில விவகாரங்களில் சட்ட ஆலோசனை தேவைப் படுகிறது. நாளை அதுகுறித்து நடக்கும் ஆலோ சனைக் கூட்டத்தில் தாங்கள் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கிட வேண்டுமாய் . கூறியதாக கூறி வரச்சொல்" என்றார்.

தலைமை நீதிபதி ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொள்ள வருவேன் எனக் கூறினார் - வந்தார்.

ஆலோசனைக் கூட்டத்தில் நான் பிறப்பிக்கும் ஆணைகள் பலவற்றை நீங்கள் ரத்து செய்து உத்திர விடுகின்றீர்கள், என்றார் சற்று கடுகடுப்பாக.

ஷரீயாவுக்கு எதிரான ஆணைகளை ரத்துதான் செய்ய முடியும். அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள் என்றார் தலைமை நீதிபதி.

உடனேயே கலீபா ஹாரூன் அல்ரஷீது அவர்கள், வானத்தை நோக்கி கைகளை உயர்த்தியவராக, யா அல்லாஹ் இதுபோன்ற நீதிபதிகளைத் தந்து என்னை அநீதி செய்வதிலிருந்து தடுத்த உனக்கே எல்லாப் புகழும், நன்றியும் என்றார்.

அல்லாஹ் உன்னைப் பொருந்திக் கொள்வனாக எனக்கூறி அவ்விடம் விட்டு அகன்றார்கள் நீதிபதி அபூ யூசுப் அவர்கள். என்னே மகோன்னத வரலாறு.

**இன்றைய நீதிபதிகளின் நிலை என்ன?**

இஸ்லாமிய ஆட்சியின் அடிப்படைத் தத்துவம் அல்லாஹ்விடம் அனைவரும் தங்கள் செயலுக்கு பதில் சொல்லியாக வேண்டும்.

அதிகாரம் தரும் மமதையில் அநியாயத்தைச் செய்யும் ஆட்சியாளர்கள், நிச்சயமாக அல்லாஹ் விடம் தண்டனைகளைப் பெறுவார்கள்.

அநீதியைத் தீர்ப்பாக தருவோருக்கும் இதுவே. இதனால்தான் கூறுகின்றோம் இந்த இஸ்லாம் தழைக்க வேண்டும். அதன் அடிப்படையில் ஆட்சி மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

**முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண் டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) – பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.**

(திருக்குர்ஆன் 5:8)



# குஜராத் 2.0

# அகதிகளாக்கப்பட்ட டெல்லி முஸ்லிம்கள்



இந்தியா முழுக்க இரண்டு மாதங்களுக்கு மேலாக இஸ்லாமியர்கள் தொடர் போராட்டமாக கோடிக்கணக்கான பேர் ஒன்றிணைந்து போராடி வருகிறார்கள். அங்கெல்லாம் சிறு பதற்றம் கூட உருவாக வில்லை. ஆனால், டெல்லியில் பாஜகவினர் ஆதரவு பேரணி என்று டெல்லியில் டிசம்பர் 24ம் தேதி நடத்தினர்.

அதில் பேசிய பாஜக எம்.எல்.ஏ வன்முறையை தூண்டும் விதமாக பேசினார். அதன் தொடர்ச்சியாக இந்தியாவின் தலைநகரில் மூன்று நாட்களுக்கு மேல் கலவர பூமியாக மாற்றப்பட்டு முஸ்லிம்கள் காவல்துறையின் உதவியோடு வேட்டையாடப்பட்டனர். இதில் தற்போது வரை (27.02.2020) 30 பேர் இறந்திருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த கலவரம் முழுக்க டெல்லியின் வடகிழக்கு பகுதியில் தான் நடந்திருக்கிறது. டெல்லி தேர்தலில் பாஜக மொத்தம் 8 தொகுதிகளில் வெற்றி பெற்றது. இதில் 7 தொகுதி டெல்லியின் வடகிழக்கு பகுதி. இப்போது கலவரம் நடப்பதும் இப்பகுதியில் தான்.

## 85 வயதான மூதாட்டி எரித்து கொலை

இந்துத்துவ பயங்கரவாதிகள் கூட்டமாக இணைந்து ஜெய் ஸ்ரீ ராம் என்ற கோசத்துடன் முஸ்லிம்களின் வீடுகளை சூரையாடுகிறார்கள். இதில் 85 வயதான மூதாட்டியையும் எரித்து கொன்றிருக்கிறார்கள்.

முஹம்மது சுலைமானி தன் வீட்டுக்கு பால் வாங்குவதற்காக வெளியில் வந்து விட்டார். அந்த நேரத்தில் அவர் வீட்டுப்பகுதியில் கலவரம் உருவாகியிருக்கிறது. இதனை சுலைமானியின்



மகன் போனில் கூறியதும் தன் வீட்டுக்கு திரும்ப முனைந்த சுலைமானியை அப்பகுதி மக்கள் தடுத்து நீ சென்றால் உன்னை அடித்தே கொன்று விடுவார்கள் என்று தடுத்து விட்டனர்.

சுலைமானியின் வீட்டுக்குள் புகுந்த இந்துத் துவ பயங்கரவாதிகள் சுலைமானி சேகரித்து வைத்திருந்த 8 லட்ச ரூபாய் பணத்தையும், நகைகளையும் திருடி விட்டு வீடு முழுக்க தீ வைத்து சென்று விட்டனர்.

உள்ளே 80 வயது மூதாட்டி இருக்கிறார் என தெரிந்து அவரை உள்ளே வைத்தவாறு தீயை பற்ற வைத்து சென்று விட்டிருக்கிறார்கள் பயங்கரவாதிகள். சுலைமானி தன் குடும்பத்தை பிறகு காவல்நிலையத்தில் தான் சந்தித்தார். தன் தாய் கொல்லப்பட்டதும் அப்போது தான் அவருக்கு தெரிந்தது.

இந்துக்களில் சிலர் தான் சுலைமானியை செல்ல வேண்டாம் என்று தடுத்து அவர் உயிரையும் காப்பாற்றியிருக்கிறார்கள்.

தன் சொத்து முழுவதையும் இழந்து விட்டேன். இப்போது எங்களிடம் எதுவு மில்லை. அகதிகளாக என் குடும்பம் தெருவில் இருக்கிறது என்கிறார் சுலைமானி. (scroll 26.02.2020)

## இரண்டு மாத கர்ப்பிணி தன் வாழ்வை இழந்த துயரம்

சாஷியா திருமணமாகி நான்கு மாதங்கள் தான் ஆகிறது. தற்போது இரண்டு மாத குழந்தையை தன் கருவில் சுமக்கிறார் சாஷியா. இந்துத்துவ தீவிரவாதிகள் நிகழ்த்திய கோரத் தாக்குதலில் தன் கணவனை இழந்து அநாதை யாக நிற்கிறார்.

தன் கணவனுடன் எப்போதும் போல ஒன்றாக அமர்ந்து மதிய உணவு உண்ணலாம் என்று கணவனுக்காக காத்திருந்த சாஷியாவுக்கு தன் கணவன் கொல்லப்பட்டான் என்ற செய்தி மரண வலியை தந்தது. தன் கணவனின் உடலையாவது காண வேண்டும் என்று அவர் துடிக்கிறார்.

தன் கணவனின் உடலை இந்த மருத்துவ மனையில் தான் வைத்திருக்கிறார்கள் என மைத்துனன் கூற தன் கணவனின் உடலையாவது பார்க்க வேண்டும் என்று கிளம்பும் போது, மைத்துனன் புர்காவை கழட்டி வைத்து விட்டு வாருங்கள் நாம் உயிருடன் செல்ல வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். புர்காவை கழட்டி முஸ்லிம் அடையாளத்தை மறைத்து தன் கணவனின் உடலை காண சென்றும் உடலை





காட்ட முடியாது என்று அதிகாரிகள் மறுத்து விட்டனர்.

வீட்டில் கூட நான் புர்காவை கழட்டியது கிடையாது. ஆனால், இன்று எதையும் பார்க்காமல் என் அடையாளங்களை மறைத்து வந்தும் என் கணவனின் உடலை கூட காண் பிக்க மறுக்கிறார்கள் என அழுது புலம்புகிறார்.

இனி நானும், என் வயிற்றில் இருக்கும் குழந்தையும் என்ன செய்வோம்?.. என்று கதறுகிறார் சாஷியா.

இப்படி பல நூறு பேர் டெல்லியில் இந்துத் துவவாதிகளால் நிகத்தப்பட்ட பயங்கரவாதத் தால் தங்கள் வாழ்க்கையை இழந்துள்ளனர். (print 26.02.2020)

## காவலர்கள் கண் முன் கொல்லப்பட்ட முஸ்லிம் இளைஞன்

28 வயதான முபாரக் நெஞ்சில் சுடப்பட்டு நடு வீதியில் பிணமாக்கப்பட்டார். முபாரக்கின் உடல் கூட கேட்பாரற்று வீதியில் போடப்பட்டிருந்தது. காவலர்களுக்கு அழைத்து சொல்லியும், ஆம்புலன்சுக்கு அழைத்து சொல்லியும் மூன்று மணி நேரத்திற்கு பிறகே



உடலை எடுத்து சென்றார்கள்.

இந்த சம்பவத்தை நேரில் பார்த்த மக்கள் பத்திரிக்கையாளர்களிடம் சொல்லும் போது, கருப்பு ஜாக்கெட் அணிந்த ஒருவன் தான் இவரை சுட்டான். அப்போது காவலதிகாரிகள் இந்த சம்பவத்தை வேடிக்கை பார்த்து கொண்டி ருந்தார்கள். சுட்டவன் கடந்து செல்லும் வரை அமைதியாகவே நின்றிருந்தார்கள். (print 26.02.2020)

## காவல்துறையினருடன் கைகோர்த்து கலவரம் செய்த பயங்கரவாதிகள்

தலைநகர் டெல்லியில் நடைபெற்ற கலவரம் வெறும் இந்துத்துவ பயங்கரவாதிகளால் மட்டும் நடத்தப்பட்டதல்ல. பயங்கரவாதிகளுக்கு இணையாக டெல்லி காவல்துறையினரும் ஜெய் ஸ்ரீ ராம் கோசத்துடன் முஸ்லிம் பகுதிகளை சூறையாடியிருக்கிறார்கள்.

காவல்துறையினர் மற்றும் பயங்கரவாதி களும் நிகழ்த்திய கோரத்தை கண்ணால் கண்ட கேரவன் பத்திரிக்கையாளர் கௌசல் ஷ்ரோஃப் இவ்வாறு விவரிக்கிறார்,

“24 பிப்ரவரி மாலை 6 மணிக்கு டெல்லியின் யமுனா விஹார் பகுதிக்கு அருகில் உள்ள ஃபஹான் சர்வதேச பள்ளிக்கு அருகில் சிறிய அளவிலான காவலர்கள் நின்றிருந்தார்கள். ஏன் காவலர்கள் குவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று விசாரிக்கையில் அந்த பகுதியில் காலையில், முஸ்லிம்கள் பகுதியில் இருப்பவர்களுக்கும் சிஏஏ வை ஆதரித்து போராட்டம் நடத்தியவர் களுக்கும் இடையில் கலவரம் நடைபெற்றதாக கூறினார்கள்.

சிறிது நேரத்திற்கு பிறகு 100 பேர் கொண்ட இந்துத்துவ கும்பல் ஒன்று அப்பகுதிக்கு வந்தது. அவர்களுடன் காவல்துறையினரும் இணைந்து கொண்டார்கள். நான் இந்துத்துவ கும்பலுக்கு பின்னால் ஒளிந்து கொண்டேன். காவலர்களும், அந்த கும்பலில் இருந்தவர்களும் முஸ்லிம்களை திட்டிக்கொண்டே கல்லெறிதலில் ஈடுபட்டனர்.

காவலர்களும் ஜெய் ஸ்ரீ ராம் கோசத்துடன் கல்லெறிதலில் ஈடுபட்டனர். ஒவ்வொரு தாக்குதலுக்கும் பதில் தாக்குதலாக முஸ்லிம்கள் பகுதியிலிருந்தும் கல்லெறிதல்






நிகழ்த்தினார்கள். பத்து நிமிடத்திற்கொரு முறை காவலர்களும் இந்துத்துவ கும்பலும் ஆக்ரோசமாக முன்னேறியது. ஆனால் பதில் தாக்குதல் வந்ததால் பின்வாங்கினார்கள்.

அங்கே துப்பாக்கிகளில் சுடும் சத்தமும் கேட்டுக்கொண்டே இருந்தது. ஆனால் அது எங்கிருந்து வருகிறது என கண்டுபிடிக்க முடிய வில்லை. அங்கே இருந்த ஒரு பத்திரிக்கையாளர் துப்பாக்கியுடன் நிற்கும் நபரின் போட்டோவை தந்தார். அதில் ஒரு நபர் துப்பாக்கியுடன் முஸ்லிம் பகுதியான சாந்த்பக்கை நோக்கி சுட்டவாறு நின்றிருந்தார்.

இந்த கலவர சூழலுக்கு முன்பாக மாலை 5.30 மணிக்கு அங்கிருக்கும் தலைமை காவல் அதிகாரியிடம் நான் விசாரித்தேன். அவர் தன் பெயரை வெளியில் சொல்லக்கூடாது என்ற நிபந்தனையோடு, தன் மேலதிகாரிகள் தங்களை கைவிட்டதாகவும் இந்த கேவலமான நாய்கள் மருத்துவமனைகள், கடைகள், பள்ளிகள் என எல்லாவற்றையும் கொழுத்தி விட்டதாகவும் கூறினார். ஆனால் இதனை எந்த பிரிவினர் செய்தார்கள் என தெரியவில்லை என்றார்.

இறுதியாக இன்னும் சில இந்துத்துவ கும்பல் வாசிராபாத் சாலையிலிருந்து வந்து சேர்ந்து கொண்டார்கள். இம்முறை முஸ்லிம் பகுதியை நோக்கி முன்னேறிய காவல்துறையினரும், கலவரக்காரர்களும் பின்வாங்க வில்லை. சிறிது நேரத்தில் சாந்த்பாக் பகுதியில் போராட்டக்காரர் களின் பகுதி தீப்பிடித்து எரிந்தது. அவர்களின் டெண்ட் என அனைத்தும் எரிக்கப்பட்டது.

சிஏஏ எதிர்ப்பு போராட்டக்காரர்கள் அமர்ந்திருந்த இடம் முழுக்க எரிக்கப் பட்டது. அருகிலிருந்த வாகனங்கள் எரிக்கப்பட்டன. கலவரக்காரர்கள் கையில் ராடு, கத்தி போன்ற ஆயுதங் களுடன் முஸ்லிம் பகுதிக்குள் முன்னேறி னார்கள்.

அவர்கள் முஸ்லிம் பகுதிக்குள் போகும் போது தொடர்ச்சியாக, "வந்தே மாதரம்" "மோடி மோடி" "ஜெய் ஸ்ரீ ராம்" " பாரதத்தின் துரோகிகளை சுட்டுத்தள்ளுங்கள்" என்ற கோசத்தை கூறிக் கொண்டே சென்றார்கள். அங்கிருந்த பொருட்களை அடித்தும், தீ வைத்தும் கொளுத்தினார்கள்.

அப்பகுதியிலிருந்து 300 மீட்டர் தள்ளி இன்னொரு புதிய 100 பேர் கொண்ட கும்பல் நின்றிருந்தது. அவர்கள் யார் என கலவரக் காரர்களிடம் நான் கேட்க, "கவலை வேண்டாம் எல்லாம் நம் ஆட்கள் தான் எல்லோரும் இந்துக்கள். இந்த அனைத்து முஸ்லிம்களின் தாய்மார்களையும் இன்று வன்புணர்வு செய்யாமல் விடமாட்டோம்" என்று கூறினார். அருகிலிருந்த இன்னொரு கலவரக்காரர் "மடையர்களே (நாகரிகம் கருதி இந்த வார்த் தையை உபயோக்கிறோம். மிக கேவலமான வார்த்தைகள் இங்கே கோசமாக போடப் பட்டது) சுதந்திரம் கேட்டீர்களே இதோ சுதந்திரம்" என்று கோசம் போட்டார்.



எரித்துக் கொல்லப்பட்ட 85 வயது மூதாட்டி



பின்னர் இரண்டு மணி நேரம் கழித்து காவல்துறையினர் மெதுவாக கலவரக்காரர் களை கலைக்க தொடங்கினர். கலவரக்காரர்கள் அருகிலுள்ள பாஞ்சன்பூரா பகுதிக்குள்ளும் கடை வீதிகளுக்குள்ளும் புகுந்து கலைந்து சென்றனர்.

மாலை 7.30 மணி இருக்கும் போது ஃபஹான் பள்ளிக்கு அருகில் நூறு பேர் கொண்ட காவி கும்பல் நின்று கொண்டு குலாத்தி கம்யூனிகேஷன் கடைக்கு முன்னால் 50 வயது மதிக்கத்தக்க ஒரு முஸ்லிம் நபரை கொடூரமாக தாக்கிக் கொண்டிருந்தார்கள். அந்நபர் ஓட முயற்சிக்க அவரை பிடித்து கும்பலாக அடித்து கொண்டிருந்தார்கள். அப்போது அங்கே இருந்த ஒரு இந்து நபர் அந்த காவிக்கும்பலின் தலைவனிடம் அவர் நமது சகோதரர் அவரை ஏன் அடிக்கிறீர்கள் என சண்டைக்கு வர அவரையும் அடித்து விட்டு முஸ்லிம் நபரை கடுமையாக தாக்கிக் கொண்டிருந்தார்கள். அந்த முஸ்லிம் நபர் தப்பித்து ஓடினார். அவரை துரத்தி இருவர் சென்றனர். அவரை பிடித்தனரா, இல்லையா என்று என்னால் பார்க்க முடியவில்லை.

இந்த அத்தனை சம்பவத்தையும் காவலதி காரிகள் பார்த்துக் கொண்டு அமைதியாக வேடிக்கை பார்த்தனர். தனி மனித தாக்குதல், கும்பல் தாக்குதல் எதனையும் காவலர்கள் கண்டிக்கவில்லை. இந்துத்துவ கும்பல் செய்யும் கலவரத்திற்கு எல்லாம் காவலர்கள் உடந்தையாக இருந்தனர்.

நான் அந்த நாள் முழுவதும் மஜ்பூர் மெட்ரோ நிலையம் செல்வதற்காக ஆதர்ஷ் மொஹல்லா, விஜய் பார்க், சட்டார் வாலி கலி, நூர் இலாஹி, பஹஜன்புரா, யமுனா விஹார் பகுதிகள் வழியாக சென்றேன். அந்த பகுதிகள் முழுக்க கலவரக்காரர்களுடன் காவல் துறையினர் இணைந்து நிற்பது தெரிந்தது. எப்படி உத்திரபிரதேசத்தில் முஸ்லிம்களுக்கெதிராக காவலதிகாரிகள் இந்துத்துவ கும்பலுடன் இணைந்து கொண்டார்களோ அதே நிலைப் பாட்டை டெல்லி காவல்துறையினர் எடுத்திருக் கிறார்கள். அதற்கேற்றவாறு மஜ்பூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதியில் இந்துத்துவ கும்பல் "டெல்லி போலீஸ் வாழ்க" என்ற கோசத்தை எழுப்பியவாறு இருந்தனர்.

இரவு 8 மணிக்கு பிறகு கூட்டம் குறைந்தது. கல்லெறிதலும் நின்றது. சுற்றி பல்வேறு இடங்கள் தரைமட்டமாக்கப்பட்டதற்கு நடுவில் மசூதி ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அதற்கு அருகில் 30 பேர் கொண்ட இந்துத்துவ கும்பல் நின்று கொண்டு, "இந்தியாவில் நீங்கள் வாழ வேண்டுமா, ஜெய் ஸ்ரீராம் நீங்கள் சொல்ல வேண்டும்" என்று கோசம் போட்டு கொண்டிருந்தார்கள். கும்பலில் ஒருவர் ஜெய் ஸ்ரீராம் சொல்பவர்களுக்கு லட்டு வழங்கி கொண்டிருந்தார். எல்லோரும் மகிழ்வுடன் மசூதி எரிந்து கொண்டிருக்க ஜெய் ஸ்ரீ ராம் கூறி லட்டுக்களை பகிர்ந்து கொண்டிருந்தார்கள்.

அப்போது கும்பலில் இருந்த ஒருவர் அருகிலிருந்த ஆட்டோவின் மீதேறி ஆட்டோ வுக்கு தீ வைக்க முயன்றார். இந்துவின் சொத்துக்கு சேதாரம் வரக்கூடாது என கும்பலின் தலைவன் சொல்ல அந்த ஆட்டோவின் உரிமம் முஸ்லிம் பெயரில் தான் இருக்கிறது என்று கூறினார். கும்பலின் தலைவன் உங்கள் சக்தியை வீணாக்காதீர்கள். மசூதியை சேதப் படுத்துவதில் கவனம் செலுத்துங்கள் என்றார். அதன் பிறகு மசூதி முழுக்க எரிந்து கொண்டி ருந்தது. காவலர்கள் வேடிக்கை பார்த்துக்

கொண்டிருந்தனர். (The caravan 25.02.2020)

## முஸ்லிம்களின் கல்லறையை இடித்து வெறியை தணித்து கொண்ட பயங்கரவாதிகள்

டெல்லியின் வடகிழக்கு பகுதியில் கோகுல்புரி காவல்நிலையத்திற்கு அருகில் 100மீட்டர் தொலைவில் 200 பேர் கொண்ட வெறிப்பிடித்த இந்துத்துவ பயங்கரவாத கும்பல் ஒன்று சேர்கிறது. அங்குள்ள கபர்ஸ்தானின் (இறந்த முஸ்லிம்களை புதைக்கும் இடம்) சுற்றுச்சுவரை இடிக்க தொடங்குகிறார்கள்.

காவலதிகாரிகள் இதனை பார்த்து அமைதியாக இருக்கிறார்கள். காவலர்களில் ஒருவர் கூட தடுப்பதற்கு முன்வரவில்லை. ஜெய் ஸ்ரீ ராம் கோசத்துடன் அந்த கும்பல் சுற்றுச்சுவரை இடித்து உள்ளே நுழைகிறார்கள்.

இது இங்கே நடந்து கொண்டிருக்கும் போதே அப்பகுதியில் இருக்கும் இரண்டு கடைகள் உடைக்கப்படுகிறது. ஏனென்றால், அந்த கடையின் பெயர் “கான்” என்று முடிக்கப் பட்டிருந்தது. இதனையும் காவலர்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

கபர்ஸ்தானிற்குள் நுழைந்து ஒவ்வொரு சமாதிகளையும் உடைத்தார்கள். அதில் ஒருவன் சத்தமாக கத்திக் கொண்டே, “ இப்போது பாருங்கள், அவர்கள் எங்களிடம் சவால் விட்டார்கள். நாங்கள் இப்போது அவர்களுக் கான இடத்தை காட்டுகிறோம்” என்று இடித்து கொண்டிருந்தான்.

அங்கே இருந்த பெண் பத்திரிக்கையாளர் இவர்களிடம் கேள்வி கேட்க, நாங்கள் எங்கள் வேலையை செய்கிறோம். அமைதியாக சென்று விடு நாங்கள் உன்னை எச்சரிக்கிறோம். வீடியோ எதாவது எடுக்க நினைத்தால் இந்த கல்லறையிலேயே உன்னை புதைத்து விடுவோம் என்று மிரட்டி இருக்கிறார்கள்.

கலவரக்காரர்கள் மிரட்டும் நேரத்தில் ஒரு காவலர் ரோந்துக்காக பைக்கில் சென்றுக் கொண்டிருக்கிறார். அவர் பார்த்தும் நிற்காமல் செல்வதை பார்த்து பத்திரிக்கையாளர் அழைக்க, அதற்கு கலவரக்காரர்கள் பதில் தருகிறார்கள்.



காவலர்கள் உங்களுக்கு உதவுவார்கள் என்று நினைக்காதீர்கள். அவர்கள் எங்களுடன் இருக்கிறார்கள். ஒட்டுமொத்த இந்து சமூகமும் எங்களின் பின்னால் உள்ளது. இங்கிருந்து சென்று விடு இல்லையென்றால் விளைவை சந்திக்க வேண்டியிருக்கும் என்று மிரட்டியுள்ளனர்.

காவலர்களிடம் பத்திரிக்கையாளர் முறையிட, நீங்கள் இங்கிருந்து சென்று விடுங்கள் சாந்த்பாக்கிற்கு உள்ளே செல்ல நினைத்தால் விளைவுகள் மிக மோசமாக இருக்கும். இங்கு நிலைமையை கட்டுப்படுத்த முடியாது. நாங்கள் ஏதாவது செய்தால் அதற்கு பதிலடி தருவார்கள். இவர்களை கட்டுப்படுத்த முடியாது என பதிலளித்திருக்கிறார்கள் காவலர்கள்.

இவ்வளவு பெரிய கலவர சூழல் இருக்கிறது என்று தெரிந்தும் காவலர்கள் அதிகளவில் கலவர பகுதியில் குவிக்கப்படவில்லை. ஆனால் டெல்லி காவல்துறையும், உள்துறை அமைச்சக மும் கலவரத்தை அடக்க தேவையான அளவுக்கு காவலர்களும், இராணுவ வீரர்களும் போடப் பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆனால் சிறிய அளவிலான காவலர்கள் மட்டுமே நிறுத் தப்பட்டிருக்கிறார்கள் என்று கள நிலவ ரத்தை பத்திரிக்கையாளர் குறிப்பிடுகிறார்

(PRINT 25.02.2020)




## அமைதியாக போராடியவர்கள் மீது வன்முறை தாக்குதல் நிகழ்த்திய டெல்லி காவல் துறையினர்

டெல்லியின் உள்ள குரெல்ஜ்ஜி காஸ் பகுதியில் சிறிய அளவில் முஸ்லிம் பெண்கள் ஒரு மாதத்திற்கும் மேலாக அமைதியான முறையில் போராடி வருகிறார்கள். அவர்களை பிப்ரவரி 26ம் தேதி காவல்துறையினர் புகை குண்டுகளை உபயோகித்தும், தடியடி நடத்தியும் கலைத்தனர். இந்த போராட்டத்தை முன்னெடுத்து சென்றதாக கூறி இரண்டு சமூக ஆர்வலர்களையும் கைது செய்து சித்ரவதை செய்துள்ளனர்.

இஸ்ரத் ஜகான் மற்றும் காலித் ஷாபி இருவரும் அப்பகுதியில் மக்களை ஒன்று திரட்டி நன்மையான சமூக காரியங்களை செய்யக்கூடிய சமூக ஆர்வலர்கள். தங்களை குரெல்ஜி காஸ் பகுதியில் நடந்த போராட்டத்தில் இணைத்து கொண்டவர்கள்.

போலீஸ் தடியடி நடத்தி கலைக்கும் போது இவர்கள் சம்பவ இடத்திலேயே இல்லை. ஆனால் சம்பவம் தெரிந்து பகுதிக்கு வந்து காவல்துறையினரிடம் இது எதற்காக நடத்தப்பட்டது என்று விசாரிக்கும் போது இருவரையும் கைது செய்திருக்கிறார்கள்.

இருவரும் கைது செய்யப்படும் போது ஆரோக்கியமாக இருந்திருக்கிறார்கள். ஆனால், நீதிமன்றத்திற்கு வரும் போது காலித் நடக்க முடியாமல் காலில் கட்டுடனும், இஸ்ரத் ஜஹான் கையில் பேண்டேஜுடனும் அழைத்து வரப்பட்டுள்ளனர். அவர்கள் இருவரையும் காவல்துறைக்குள் சித்ரவதை செய்ததாக குடும்பத்தார்கள் குறிப்பிடுகிறார்கள்.

காவல்துறை மேற்கொண்ட நடவடிக்கையை நேரில் பார்த்த ஃபர்சானா சொல்லும் போது, மதியம் தான் இச்சம்பவம் நடந்தது. நாங்கள் மொத்தம் 10 பெண்களுக்குள் தான் இந்த போராட்டத்தில் அமர்ந்திருந்தோம். அப்போது காவல்துறையினர் அதிரடியாக உள்நுழைந்து எங்களை போராடும் இடத்தை விட்டு இழுத்து போட்டார்கள். தேவையே இல்லாமல் புகை குண்டுகளை போட்டார்கள். துப்பாக்கி வெடிச்சத்தமும் கேட்டது. காவல்துறையினர் இந்த அடக்குமுறையை மேற்கொள்ளும் போது இஸ்ரத் ஜகானும், காலித் இருவரும் அங்கேயே இல்லை. ஆனால், காவலர்கள் பொய்யான வழக்கில் கைது செய்திருக்கிறார்கள் என்று கூறினார்.

## சிசிடிவியை உடைத்து கலவரத்தை நிகழ்த்திய டெல்லி காவல்துறையினர்

டெல்லியின் வடகிழக்கு பகுதியில் இரண்டு நாட்களாக பெரிய அளவில் வன்முறை நிகழ்த்தப்பட்டது. இதில் கலவரக்காகரர்களும், காவலர்களும் நிகழ்த்தும் அநியாயங்கள் வெளியே தெரியக் கூடாதென காவல் அதிகாரிகள் வீதிகளில் வைக்கப்பட்டிருந்த சிசிடிவி கேமராக்களையும் அடித்து நொறுக்கி இருக்கிறார்கள்.

வீதிகளில் வைக்கப்பட்டது மட்டுமல்ல, திருடர்களிடமிருந்து பாதுகாப்பாக இருப்பதற்கு

கடைகளில், வீடுகளில் மாட்டியிருந்த சிசிடிவிக்களையும் காவல்துறையினர் அடித்து நொறுக்கியிருக்கிறார்கள்.

இதற்கு முன்பாக உத்திரபிரதேசத்திலும் இத்தகைய வன்முறை கட்டவிழ்த்து விட்ட போதும் காவலர்கள் முதலில் சிசிடிவியை உடைத்து மதரசாக்களில் புகுந்து அடித்தார்கள். அதே பாணியை டெல்லியிலும் செய்திருக் கிறார்கள்.

காவல்துறையினரின் கலவரக்காரர்களுக்கு



A video clip purportedly shows Delhi Police personnel allegedly breaking a CCTV camera near the Khureji protest. (I

ஆதரவான செயல்கள் அனைத்தும் வீடியோக் களாக சமூக வலைத்தளங்களில் நிரம்பி இருக்கிறது.

## இந்து பத்திரிக்கையாளரை காப்பாற்றிய முஸ்லிம்கள்

சுசில் மனாவ் என்ற பத்திரிக்கையாளர் ஜான்சவுக் என்ற பத்திரிக்கையில் பணி புகிறார். இந்த பத்திரிக்கையின் முகநூல் பக்கத்திற்காக பைக்கில் அவரது நண்பர் அவாதுல் ஆசாத் ஓட்ட பின்புறம் அமர்ந்தவாறு வீடியோ எடுத்துள்ளார்.

இவரை மடக்கி பிடித்த கும்பல் வீடியோ ஏன் எடுக்கிறீர்கள் என கேட்டதற்கு, தன்னை பத்திரிக்கையாளர் என்று அடையாளப்படுத்தி யுள்ளார். அதற்குள் அவர்களை 20-25 நபர்கள் சுற்றி விட்டனர். ஒவ்வொருவரின் கையிலும் கத்தி, ராடு போன்ற பயங்கரமான ஆயுதங்கள் இருந்தன. அதில் ஐந்து பேர் உள்நாட்டு துப்பாக்கியை கையில் வைத்திருந்தனர்.

முதலில் எங்களை இரும்பு ராடை கொண்டு தாக்க தொடங்கினார்கள். பிறகு, அதில் ஒருவன் துப்பாக்கியை என் வயிற்றுபகுதியில் வைத்து மிரட்டினான். நான் ஒரு இந்து, நான் ஒரு பிராமணன் என்று சொல்லியும் அவர்கள் விடவில்லை. பிறகு அனுமான் சாலிசா மந்திரத்தை பாட சொன்னார்கள். அதை சொன்ன பிறகும் எங்களை விடவில்லை. எங்கள் பேண்டை அவுக்க சொன்னார்கள். நாங்கள் சுன்னத் செய்திருக்கிறோமா என்று பார்ப்பதற்காக அப்படி சொன்னார்கள். அவர்கள் நாங்கள் சொல்வதை நம்ப வில்லை. நாங்கள் இருவரும் உண்மையில் இந்து தானா என்று சோதனை செய்து கொண்டிருந்தார்கள்.

அந்த நேரத்தில் சில காவலர் கள் அங்கு வர அவர்களிடம் நாங்கள் முறையிட்டோம். அதன் பிறகு பத்திரிக்கையாளர் களை விட்டு விடுங்கள் என காவலர்கள் கூற நாங்கள் அந்த கும்பலிடமிருந்து தப்பித்தோம். காவலர்கள், முதலில் இங்கிருந்து தப்பி செல்லுங்கள் என்றார்கள்.

நாங்கள் ரத்தம் வடிய வடிய அருகிலிருக்கும் பாபர்புரா பகுதிக்கு சென்று விட்டோம். அது முஸ்லிம்கள் அதிகமாக இருக்கும் பகுதி. அங்கே இருந்தவர்களிடம் எங்கள் பெயர்களை சொல்லி பத்திரிகையாளர்கள் என்று கூறினோம். அங்கிருந்த முஸ்லிம்கள் எங்களை ஒரு சிறிய மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சை கொடுத்தார்கள்.

எங்களிடமிருந்த பணத்தையெல்லாம் அந்த இந்துத்துவ கும்பல் திருடிவிட்டது. எங்களிடம் சுத்தமாக பணம் இல்லை. ஆனால், சிகிச்சை கொடுத்தவர்கள் பணம் கேட்கவில்லை.

ஒரு முஸ்லிம் மெக்கானிக் ஒருவர் எங்களை வீட்டுக்கு கொண்டு வந்து சேர்த்தார். இந்த

*சம்பவத்திற்கு பிறகு என் வேலையை நான் விட்டு விட்டேன் என்றார்.*
(TELEGRAPH 27.02.2020)

## கலவரம் நடந்த தொகுதிகள் அனைத்தும் பாஜக வென்ற தொகுதிகள்

டெல்லியின் வடகிழக்கு பகுதியில் தான் பெரும் கலவரம் நடைபெற்றது.



டெல்லி கலவரம் :
டெல்லியை விட்டு வெளியேறும் குழந்தை

அதிலும் கலவரம் நடந்த பகுதிகளான ஜாஃப்ராத், மௌஜ்பூர், கொண்டா, சாந்த்பாக், பாபர்புர், கோகுல்புரி, யமுனா விஹார் மற்றும் பஹஜன் பூரா முழுவதும் பாஜக வென்ற தொகுதிகளுக்குள் வருபவையே

பாஜக வென்ற இத்தொகுதிகள் முழுக்க பாஜகவினர் டெல்லி தேர்தலுக்காக மேடை அமைத்து வெறுப்பு பேச்சுக்களை பேசிய இடங்கள்.

பாஜகவினரின் வெறுப்பு பேச்சே கலவரமாக உருவெடுத்திருக்கிறது.

## பிணவறைகளில் காத்திருக்கும் முஸ்லிம்கள்

*டெல்லி கவரத்தின்போது நூற்றுக்கணக் கான முஸ்லிம் இளைஞர்கள் காணாமல் போய் விட்டார்கள். காணாமற்போனவர்களின் பிணங் கள் சாக்கடைகளில் கண்டுபிடிக்கப்பட்டன.*

*இன்னும் பல பிணங்கள் பல்வேறு மருத்துவ மனைகளின் பிணவறையில் இருக்கின்றன. தங்கள் அன்பு சகோதரன் அல்லது மகன் பிணமாக பிணவறையில் இருக்கின்றான் என்பதை கண்டறிந்திட தங்கள் உறவுகளின் போட்டோக்களுடன் - புகைப்படங்களுடன் - பிணவறைகளில் காத்து நின்றார்கள் முஸ்லிம்கள்.*
The Hindu English 2/3/2020

*இப்படி மருத்துவ மனைகளின் பிண வறையில் காத்து நிற்கும் அவலத்தை மரணத்தை விட மோசமானது என ஷமீனா என்ற முஸ்லிம் பெண்மணி கூறியிருக்கின்றார். இவர் 25 வயதான தன் சகோதரனை இந்தக் கலவரத்தின் போது இழந் துள்ளார்.*



*சல்மான் ஒர் கூலித் தொழிலாளி, அவன் பெப்ருவரி 26ஆம் நாள் கேகல் பூரி என்ற இடத்திற்குச் சென்றுள்ளான். அவன் ஒரு செல்போனை வைத்திருந்தான். ஆனால் இப்போது அது அணைத்து வைக்கப்பட்டுள்ள தாகக் கூறப்படுகின்றது. அவன் என்ன ஆனான் என்பது தெரியவில்லை. அதனால் அவன் புகைப்படத்துடன் ஒவ்வொரு மருத்துவமனை யிலும் உள்ள பிணவறைகளில் தேடிக் கொண்டி ருக்கின்றாள். அவனுடைய சகோதரி.* TH. 2/3/20









### ஷாபாஸ் - முஹம்மத்

ஷாபாஸ்-இன் மகன் முஹம்மத். (ஆண்) வெல்டராக வேலை செய்து வந்தான். வெல்டிங் வேலை செய்து கொண்டிருந்தபோது அவனுடைய கண்கள் காயம்பட்டு விட்டன. அவன் டெல்லியிலுள்ள குருஞானக் கல்லூரி கண் மருத்துவ மனைக்குச் சென்றிருந்தான், கண் சிகிச்சைக்காக, அவன் திரும்பவே இல்லை. அவன் பிணமா? அல்லது உயிருடன் இருக்கின்றானா? என்பதைச் சொல்லுங்கள் என மன்றாடி வருகின்றார் ஷாபாஷ். எந்தப் பதிலும் கிடைக்காததால், இருக்கும் பிணங்களின் மரபணு சோதனைகளைச் செய்து பாருங்கள் எனக் கேட்டுள்ளார் ஷாபாஷ். (IBID)

### நான்கு பிணங்கள்

இன்னும் நான்கு முஸ்லிம்களின் பிணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனால் டெல்லிக் காவல்துறையினர் அவற்றை கலவரத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கையில் சேர்க்க வேண்டாம் எனக் கூறியுள்ளார். இதையும் சேர்த்தால் அதிகாரப்பூர்வமாக டெல்லிக் கலவரத்தில் இறந்தவர்கள் (47). பல சமுதாய அமைப்புகளின் ஒரே வேலை, பிணங்களின் அடையாளங்களைக் கண்டுபிடித்து உறவினர்களிடம் ஒப்படைப்பது தான்.

### பஞ்ரங்தள் நயவஞ்சகம்

டெல்லியில் கலவரம் நடப்பதை அறிந்த பலர் தங்கள் இல்லங்களிலிருந்து வெளியேறினார்கள். அவர்களை நீங்கள் போக வேண்டாம் ஆபத்துக்கள் வந்தால் நாங்கள் பாதுகாப்போம், எனக்கூறியுள்ளார்கள். ஆனால் உத்திரப் பிரதேசத்திலிருந்து தருவிக்கப்பட்ட இந்துத்துவ தீவிரவாதிகள் களத்தில் வந்தபோது இவர்களும் அவர்களுடன் இணைந்து கொலைகளைச் செய்தார்கள்.

- டெல்லியிலிருந்து நமது துணை ஆசிரியர்

2002-ஆம் ஆண்டில் இதே பாசிஸ்ட்டுகள் குஜராத்-இல் பெப்ருவரி திங்கள் 27-ஆம் நாள் தொடங்கி முஸ்லிம்களைக் கொத்துக் கொத்தாக கொலை செய்தார்கள். முஸ்லிம் குடியிருப்புகளில் ஒவ்வொரு வீட்டைப் பற்றியும் தகவல்களைக் கையில் வைத்திருந்தார்கள்.

அவர்கள் பயங்கர ஆயுதங்களுடன் கூட்டம் கூட்டமாக வருவதைப் பார்த்த முஸ்லிம்கள் பீதி வயப்பட்டார்கள். செய்வதறியாது செத்து மடிந்தார்கள். அதிலும் சில முஸ்லிம் பெண்கள், இந்துத்துவ தீவிரவாதிகளை எதிர்கொண்டார்கள், வெற்றி கண்டார்கள்.

ஆம், அந்த வீரமங்கையின் முத்தான சில எடுத்துக் காட்டுகளை இங்கே தருகின்றோம்...

சந்திரிகா என்ற மலையாள பத்திரிகையி லிருந்து நாம் நிறுவி நடத்தி வந்த விடியல் வெள்ளி மாத இதழில் 2002-ஆம் ஆண்டு வெளியிட்டது.

### வீர சுபைதாவும் ஃபாசிஸ்ட்டுகளும்

அந்தச் சகோதரியின் பெயர் சுபைதா மன்சூரா. வயது 35, குஜராத்திலுள்ள அஹமதாபாத் பகுதியில் மண்டிஜவ்கரின் என்ற இடத்தில் வாழ்ந்து வந்தாள். இது பெரும் பான்மையாக இந்துக்கள் வாழும் பகுதி.

28-2-2002 அன்று காலை முதலே முஸ்லிம் களைக் கொலை செய்யும் படலம் சூடு பிடித்திருக்கிறது.

சுமார் நூறு பேர் கொண்ட ஒரு கொலை வெறிக்கூட்டம் முஸ்லிம்களின் முகவரியோடு மோப்பம் பிடித்து வந்து கொண்டிருந்தது.

சுபைதா மன்சூராவையும் அவள் குடும்பத் தைச் சார்ந்த ஏழு பேரையும் மரணம் தேடி வந்துக் கொண்டிருந்தது.

சுபைதாவை நிச்சயமாக அவர்கள் கற்பழித்த பின்னரே கொலை செய்வார்கள். ஏனெனில் முஸ்லிம் பெண்களை இந்து பயங்கரவாதிகள் இப்படித்தான் கொலை செய்கின்றார்கள் என்ற செய்தி ஏற்கெனவே சுபைதாவை வந்தடைந்துவிட்டது.



# அந்தப் பெண்களாக நீங்கள் மாறினால்..!

ஆமாம்... அதே சுபைதா மன்சூராவின் வீடு நோக்கி அவர்கள் வந்து கொண்டிருக் கின்றார்கள். இல்லை, மரணம் அவர்களின் வடிவில் வந்துக்கொண்டிருந்தது. அத்தோடு அவமானமும் வீடு தேடி முகவரியோடு வந்து கொண்டிருந்தது.

அக்கம் பக்கத்தில் உள்ளவர்களெல்லாம் மன்சூராவின் மரணத்தையும் அவள் மானபங் கப்படுத்தப்படுவதையும் வேடிக்கைப் பார்க்க குழுமிவிட்டார்கள். தானும் தன்னைச் சார்ந்த ஏழு பேரும் காப்பாற்றப்படுவோம் என்ற எண்ணம் அவளுக்கில்லை.

மரணம், அவமானம் இவை தன்னை நெருங்கிவரும் நிலையிலும் மதி மயங்க வில்லை, நிலை குலையவில்லை சுபைதா மன்சூரா.

ஃபாசிஸ்ட்டுகள் குஜராத் இனப்படு கொலையின் போது பயன்படுத்திய கொடுமை யான ஆயுதம் கேஸ் சிலிண்டர்கள்.

சுபைதாவும் அதே கேஸ் சிலிண்டரை தனது ஆயுதமாகப் பயன்படுத்தினாள்.

ஃபாசிஸ்ட்டுகள் அவருடைய வீட்டை நெருங்கியபோது அவள் தன் வீட்டிலிருந்த கேஸ் சிலிண்டரை இழுத்து வந்து வீட்டின் முன்னுள்ள வராண்டா என்ற சிறு முற்றத்தில் வைத்தாள். கேஸை திறந்துவிட்டாள். கையில் தீப்பெட்டியை எடுத்து கொண்டாள். அந்த ஃபாசிஸ்ட்டுகளை நோக்கி இப்படிக் கூறினாள். "உயிரின் மேல் ஆசையிருந்தால் ஓடி விடுங்கள். இல்லையேல் விரைந்து வெளிவந்து கொண்டி ருக்கும் கேஸை நெருப்பாக எரியச் செய்வேன்.

நானும் என்னோடு சேர்ந்த ஏழு பேரும் மரணிப்போம் என்பது உண்மையே. அதற்கு நாங்கள் எப்போதோ தயாராகிவிட்டோம். அத்தோடு உங்களையும் கூண்டோடு அனுப்பி விடுவோம்."

அவ்வளவுதான். அந்த ஃபாசிஸ்ட்டுகள் பின்னங்களால் பிடரியில் பட ஓடினார்கள், ஓடினார்கள், ஓடிக்கொண்டே இருந்தார்கள். மரணத்தின் ஓலம் அவர்களை துரத்திக் கொண்டே இருந்தது. வேடிக்கைப் பார்க்க வந்தவர்கள் மாயமாய் மறைந்தார்கள்.

பின்னர் சுபைதா மன்சூரா தன் குடும்பத் தவர்கள் ஏழு பேரையும் அழைத்துக்கொண்டு சொந்த பந்தங்கள் இருக்கும் இடம் தேடி நகர்ந்தார். அப்போது அகதிகள் முகாம்களை நோக்கி அனைத்து முஸ்லிம்களும் பயண மாகிக் கொண்டிருந்தார்கள்.

## மைமூனாவைத் தேடிவந்த மரணம்

அதே அகமதாபாத்!

மைமூனா தன் வீட்டில் தனது இரண்டு குழந்தைகளுடன் இருந்து கொண்டிருந்தாள். துணையாக யாருமில்லை. தனித்தே இருந்தாள்.

சுமார் 23 சங்கப்பரிவாரத்தார் அவளது மானத்தைப் பறிக்கவும், அதன்பின்னர் மரணத்தைப் பரிசாகத் தரவும் அவள் இல்லம் நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

முதல் மாடியில் நின்று அவர்கள் வருவதைப் பார்த்தாள். அஞ்சவில்லை மைமூனா. ஒரு வினாடியில் தன்னை மரணத்திற்குத் தயாராக்கிக் கொண்டாள். தன் அன்பு குழந்தைகளையும் அல்லாஹ்வைச் சந்திக்கத் தயாராக்கிக் கொண்டாள். தாயும் சேய்களும் மரணத்தை நோக்கி நகர்ந்துக் கொண்டிருந்தார்கள்.

பாய்ந்துவரும் ஃபாசிஸ்ட்டுகளிடம் கையெடுத்து கரம் கூப்பி மடிப்பிச்சை ஏந்தவில்லை மைமூனா. அவர்கள் தன் இல்லம் நோக்கி நகர்ந்து வருவதை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தபால்காரன் முகவரி தேடி கடிதம் தர வருவதைப்போல் அவர்கள் வந்து கொண்டி ருந்தார்கள் அவளது முகவரித் தேடி.

அவளது இல்லம் நெருங்கியபோது அவள் தயாராக வைத்திருந்த மிளகாய்ப் பொடியை அவர்களை நோக்கி வீசினாள்.

மைமூனாவின் அழகையும், உயிரையும் குறிவைத்து வந்த அவர்களுக்கு மைமூனாவின் குறி தெரியவில்லை.

எதிர்பாராமல் தங்களைத் தாக்கிய மிளகாய்ப் பொடியின் எரிச்சலை தாங்க முடியவில்லை. தங்கள் வயிற்றெரிச்சலை அசிங்கமான வார்த்தைகளாக வாந்தி எடுத்தார்கள். "திரும்பி வருவோம், உன்னை அதம் பண்ணுவோம்" என மிரட்டிவிட்டு ஓடிவிட்டார்கள்.

மைமூனா அகதிகள் முகாம் நோக்கி நகர்ந்தாள்.

## வீர சகோதரி சவ்தா ஓர் விசித்திரப் பெண்

அதே அகமதாபாத், மணிநகரில் குடியிருக் கின்றாள். ஃபாசிச பரிவாரத்தினர் தங்கள்

பகட்டான வாளைச் சுழற்றிக் கொண்டு அவளை நெருங்கி வந்தார்கள். வீட்டின் முன் நின்ற காரைத் தவிடு பொடியாக்கினார்கள்.

அவள் வீட்டை நெருங்கும் முன் எதிர்ப் பட்ட இரண்டு முஸ்லிம்களையும் கண்ட துண்டமாக வெட்டிப் போட்டார்கள். நெருப் பிட்டுக் கொளுத்தினார்கள். சவ்தா அதைக் கண்டாள். குலை நடுங்கினாள். அவர்கள் அடுத்த இலக்காக அவளை நோக்கியே வந்து கொண்டி ருந்தார்கள்.

அவளுடைய கணவன் ஒரு பரபரப்பான வியாபாரி. அவன் பம்பாய் சென்றிருந்தான். கூட்டமான தொகுப்பு வீடுகளில், பிளாட்டில் ஒரு விசாலமான வீட்டில்தான் குடியிருந்தாள். ஃபாசிஸ பரிவார கொலை யாளிகள் தன்னை நோக்கி வருவதைக் கண்ட அவள், அக்கம் பக்கத்து வீட்டாரிடம் "உங்களவர்கள் வருகின்றார்கள். அவர்களைத் தடுங்கள்" எனக் கோரினாள். கடைசி வரை கத்திப் பார்த்தாள். பயனேது மில்லை.

ஒரு முடிவுக்கு வந்தாள்

நாம் மட்டும் மரணிக்க வேண்டாம், வருபவர்களையும் அந்த ஃபாசிஸ்டுகளையும், இங்கே இறப்புகளைத் வேடிக்கைப் பார்ப் பவர்களையும் அழைத்துச் செல்லலாம். மரண (மறுமை) வாழ்க்கைக்கு என முடிவு கட்டினாள்.

தன் வீட்டில் கேஸ் தீர்ந்து போனால் பயன்படுத்துவதற்காக வாங்கி வைத்திருந்த மண்ணெண்ணையை எடுத்தாள். முடிந்த இடங்களிளெல்லாம் தெளித்தாள். வீட்டில் கிடந்த மரத்தில் செய்த பொருட்கள், பஞ்சு மெத்தைகள், துணிமணிகள் எல்லாவற்றையும் கொண்டுவந்து போட்டு அவற்றிலும் அதே மண்ணெண்ணையை ஊற்றினாள்.

எதிரே வரும் ஃபாசிஸ கொலையாளிகள் அவளையும் கொன்று எரிக்கத்தானே செய் வார்கள். முந்திக்கொள்வதாக முடிவெடுத்தாள் சவ்தா. எல்லோரும் ஓடோடி வந்தார்கள். என்னவென்று கேட்டார்கள். என்ன இப்படிச் செய்கின்றீர்கள் எனக் கேட்டார்கள்.

மரணத்தை வரவேற்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றேன் என்றாள். "என்னோடு வர எல்லோரும் தயாராகுங்கள்" என்றாள்.

திரண்டவர்கள் ஓடிப்போய் அங்கே வந்த ஃபாஸிட்டுகளிடம் முறையிட்டார்கள். அந்த ஃபாசிஸ்ட்டுகள் விடுவதாய் இல்லை. இறுதியில் அந்த ஃபாசிஸ பரிவாரங்களிடம் அந்தப் பெண்கள் இப்படிச் சொன்னார்கள். "நீங்கள் மேலே சென்று கீழே வருவதற்குள் நிங்கள் எரிந்து போவீர்கள்."

அவ்வளவுதான், ஒரே ஓட்டமாக ஓடினார்கள். அந்த ஃபாசிஸ்ட்டுகள், தங்கள் உயிருக்கு மேல் அவ்வளவு பயம் அவர்களுக்கு.!



# சிஏஏவுக்கு எதிரான போராட்டத்தில் காவல்துறையினரின் அராஜகம்

இந்தியா முழுக்க சிஏஏவுக்கு எதிரான போராட்டம் அதிகரித்துள்ள நிலையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் காவல்துறையினர் ஒவ்வொரு விதமாக தன் அராஜகத்தை செய்து வருகிறார்கள். அதிலும் பாஜக ஆளும் மாநிலங்களில் இவர்கள் நிகழ்த்திய அராஜகம் மிக கொடூரமானது.

## தேசத்துரோக வழக்கு

சிஏஏ போராட்டத்தை ஒருங்கிணைப்பவர்கள் மீதும், முன்னெடுத்து செல்பவர்கள் மீதும் தேசத்துரோக வழக்கு பதிவு செய்யப்படுகிறது. இந்த வழக்கின் கீழ் கைது செய்யப்பட்டால் எந்த விசாரணையும் இன்றி 12 மாதங்கள் சிறையில் வைக்கலாம். அதற்காகவே இந்த வழக்கில் கைது செய்யப்படுகிறார்கள்.

## JNU மாணவர் மீது தேசத்துரோக வழக்கு

JNU பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் படித்து வரும் சர்ஜித் இஸ்லாம் மீது தேசத்துரோக வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. சர்ஜித் பேசிய காணொளியின் சிறிய பகுதியை மட்டும் காட்டி இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

அஸ்ஸாமையும் மற்ற மாநிலங்களையும் சேர்க்கும் தேசிய நெடுஞ்சாலையை மறித்து அற வழியில் நம் உரிமைக்காக போராடுவோம் என்று கூறிய காணொளியை அஸ்ஸாமை விட்டு இந்தியாவை தனிமையாக்குவோம் என்று கூறிய தாக திரித்து சங்கிகள் செய்யும் அதே வேலையை காவல்துறையினரும் செய்திருக்கிறார்கள். (scoll 29.01.2020)

## 6ம் வகுப்பு குழந்தைகள் மீது தேசத்துரோக வழக்கு

கர்நாடகாவில் பிதார் நகரில் சாஹின் கல்வி நிறுவனம் உள்ளது. இந்த கல்வி நிறுவனத்தில் ஆறாம் வகுப்பு குழந்தைகள் சார்பாக சிஏஏ பற்றி ஒரு விழிப்புணர்வு நாடகம் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்த நாடகத்தின் இறுதியில் பேசிய 6ம் வகுப்பு மாணவி “ யாராவது என் குடியுரிமையை நிரூபிக்க சொல்லி என் ஆவணங்களை கேட்டு வந்தால் என் காலணியால் அவர்களை அடிப்பேன்” என்று பேசியிருக்கிறார்.

இந்த ஒரு பகுதியை மட்டும் வைத்துக் கொண்டு காவல்துறையினர், “மோடிக்கு எதிராக இந்த மாணவர்கள் இப்படி பேசியிருக்கிறார்கள்” என்று வழக்கு பதிவு செய்திருக்கிறார்கள். ஆனால், வீடியோவிலேயே அப்பெண்கள் யாரையும் குறிப்பிடாமல் பொதுவாகவே பேசியிருப்பது தெளிவாக தெரிகிறது.

இதற்காக தினந்தோறும் கல்வி நிலையத் துக்கு விசாரணை



என்ற பெயரில் வந்து மிரட்டுகிறார்கள். இக் குழந்தைகள் மீது தேசத் துரோக வழக்கும், பள்ளியின் மேலாளர் மற்றும் குழந்தையின் பெற்றோர் ஒருவரையும் கைது செய்திருக்கிறது காவல்துறை.

குழந்தைகளை காவல் நிலையத்திற்கு அழைத்து செல்ல கல்வி நிலையம் எதிர்ப்பு தெரிவித்ததால் தினமும் கல்வி நிலையத்திற்கு விசாரணை என்ற பெயரில் வந்து மிரட்டுகிறார்கள்.

6ம் வகுப்பு படிக்கும் குழந்தைகளை கூட கொடுமைப்படுத்தும் ஒரு பாசிச அரசு ஹிட்லருடைய அரசவையில் தான் இருக்கும். (The Wire 30.01.2020)

## உத்திரபிரதேச காவல்துறையின் அராஜகம்

இந்தியாவில் ஒரு மிருக ஆட்சி நடைபெறுகிறது என்று சொன்னால் அது தற்போது உபியில் நடக்கும் யோகியின் ஆட்சி தான். மக்களை கொல்வதிலும், சித்ரவதை செய்வதிலும் மோடியை விட மேலானவராக இருக்கிறார் யோகி.

அவரது மாநிலத்தில் மட்டும் 20க்கும் அதிகமான முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக் கொல்லபட்டிருக்கின்றனர். முஸ்லிம் குடும்பங்கள் சின்னாபின்ன படுத்தப்படுகின்றன. சிஏஏவுக்கு எதிர்த்து பேசினால் தேசத்துரோக வழக்கு, ஆசாதி என கூறினால் தேசத்துரோக வழக்கு என ஒரு இந்து ராஷ்டிராவை நடத்தி வருகிறார்.

## நாங்கள் தான் சுட்டோம் : காவல்துறை

உத்திரபிரதேச பிஜ்நோர் நகரில் வெள்ளிக் கிழமை தொழுகைக்கு பிறகு காவல்துறை பெரும் கலவரத்தை நிகழ்த்தியது. இதில் இரு இளைஞர்கள் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்தை Caravan பத்திரிக்கை ஆய்வு செய்து அறிக்கையாக வெளியிட்டிருக்கிறது.

காவல்துறையின் இந்த அத்துமீறலுக்கு தலைமை தாங்கியவர் கண்காணிப்பாளர் சஞ்சீவ் தியாகி. இவரின் உத்தரவின் பெயரிலேயே காவல்துறை இந்த வெறியாட்டத்தை நிகழ்த்தியது.

சஞ்சீவ் காவலர்களிடம் பேசிய ஆடியோ ஒன்று சமூக வலைத்தளங்களில் வேகமாக பரவியது. அதில், போராட்டத்தில் ஈடுபடுவர்களின் எலும்பை முறியுங்கள் என்றும் இது முதல்வர் யோகியின் நேரடி உத்தரவு என்றும் சஞ்சீவ் பேசுகிறார். ஆனால் இதை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்று பத்திரிக்கைகளிடம் கூறிவிட்டார் சஞ்சீவ்.

இந்த கலவரத்தில் 21 வயதான அனஸ் மற்றும் 20 வயதான சுலைமான் என இருவர் கொல்லப்பட்டிருக்கிறார். இதில் சுலைமானை தாங்கள் தான் கொன்றோம் என சஞ்சீவே ஒத்துக்கொண்டார்.



சுலைமான் துப்பாக்கியால் கான்ஸ்டபிள் ஒருவரை சுட்டதால் தற்காப்பு நடவடிக்கைக் காகவே சுட்டுக்கொன்றார் என கூறினார். ஆனால், பிஜ்னோர் நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்த பின் இப்படி கூறியது, "காவல் துறையினர் யாருக்கும் துப்பாக்கி காயம் ஏற்படவில்லை. அதே போல் கல் எறிதலில் பலத்த காயம் அடைந்ததாகவும் எந்த ஆதாரமும் தரப்படவில்லை."

இல்லாத துப்பாக்கி, இல்லாத துப்பாக்கிச் சூட்டை காரணமாக வைத்து சுலைமான் சுட்டுக்கொல்லப்பட்டார். சரி, அப்படி தற்காப் பிற்காகவே சுட வேண்டும் என்றாலும் காலில்

சுடலாம் ஏன் நெஞ்சில் குறி பார்த்து சுட வேண்டும் என்று பத்திரிக்கையாளர் கேட்டதற்கு கண்காணிப்பாளர் சஞ்சீவிடம் பதில் இல்லை.

சுலைமான் சிவில் சர்வீஸ் தேர்வுக்கு தயாராகிக்கொண்டிருந்த மாணவர். ஆனால் இன்று காவல்துறையின் குண்டுகளுக்கு அநியாயமாக பலி கொடுக்கப்பட்டிருக்கிறார்.

21 வயதான அனஸ் காவல்துறையால் தான் சுடப்பட்டார் என நேரில் பார்த்த அப் பகுதி மக்கள் கூறுகிறார்கள். அதிலும் கொடுமை என்னவென்றால், காவல்துறை அனஸை சுடு வதற்கு அரசு துப்பாக்கியை பயன்படுத்த வில்லை. சாதாரணமாக அரசு காவலர்களுக்கு தரும் துப்பாக்கிகளில் 9mm குண்டுகள் தான் இருக்கும். ஆனால், அனஸ் 32mm உள்ள அதிசக்தி வாய்ந்த புல்லட்டினால் சுடப்பட்டிருக்கிறார். அனஸை காவல்துறையினர் தான் சுட்டனர் என பார்த்தவர்கள் பத்திரிக்கைக்கு கூறுகிறார்கள். ஆனால் இதற்கு காவல்துறை தரப்பில் எந்த பதிலும் இல்லை.

இரண்டு இளைஞர்களை இழந்த குடும்பத்தினரும் தன் பிள்ளைகளின் உயிர் பறிக்கப்பட்டது எதற்கென கேட்க கூட காவல்நிலையத்தை அணுகவில்லை. கொன்றதே காவலர்கள் எனும் போது அவர்களிடம் சென்று என்ன நியாயத்தை கேட்டு விட முடியும் என்றும் இனியாவது தன் குடும்பத்தில் இருப்பவர்கள் மிஞ்ச வேண்டும் என்ற பயத்தாலும் முடங்கி கிடக்கிறார்கள். (The caravan 06.01.2020)

## கான்பூர் கலவரம்

உத்திரபிரதேச கான்பூர் நகரில் வெள்ளிக் கிழமை தொழுகைக்கு பிறகு அமைதியாக பள்ளிவாசலை விட்டு வெளிவந்த மக்களை காவல்துறையினர் மிக கொடூரமாக தாக்கி யிருக்கிறார்கள். இதில் நான்கு அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட நான்கு பெயரில் ஒரு முஸ்லிம் இளைஞனின் குடும்பம் உடலை மருத்துவமனைக்கே கொண்டு வராமல் இறுதி சடங்கையாவது அமைதியாக நடத்த வேண்டு மென கொண்டு சென்று விட்டனர்.

ஆனால் மற்ற மூவர் காவலர்களால் சுடப்பட்ட பிறகு மருத்துவமனைக்கு எடுத்து சென்று இறுதி கட்டத்தில் கூட சிகிச்சை அளிக்காமல் கொல்லப்பட்டனர்.

23 வயதான அல்தாப் ஆலம் தொழுகை முடிந்து வீட்டுக்கு போகும் போது நெஞ்சில் சுடப்பட்டார். 30 வயதான ராயிஸ் கான் தொழுகை முடிந்து வேலைக்கு செல்லும் போது வயிற்றில் சுடப்பட்டார். 25 வயதான முஹம்மது சைஃப் தொழுகை முடித்து வீட்டுக்கு செல்லும் போது சுடப்பட்டார்.

ரத்த வெள்ளத்தில் கிடந்த மூவரையும் அருகிலிருக்கும் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருக்கிறார்கள். ஆனால், அவர்களை தீவிர சிகிச்சை பிரிவில் சேர்த்ததோடு சரி அவர்களுக்கு ஒரு சிகிச்சை கூட அளிக்கவில்லை என்று கூறுகிறார்கள் மூவரின் குடும்பத்தாரும்.

இதில் கொல்லப்பட்ட சைஃபின் சகோதரன் ஜாகி, தன் சகோதரனின் மூச்சு நின்றுவிட்டதையும் உடல் குளிராக இருப்பதையும் பார்த்து தன் சகோதரன் இறந்து விட்டான் என கதற ஜாகியை வெளியேற்றி மரணித்ததை கூட சொல்லாமல் காக்க விட்டார்கள். பத்திரிக்கை செய்தியை பார்த்து தான் குடும்பத்தாருக்கு அவர்கள் இறந்து விட்டார்கள் என்றே தெரிந்திருக்கிறது.

இவர்களுடன் காவல்துறை சுட்டதால் 12 பேர் குண்டு காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

உயிரிழந்த ஆல்மின் அம்மா சொல்லும் போது, என் மகனை நான் பார்க்கும் பொது ரத்த வெள்ளத்தில் கிடந்தான். என்னிடம், "அம்மா காவல்துறையினர் நம்மை ஏன் சுடுகிறார்கள், நாம் அவர்களுக்கு எதிராக ஒன்றுமே செய்யவில்லையே என்றான்" என பேசினான் என புலம்புகிறார்.

அப்பகுதியை சேர்ந்த சகீல் அப்பா சொல் கிறார், "முஸ்லிம்களை ஏன் இப்படி கொல்ல துடிக்கிறார்கள்?.. அவர்கள் சொல்வதை எல்லாம் முஸ்லிம்கள் தான் கேட்டுக்கொள்கிறார்களே!.. மாட்டுக்கறி சாப்பிடக்கூடாது என்றார்கள் சாப்பிடுவதை நிறுத்தி விட்டோம். பாபரி மஸ்ஜித் வழக்கில் நீதிமன்றம் தவறான தீர்ப்பு

வழங்கியது. அதனையும் ஏற்றுக்கொள்ள சொன்னார்கள் ஏற்றுக் கொண்டோம். இன்னும் என்ன தான் செய்வது?..."



இதனை நேரடி கள ஆய்வு செய்த caravan பத்திரிக்கையாளர் சொல்கிறார்,

"நான் நேரடியாக பாதிக்கப்பட்டவர்களை சென்று பார்த்தேன். பல முஸ்லிம் வீடுகள், கடைகள் நொறுக்கப்பட்டிருக்கிறது. வழியில் இளைஞர்கள் காவல்துறை தாக்கியதாக பல வீடியோக்களை காட்டினார்கள். அத்தனையும் உண்மையான வீடியோக்கள். அதில் காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தியதும் இருக்கிறது.

காவல்துறையால் பாதிக்கப்பட்ட ஒரு 17 வயது சிறுவனை சென்று சந்தித்தேன். ஒருவரின் உதவியுடன் எழுந்து அமர்ந்த அந்த சிறுவனின் உடலெல்லாம் காயம். முகம், கால்கள் முழுக்க வீக்கம். தன்னுடன் இன்னும் பல சிறுவர்களை காவல்நிலையம் இழுத்து சென்று கொடூரமாக தாக்கியதாகவும், ஜெய் ஸ்ரீ ராம் சொல்லச் சொல்லி தாக்கியதாகவும் கூறினான்.

அந்த சிறுவனின் தாயார் தன் பையனின் நிலை அறிய காவல்நிலையம் சென்றிருக்கிறார். அங்கே காவலர்கள் மிகவும் ஆபாசமாக பேசியிருக்கிறார்கள். அந்த தாயிடம் இப்படி கூறினார்கள், " நீங்கள்(முஸ்லிம் பெண்கள்) 50 பிள்ளைகளை பெற்றுக்கொள்கிறீர்கள். அந்த காமவெறியை அடக்க முடியவில்லையென்றால் எங்களிடம் வா நாங்கள் பூர்த்தி செய்கிறோம்.""

உத்திரபிரதேச காவல்துறையின் இத்தகைய நடவடிக்கைகள் பாசிசத்தின் அடியாட்களாக கவே காவல்துறையினர் மாறியுள்ளதையே காட்டுகிறது. இனி எதன் அடிப்படையில் முஸ்லிம்கள் தங்கள் பிரச்சனைக்காக உத்திர பிரதேச போலீசாரின் கதவை தட்டுவார்கள். (The Caravan 07.01.2020)

## டாக்டர் கபீல் கான் கைது

அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகத்தில் சிஏஏவுக்கு எதிரான போராட்டத்தில் கபீல் கான் கலந்து கொண்டதால் அவரை உ.பி காவல்துறையினர் கைது செய்திருக்கிறார்கள். தன்னை இக்காவல்துறை சிறைக்குள்ளேயே கொன்று விடக் கூடும் என கூறியிருக்கிறார் கபீல் கான்.

உத்திரபிரதேச யோகி அரசு மருத்துவமனை யில் ஆக்ஸிஜன் சிலிண்டர்களின் இருப்பை கவனிக்காமலும், காதில் வாங்காமலும் விட்ட தால் 70க்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்து போனார்கள். அப்போது தன் சொந்த செலவில் பல குழந்தைகளை காப்பாற்றியவர் கபீல் கான். ஆனால், அவரையே குற்றவாளி என கூறி சிறையில் அடைத்தார்கள். பிறகு நீதிமன்றத்தில் தன் நேர்மையை நிரூபித்து வெளியேறினார் கபீல் கான்.

தற்போது மறுபடியும் கைது செய்யப்பட்டி ருக்கிறார். காவல்துறை முதல்தகவல் அறிக்கை யில், கபீல் கான் பேசும் போது ஆர்.எஸ்.எஸ் நடத்தும் பள்ளிக்கூடங்களில் தாடி வைத்தவர் களை தீவிரவாதிகள் என சொல்லித்தருகிறார்கள் என்றார் என குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதனை காரணமாக வைத்தே கைது சம்பவம் நடந்திருக் கிறது.

காவலர்கள் என்னை கொன்று விடவும் கூடும் என கபீல் கான் தெரிவித்திருக்கிறார்.

## இந்துத்துவ அமைப்பினரை உடன் சேர்த்து காவல்துறையினர் வெறியாட்டம்

உத்திரபிரதேச மாநிலத்தில் காவல் துறையினர் முஸ்லிம் வீடுகளுக்குள் புகுந்து

தாக்குவதும், முஸ்லிம்களின் பொருளாதாரத்தை சூரையாடுவதுமாக பல வீடியோக்கள் வெளி வந்தன. இந்த வீடியோக்களில் காவல்துறை யினருடன் போலீஸ் உடை இல்லாமல் இருப்பவர்களும் இணைந்து முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல் நடத்தினர்.

இவர்கள் யாரென்பதை காவல்துறையினர் வெளியிட்டிருக்கிறார்கள். இவர்கள் காவல் துறையின் நண்பர்கள் (SPO) என்று காவல் அதிகாரிகளால் ஒவ்வொரு ஊர்களிலும் சேர்க்கப்படும் இளைஞர்கள் என கூறுகிறார்கள்.

காவல்துறை நண்பர்கள் (Friends of police) என்று சேர்க்கப்படுவர்கள் ஊருக்குள் நடக்கும் நிகழ்வை காவல்துறையினருக்கு அறிவிக்கவும், சாலையை சரி செய்வது, பைக்கில் மூன்று பேர் சென்றால் நிறுத்துவது போன்ற வேலைகளுக்கு பயன்படுத்தப் படுபவர்கள்.

ஆனால் உ.பியில் இவர்கள் கலவரத்திற் காகவும், முஸ்லிம்கள் மீது வன்முறை நிகழ்த்து வதற்காகவும் சேர்க்கப்படுகிறார்கள். உ.பியில் இந்தSPOக்களாக சேர்க்கப்படுகிறவர்களில் 95% பேர் இந்துத்துவ அமைப்பை சேர்ந்தவர்கள்.

உ.பி அரசின் விதிகளின் படி, ஒரு காவல் துறை அதிகாரி 10 SPOக்களை கையாளக் கூடியவராகவும், தொடர்பில் வைத்துக் கொண்டும் இருக்க வேண்டும். அப்படி உ.பியில் தற்போது 2.2லட்சம் காவலர்கள் இருக்கிறார்களென்றால் இப்படி சேர்க்கப்படும் இந்துத்துவ அமைப்பை சேர்ந்த இளைஞர்கள் 2.8 கோடி பேர் இருப்பார்கள். அதாவது உபியின் மக்கள்தொகையில் 8 பேருக்கு ஒரு SPOக்கள் கலவரம் செய்வதற்கு தயாராக இருப்பார்கள்.

இவர்களுக்கான முதன்மையான வேலை, காவல்துறையினருக்கு சேர வேண்டிய மாமூல் பணத்தை வாங்கி தருவது, போலி சாட்சிகளாக இருப்பது, ஒரு மாதத்திற்கு இத்தனை வழக்கு என காவல்நிலையத்திற்கு அழைத்து வருவது போன்ற வேலைகளை செய்வார்கள்.

ஒவ்வொரு காவல் நிலையத்திலும் இவர் களுக்கு தனி இடம் ஒதுக்கப்படுகிறது. இவர்களே பசு குண்டர்கள் என்ற பெயரிலும் முஸ்லிம்களை அடித்துகொல்லும் சம்பவங்களி லும் ஈடுபடுகிறவர்கள். (The caravan 25.09.2020)

## முசாபர் நகர் கலவரம்

உபி யின் முசாபர் நகரில் வெள்ளிக்கிழமை தொழுகை முடிந்து சிஏஏவுக்கு எதிராக அமைதியாக போராட்டம் தொடங்கியதும் காவல்துறையினர் மிக மோசமாக அனைவரை யும் தாக்கி அவர்களை சிறைக்கு இழுத்து சென்றது.

சிறைக்கு இழுத்து செல்லப்பட்டவர்கள் என்ன ஆனார்கள் என உறவினர்கள் பார்க்க செல்லும் போது இவர்களுக்கு மாற்றுத்துணி எடுத்து வாருங்கள் என கூறியிருக்கிறார்கள். மாற்றுத்துணி எடுத்து வந்த பிறகுதான் தெரிந்தது, அவர்கள் போட்டிருந்த துணி முழுக்க ரத்தமாக கிடந்தது. ஒரு நாள் முழுக்க அடைத்து வைத்து ரத்தம் வடிய வடிய அடித்து சித்ரவதை செய்திருக்கிறார்கள்.

மதரசாக்களில் உட்புகுந்து படிக்கும் மாணவர்களை எல்லாம் அடித்து இழுத்து சென்றிருக்கிறார்கள். காவல்துறையினர் முதலில் சிசிடிவை அடித்து உடைத்த பிறகு தான் மக்களை தாக்க தொடங்குகிறார்கள் என்று கூறுகிறார்கள் முசாபர் நகர் மக்கள்.

காவல்துறையினர் சிறுவர்களையும் அடித்து, கலவரக்காரர்கள் போல் ஸ்ரீ ராம் சொல் என்று அடித்திருக்கிறார்கள்.

அப்பகுதியின் சல்மான் சொல்கிறார், அன்றைய நிகழ்வுக்கு முன்னால் எங்கள் வீட்டில் என் பேரக்குழந்தைகளின் சிரிப்பு சத்தம் எப்போதும் கேட்டுக்கொண்டே இருக்கும். ஆனால், எங்கள் வீட்டுக்குள் புகுந்த காவலர்கள் 5 வயது, 9 வயது இருக்கும் என் பேரக்குழந்தைகளிடம் துப்பாக்கியை காட்டி மிரட்டியுள்ளனர். இதனால் இன்று அவர்கள் சிரிப்பதையே மறந்து விட்டார்கள்.

காது கேட்க முடியாத ஃபர்ஹான் சொல் கிறார், “என்னுடன் 50 பேரை இழுத்து சென்று அறையில் அடைத்து கொடூரமாக தாக்கி னார்கள். இவர்கள் எந்த சட்ட விதிகளையும் பின்பற்றுவதில்லை. எதைப்பற்றியும் கவலை கொள்வதுமில்லை. (The quint 29.01.2020)

-அபூ சித்திக்.

நமது தாருல் இஸ்லாம் ஃபவுண் டேசன் ட்ரஸ்ட் சார்பாக இந்தியா முழுக்க NRC,NPR,CAA பற்றிய விவாதங்கள் ஒவ்வொரு விதமாக சென்று கொண்டிருக்க NRC நடைமுறையை ஏற்கனவே எதிர்கொண்ட அஸ்ஸாம் மாநிலத்தில் என்ன நடந்தது என்பதனை மக்களுக்கு எடுத்து சொல்ல வைகறை வெளிச்சம் ஆசிரியர் குலாம் முஹம்மது அவர்களின் நண்பராகவும் அஸ்ஸாமில் NRCயை சட்ட ரீதியாக எதிர்கொண்டு பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு உதவி புரிந்த முன்னாள் எம்.எல்.ஏ சையத் அஹ்மத் சௌத்ரி

மூத்த வழக்கறிஞர்
ஹாபிஸ் ரஷீது அஹமது சௌத்ரி



# NPR/NRC அஸ்ஸாமில் நடந்தது என்ன?

மூத்த வழக்கறிஞர்
**ஹாபிஸ் ரஷீது அஹமது சௌத்ரி**

அவர்களை கொண்டு ஒரு நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்தோம். அதில் பலநூறு மக்கள் கலந்து கொண்டனர். சௌத்ரி அவர்கள் வடகிழக்கு மாநிலங்களான அஸ்ஸாம், திரிபுரா உட்பட ஐந்து மாநிலங்களுக்கு பார் கவுன்சில் தலைவராகவும் இருப்பதால் சட்ட ரீதியான விளக்கங்களையும் எடுத்து வைத்தார்.

நம் வைகறை வாசகர்களுக்காக நாம் சௌத்ரி அவர்களின் உரை சுருக்கத்தை கீழே தருகிறோம். சௌத்ரி அவர்கள் பேசியது, என்னுடைய சகோதரர் குலாம் முஹம்மது என்ன பேசினார் என எனக்கு தெரியும் என்னை பற்றி தான் அதிகம் பேசினார். அதற்கு நான் தகுதியானவன் அல்ல. நான் வெறும் ஒரு வழக்கரைஞர் தான்.

அஸ்ஸாமிய அரசு பெங்காலி மக்களை விவசாயத்திற்காக அஸ்ஸாமிற்கு வரச்சொல்லி அழைப்பு விடுத்தது. அந்த நேரத்தில் பாகிஸ்தான் இல்லை. அப்போது அது பிரிக்கப்படாத இந்தியாவாக இருந்தது.

தமிழ்நாட்டிலிருந்து இந்தியாவில் இருக்கும் வேறு மாநிலங்களுக்கு செல்வது போல அப்போது முஸ்லிம் மக்கள் அஸ்ஸாமிற்கு வந்தார்கள். அதாவது அவர்கள் சுதந்திரத்திற்கு முன்பே வந்து விட்டார்கள்.

அஸ்ஸாமின் பிரச்சனையை நாம் அணுகினால் இது பல வருடங்களுக்கு முன்னால் 1979ல் தொடங்கியது. அஸ்ஸாமை பொறுத்தவரை

இரண்டு கருத்துகள் இருக்கிறது. ஒன்று அஸ்ஸாமி முஸ்லிம்கள் மற்றும் பெங்காலி முஸ்லிம்கள். மற்றொன்று அஸ்ஸாமி மக்கள்

மற்றும் பெங்காலி மக்கள். இந்த பிரச்சனை முழுக்க பெங்காலி பேசும் முஸ்லிம்களிடம் இருந்து தான் தொடங்குகிறது.

நாங்கள் 1947ல் சுதந்திரம் பெற்றோம். பிரிக்கப்படாத இந்தியாவில் அஸ் ஸாம் மிகுந்த தனித்துவம் வாய்ந்த புவியியல் அமைப்பை கொண்டது. 1920-30 களில் அஸ்ஸாமிய அரசு பெங்காலி மக்களை விவசாயத்திற்காக அஸ் ஸாமிற்கு வரச்சொல்லி அழைப்பு விடுத்தது. அந்த நேரத்தில் பாகிஸ்தான் இல்லை. அப்போது அது பிரிக்கப்படாத இந்தியாவாக இருந்தது.

தமிழ்நாட்டிலிருந்து இந்தியாவில் இருக்கும் வேறு மாநிலங்களுக்கு செல்வது போல அப்போது முஸ்லிம் மக்கள் அஸ்ஸாமிற்கு வந்தார்கள். அதாவது அவர்கள் சுதந்திரத்திற்கு முன்பே வந்து விட்டார்கள்.

அதன் பிறகு பாகிஸ்தான் பிரிக்கப்பட்டது. அப்போது இந்தியாவில் பல இடங்களில் கலவரம் நடந்தது. அஸ்ஸாமிலும் நடந்தது. சில முஸ்லிம்கள் பாகிஸ்தானிற்கு சென்றார்கள். சில இந்துக்கள் இந்தியாவிற்குள் வந்தார்கள். அப்போதும் சில முஸ்லிம்கள் அப்போதைய கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வந்தார்கள்.

பிறகு 1950ல் இந்தியாவின் பிரதமர் நேருவும்-பாகிஸ்தான் பிரதமர் லியாகத் அலிக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் நடந்தது.

அந்த ஒப்பந்தத்தின் கீழ் சில முஸ்லிம்கள் இந்தியாவிற்குள் வந்தார்கள். சில இந்துக்கள் பாகிஸ்தானிற்கு சென்றார்கள். இப்படி வந்த முஸ்லிம்கள் 1951 மக்கள் தொகை கணக்கெடுப் புக்கு பின் இந்தியாவிற்குள் வந்தார்கள்.

1951 மிக முக்கியமானது. அப்போது எடுக்கப்பட்ட NRC கணக்கெடுப்பில் முஸ் லிம்களின் எண்ணிக்கை அவ்வளவு அதிகமாக இல்லை. ஆனால் சென்சஸ் நடத்தப்பட்ட பிறகு நேரு-லியாகத் ஒப்பந்தத்தின் கீழ் 5 லட்சம் முஸ்லிம்கள் இந்தியாவிற்குள் வந்தார்கள். அதனால் அவர்களின் பெயர் 1951 சென்சஸில் இடம் பெறவில்லை. ஆனால், 1961ல் எடுக்கப் பட்ட சென்சஸில் அவர்களது பெயர்கள் இடம் பெற்றன. அதனால் ஒரேடியாக மக்களின் எண்ணிக்கை அதிகமானது. இப்படி மக்களின் எண்ணிக்கை அதிகரித்ததால் பாகிஸ்தான் மக்கள் அதிகமாகிவிட்டார்கள். அவர்களை வெளியேற்றுங்கள் என குரல்கள் எழும்ப ஆரம்பித்தது.

**1969ல் அப்போதைய முதலமைச்சர் விமலா பிரசாத் சாலிஹா சட்ட மன்றத்திலேயே கூறினார், அஸ்ஸாமில் உள்ள அனைத்து பாகிஸ்தானியர் என்று சந்தேகிக்கும் மக்கள் அனைவரையும் பாகிஸ்தானுக்கு அனுப்பிவிட்டோம். அதனால் தற்போது அஸ்ஸாமில் அவர்கள் இல்லை.**

அதனால் 1932-64 காலக்கட்டங்களில் மக்கள் தொப்பியுடன், தாடியுடன், லுங்கியுடன் இருந்தால் அவர்களை பிடித்து எவ்வித விசாரணையும் இல்லாமல் பாகிதாஸ்தானுக்கு துரத்தினார்கள்.

அப்போதைய நேரத்தில் நமது தலைவர்கள் ஜமியத் உலமா மற்றும் சில அமைப்புகள் இணைந்து இந்திய அரசிடம், உங்களுக்கு இவர்கள் பாகிஸ்தானி என்ற சந்தேகம் இருந்தால் விசாரணை செய்து ஆணையத்திடம் ஒப்படையுங்கள் அவர்கள் விசாரித்து முடிவு செய்யட்டும் என்றனர். அப்போது தான் முதன் முதலில் வெளிநாட்டு தீர்பாயம் அஸ்ஸாமிற்குள் வந்தது.

அப்போதிருந்த முஸ்லிம் தலைவர்கள் இந்திராகாந்தி தலைமையிலான அரசிடம் கேட்டதற்கிணங்க ஒரு சட்டம் கொண்டு வரப் பட்டது. அதன் கீழ் வெளிநாட்டு தீர்ப்பாயங்கள் அமைக்கப்பட்டன.

அதனடிப்படையில் யாராவது பாகிஸ் தானியர் என்று சந்தேகம் இருந்தால் முதலில் அவர்கள் தீர்ப்பாணையத்தின் கீழ் விசாரிக்கப் படுவார்கள் . அதன் பிறகு அவர்கள் பாகிஸ் தானி என்பது உறுதி செய்யப்பட்டால் அவர்களை பாகிஸ்தானிற்கு அனுப்புவார்கள். இந்த நடைமுறையின் படி 1969 வரை தீர்ப்பாணையங்கள் இயங்கின.


*1969ல் அப்போதைய முதலமைச்சர் விமலா பிரசாத் சாலிஹா சட்டமன்றத்திலேயே கூறினார், அஸ்ஸாமில் உள்ள அனைத்து பாகிஸ் தானியர் என்று சந்தேகிக்கும் மக்கள் அனை வரையும் பாகிஸ்தானுக்கு அனுப்பிவிட்டோம். அதனால் தற்போது அஸ்ஸாமில் அவர்கள் இல்லை. அதனால் தீர்ப்பாயத்தின் வேலை முடிந்தது. அதனால் இனி அவசியமில்லையென மூடப்பட்டது.*

*அதன் பிறகு 1979ல் லியாவுல் பட்வாரிய என்ற M.P மரணித்தார். அதனால் அப்பகுதியில் இடைத்தேர்தல் வந்தது. அப்போது இந்திரா காந்தி அந்த தொகுதியில் ஒரு பெங்காலி ஒருவரை போட்டியிட வைத்தார். அப்போது அவர்கள் 1971ல் நடைபெற்ற தேர்தலின் வாக்காளர் பட்டியலை எடுத்தார்கள்.*

*1971ல் பங்களாதேஷ் என்ற நாடு உருவாகி விட்டது. தொடர்ச்சி முக்கியமென்பதால் நாம் இதனை தெரிந்து கொள்ள வேண்டும். 1969ல் அஸ்ஸாமில் தீர்ப்பாயங்கள் மூடப்பட்டன. பிறகு 1971ல் பங்களாதேஷ் உருவானது. பங்களாதேஷ் உருவான பிறகு இந்தியா அமைதியாக இருந்தது. மிக அமைதியாக இருந்தது.*

*பிறகு 1979ல் வந்த அந்த இடைத்தேர்தலில் இந்திரா காந்தி பெங்காலிகள் அதிகமுள்ள தொகுதியில் தேர்தலில் போட்டியிடுவது அஸ்ஸாமிய மக்கள், மாணவர் அமைப்புகளுக்கு பிடிக்கவில்லை. அதனால் அப்போதைய தலைவர்கள், குறிப்பாக அஸ்ஸாம் மாநிலத்தின் மாணவர் அமைப்பின் தலைவர் மற்றும் இன்னும் சிலர் இணைந்து அந்த குறிப்பிட்ட தொகுதியின் வாக்காளர் பட்டியலை எடுத்து அந்த ஒரு தொகுதியில் உள்ள 48000 மக்கள் மீது ஆட்சேபணை தெரிவித்தார்கள். அதாவது, அவர்கள் கௌஹாத்தியில், இன்னொரு தொகுதியில் அமர்ந்து கொண்டு தேர்தல் நடக்கும் மற்றொரு தொகுதியின் வாக்காளர் பட்டியலை மட்டும் வைத்து அந்த மக்களுக்கு நோட்டிஸ் அனுப்பினார்கள்.*

*அதன் பிறகு பிரச்சனை தொடங்கியது. அதன் பிறகு அமைப்புகள் உருவாக்கப்பட்டன. இது 1985ல் முடிவடைந்தது. அதாவது, 1985ல் அப்போதைய அஸ்ஸாம் அரசு, மத்தியில்*



ஆசிரியர் மு.குலாம் முகம்மது

*ஆட்சியில் இருந்த ராஜீவ் காந்தி அரசு மற்றும் அஸ்ஸாம் மாநில மாணவர் அமைப்பு என மூவருக்கும் இடையில் 1985ல் ஓர் ஒப்பந்தம் நிறைவேறியது.*

## அந்த 1985 அஸ்ஸாம் ஒப்பந்தம் என்ன?

*அஸ்ஸாம் ஒப்பந்தம் என்ன சொல்கிற தென்றால், பங்களாதேஷ் 25 மார்ச் 1971ல் உருவாக்கப்பட்டது. அதன் படி, 1971க்கு முன் இந்தியாவிற்குள் வந்தவர்கள் இந்திய குடிமக்க ளாக கருதப்படுவர். ஆனால், 1971க்கு பிறகு இந்தியாவிற்குள் நுழைந்தவர்கள் பங்களா தேசிற்கு அனுப்ப படுவர். இந்த சட்டம் 1955ல் கொண்டுவரப்பட்ட குடியுரிமைச் சட்டத்தின் கீழ் வருகிறது.*

*அதனால், அஸ்ஸாமிற்கு மார்ச் 25,1971 இறுதி உள்நுழைவு நாள் (CUT OFF DATE) முன் வந்தவர்கள் இந்தியர்கள். அதற்கு பிறகு வந்த வர்கள் பங்களாதேசிகள். இதுவே அஸ்ஸாம் ஒப்பந்தம்.*

*அதன் பிறகு நிலைமை மோசமாக இல்லை. அதன் பிறகு நிறைய தேர்தல் நடந்தது. அதில் எந்த ஆட்சேபணையும் தெரிவிக்கப்படவில்லை.*

ஆனால். 1994ல் சட்ட மன்றத்தில், " அஸ்ஸாமில் எவ்வளவு பங்களாதேசிகள் இருக்கிறார்கள்" என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது பதில் சொன்ன முதல்வர், முப்பது லட்சம் பங்களாதேசிகள் அஸ்ஸாமில் இருப்பதாக கூறினார்.

அதேபோல் காங்கிரஸ் சார்பாக ஒரு கமிட்டி உருவாக்கப்பட்டது அப்போதைய மாநிலத்தின் உள்துறை அமைச்சர் இந்தியா முழுக்க ஒரு கோடியே 20 லட்சம் பங்களாதேசிகள் இருப்ப தாகவும், அஸ்ஸாமில் மட்டும் 50 லட்சம் பங்களாதேசிகள் இருப்பதாகவும் பாராளு மன்றத் தில் கூறினார். அப்போது 1998ல் அஸ்ஸாமில் கவர்னராக இருந்த ஷிரி சின்ஹா இதற்கு பதில் அனுப்பினார். அதில், 90 லட்சம் பங்களா தேசிகள் அஸ்ஸாமில் இருப்பதாக கூறினார். அத்துடன் ஒவ்வொரு நாளும் 6000 பேர் பங்களாதேசிலிருந்து அஸ்ஸாமிற்குள் வருவதாக கூறினார்.

ஒரு நாளைக்கு பங்களாதேசிலிருந்து 6000 பேர் வருவதாக 1998ல் கவர்னர் கூறினார். உண்மையில் ஒரு நாளைக்கு 6000 பேர் என்றால், மாதத்திற்கு, வருடத்திற்கு எத்தனை பேர் இருப்பார்கள்?.. பங்களாதேஷ் முழுக்க காலியாகியிருக்கும். அங்கு எந்த மக்களும் இருந்திருக்க மாட்டார்கள்.

இப்படியான பேச்சுகள், தவறான தகவல்கள், பிரச்சாரம் அஸ்ஸாமிய மக்களிடம் பெரும் பயத்தை உருவாக்கியது. அஸ்ஸாமிய மக்கள் தங்கள் மொழி மற்றும் கலாச்சாரத்தை நினைத்து பயந்தார்கள். நான் அஸ்ஸாமிய மக்களை குறை கூற மாட்டேன், இந்த பிரச்சனைக்கு காரணம் சிந்தனைவாதிகள், அரசியல்வாதிகள் என கூறி தவறான தகவலை கூறி 70 லட்சம், 80,90 லட்சம் என கூறி மக்களை தூண்டியவர்கள் தாம்.

உண்மையில் இவர்கள் குறிப்பிட்ட தேதியில் அதாவது. 1991ன் சென்சஸ் கணக்கின்படி முஸ்லிம்களின் மக்கள் தொகை அஸ்ஸாமில் 60 லட்சம் தான், ஆனால், 90 லட்சம் வந்து விட்டதாக பொய் கூறினார்கள். 1991 சென்சஸ் படி முஸ்லிம்கள் அஸ்ஸாமில் 28.43%. மொத்த முஸ்லிம்களின் எண்ணிக்கை 63,73,304 பேர் தான். ஆனால் 1998ல் 80 லட்சம் பேர் வந்து விட்டதாக கூறினார்கள்.

அவர்களின் கணக்கு படி பார்த்தால், குடியரசு தலைவர் பக்ருதீன் அலி அகமது, அஸ்ஸாமை சேர்ந்த பெரிய முஸ்லிம் தலைவர்கள், நான் உட்பட முஸ்லிம்கள் அனைவரும் பங்களா தேசிகள். இவர்களின் இத்தகைய பொய்யான பிரச்சாரத்தின் காரணமாகவே பிரச்சனை உருவானது. அஸ்ஸாமிய மக்கள் பிரச்சனையை உருவாக்கவில்லை. 90 லட்சம் பேர் வந்து விட்டார்கள் எனும் போது மக்கள் தங்கள் வேலை வாய்ப்பு போன்றவற்றை கருதி போராட துவங்கினர். மீண்டும் அமைப்புகள் உருவாக்கப் பட்டது. அதன் பிறகு எப்போதும் போல் முஸ்லிம்கள் சித்ரவதைக்கு உள்ளாக்கப்பட் டனர். அதன் பிறகு நாங்கள் ஒரு சந்திப்பை ஏற்பாடு செய்தோம். எனது தலைமையில் தான் அந்த சந்திப்பு நடத்தப்பட்டது. மாநிலத்தில் இருக்கும் அனைத்து தலைவர்களையும் அழைத்து சந்திப்பை நடத்தினோம். அதில் 13 முக்கிய அமைப்புகள் கலந்து கொண்டன. அப்போது நீங்கள் என்ன விரும்புகிறீர்கள், பங்களாதேசிகள் இருக்க கூடாது என்பதை தானே! நாங்களும் அதையே விரும்புகிறோம். அதற்கு என்ன செய்ய வேண்டும். NRC எடுக்க வேண்டும்.

அஸ்ஸாமிய முஸ்லிம்கள் நாங்கள் தான் NRCயை கேட்டோம். அது எங்களுக்கும் தேவைப்பட்டது, எங்களுக்கு தெரியும் நாங்கள் பாகிஸ்தானில் இருந்து வந்தவர்கள் அல்ல. எங்களால் நிரூபிக்க முடியும் என முடிவு செய்தோம், அதனால் NRCக்கு சம்மதித்தோம்.

முஸ்லிம்களுக்கெதிராக ஆங்காங்கே நடத்தப்பட்ட கொடுமைகளுக்கு முடிவாகவே NRCயை நாங்கள் கேட்டோம்.

மீண்டும் தீர்ப்பாயங்கள் தொடங்கப்பட்ட பிறகு மாநில அரசு, மத்திய அரசு, அஸ்ஸாம் மாணவர் அமைப்பு இணைந்து 5 மே 2005ல் இந்தியாவின் பிரதமராக மன்மோகன் சிங் இருந்த போது NRC எடுப்பதாக முடிவு செய்யப்பட்டது.

NRC என்றால் அதற்கு ஆவணங்கள் தேவை. அவை என்னென்ன ஆவணங்கள் என முடிவு செய்ய இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்துவர்கள், காங்கிரஸ், பிஜேபி என அனைவரும் ஒன்றி ணைந்து 15 விதமான ஆவணங்களை NRCக்கு

உரியதாக ஆவணங்களாக முடிவு செய்தோம். இந்த 15 ஆவணங்களில் ஒன்றை காண்பித்தால் அவரது பெயர் NRCல் இடம்பெறும்.

அந்த 15 ஆவணங்கள் என்ன?.. அதில் list a மற்றும் list b என இரண்டு இருக்கிறது.

**LIST-A**

### 1) 1951 NRC

1951 NRC என்பது நேரடியாக சட்டத்தின் கீழ் எடுக்கப்பட்டதல்ல. உச்சநீ திமன் றம் இதனை தெளிவான ஆதாரமாகவும் எடுத்துக்கொள்ளவில்லை. ஆனாலும் இதனை ஒரு ஆவணமாக வைத்திருக்கிறார்கள்.

### 2) 1971 வாக்காளர் பட்டியல்

1971 தான் அஸ்ஸாமின் கட் ஆப் தேதி. அதனால் 1971க்கு முன்னாலான வாக்காளர் பட்டியல் ஓர் ஆவணம்.

3. நில ஆவணம்

4. குடியுரிமை சான்றிதழ்

5. நிரந்தர குடியிருப்பு சான்று

6. அகதிகள் பதிவு சான் றிதழ்

7. கடவுச்சீட்டு (Passport)

8. LIC

9. அரசால் வழங்கப்பட்ட ஏதேனும் ஒரு அடையாள சான்று

10. அரசு அதிகாரியாக இருந்தால் வேலை பார்க்கும் சான்று

11. வங்கி கணக்கு, தபால் கணக்கு

12. பள்ளிச் சான்றிதழ் / கல்வி மதிப்பெண் சான்றிதழ்

13. நீதிமன்ற ஆணைகள் 1971 க்கு முன் நீங்கள் கைது செய்யப்பட்டு குற்றவாளியாக இருந்தால் அதனையும் சான்றாக கொடுக்க முடியும்.

## LIST-B

1. பஞ்சாயத்து அலுவலகத்தில் வழங்கப்படும் சான்றிதழ்

2. ரேஷன் கார்டு

இதில் list-A வில் ஒரு ஆவணமும் list-Bல் ஒரு ஆவணமும் NRCயை நிரூபிக்க சமர்பிக்க வேண்டும்.

சரி, உங்களுக்கு NRC வரும்போது நீங்கள் என்ன செய்ய வேண்டும். அஸ்ஸாமை பொறுத்த வரை நாங்கள் தான் NRCயை கேட்டோம். ஆனால், இந்தியாவின் மற்ற பகுதியில் அப்படி யில்லை.



இதில் பிரச்சனை என்னவென்றால், உதார ணத்திற்கு வாக்காளர் பட்டியலில் பெயர் தவறாக போடப்பட்டிருக்கும். குலாம் முஹம்மது என்ற பெயருக்கு பதிலாக குலாம் அகமது, குலாம் அலி என்று பெயர் வந்து விடும். இது தான் பிரச்சனை. அதேபோல் வயதும் தவறாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் பிரச்சனை. இதையெல்லாம் நாம் சரிப்படுத்தி கொள்ள வேண்டும்.

கேட்கப்பட்ட அனைத்து ஆவணங்களையும் கொடுத்த பிறகும் கூட பிரச்சனை தீரவில்லை. ஏனென்றால் அங்கே பிஜேபி ஆட்சி நடை பெறுகிறது. அஸ்ஸாமின் முதல்வர் நல்லவர்தான். அவரை பற்றி எனக்கு தெரியும். ஆனால் பிஜேபியை நடத்துவது ஆர்.எஸ்.எஸ்.

நாக்பூரில் ஆர்.எஸ்.எஸ் அலுவலகத்தில் வரும் உத்தரவுக்கு வேலை செய்வதே பிஜேபி முதல்வர்களின் வேலை. மோடியும், அமித்ஷாவும் கூட நாக்பூரின் கட்டளைக்கு வேலை செய்பவர்களே.

பிஜேபி அரசு ஆட்சியில் இருப்பதால் அரசு அதிகாரிகளும் முஸ்லிம்களின் மனுக்களாக இருந்தால் அதனை நிராகரித்து அரசை மகிழ் வித்தார்கள்.

ஒருவரது பெயர் சலீம் அகமது, அவர் ஹஜ் யாத்திரைக்கு சென்று வந்ததால் ஹாஜி சலீம் அகமது என்றும் மௌலானா சலீம் அகமது என்றும் பெயருடன் இணைத்து கொள்கிறார். இதனாலும் அவர்களது மனுக்கள் நிராகரிக்கப் பட்டன. அதனால் இதுபோன்ற விசயங்களில் மிக கவனமாக இருக்க வேண் டும்.

வாக்காளர் பட்டியல் வருடத்திற்கு ஒரு முறை புதுப்பிக்கப்படும். அதனால் அதனை நாம் முறைப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால், இதனை அரசு அதிகாரிகள் சரியாக செய்ய மாட்டார்கள். அவர்களை சரியாக எடுக்க சொல்லி வேலையை சரியாக செய்ய சொல்ல வேண்டும்.

வாக்காளர் பட்டியலில் தவறான பெயர்கள் இருந்தால் அதனையும் சரி செய்ய வேண்டும். அதற்கென சில வழிமுறை இருக்கிறது, நில ஆவணங்களையும் சரிப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும்.



அஸ்ஸாமை பொருத்தவரையில் ஆட்சி யாளர்களின் எண்ணம் மிக மோசமானது. எந்தளவுக்கு முடியுமோ அந்தளவுக்கு முஸ்லிம் களை வெளியேற்ற வேண்டும் என்பதே அவர்கள் எண்ணமாக இருந்தது.

அஸ்ஸாமில் மொத்தமாக 3 கோடியே 30 லட்சம் மனுக்கள் NRCக்கு கொடுக்கப்பட்டது. அஸ்ஸாம் வேறு இந்தியா முழுக்க உள்ள NRC வேறு. இந்தியா முழுக்க இன்னும் கட் ஆப் தேதி அறிவிக்கவில்லை. ஆனால் அஸ்ஸாமிற்கு 1971 கட் ஆப் தேதி அறிவிக்கப்பட்டது.

விண்ணப்பித்த மனுக்களில் முதற்கட்டமாக 40 லட்சம் பேர் பட்டியலில் இருந்து வெளி யேற்றப்பட்டனர். 40 லட்சம் என்றதும் அமித்ஷா விற்கு மிகுந்த சந்தோசம். அதன் பிறகு மக்கள் மேல்முறையீடு செய்ய இறுதி பட்டியலில் 19 லட்சம் பேர் NRC பட்டியலில் இடம்பெற வில்லை.

இந்த 19 லட்சத்தில் 4 லட்சம் பேர் NRCக்கு விண்ணப்பிக்க வில்லை. அப்படி மீதி, 15 லட்சத்தில் முஸ்லிம்கள் 5-6 லட்சம் பேர்.

இப்படியொரு எண்ணிக்கை வந்ததன் காரண மாக இந்த NRCயை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினார்கள். அமித்ஷா இதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார். இந்த NRC அமித் ஷாவின் நேரடி கட்டுப்பாட்டில் எடுக்கப் பட்டது. இருந்தும் முஸ்லிம்கள் அதிகம் குடியுரிமைப் பெற்றதை அவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

இந்த *5-6* லட்சத்தில் முஸ்லிம் மக்கள் மேல்முறையீட்டுக்கு சென்று கொண்டிருக்கின் றனர். அங்கே நிறைய துன்புறுத்தலுக்கு முஸ்லிம்கள் ஆளாக்கப்பட்டனர். ஆனாலும் அவர்கள் இடைவிடாது சென்றனர். ஏனென் றால் அவர்கள் அனைவரும் இந்தியர்கள்.

அஸ்ஸாமை பொறுத்தவரை நாங்கள் NRCயை எதிர்கொண்டோம். எதிர்கொள் கிறோம். ஆனால், அஸ்ஸாமை தவிர இந்தியா விற்கு வேறு வழிமுறை.

அஸ்ஸாமை பொறுத்தவரையில் வெறும் NRC மட்டும் தான். ஆனால் இந்தியா முழுக்க முதலில் NPR பிறகு NRC எடுக்கப்படுகிறது.

NPR என்பது ஆறு மாதமாக இந்தியாவில் ஒரு இடத்தில் வசிப்பவராக இருந்தால் எந்த கேள்வியும் இல்லாமல் NPRக்குள் வந்து விடுவார்.

அஸ்ஸாமை பொறுத்தவரை ஒவ்வொருவரும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டி இருந்தது. ஆனால் இந்தியா முழுக்க அரசு அதிகாரிகள் வீடு வீடாக வந்து தகவல்களை எடுக்கிறார்கள்.

இப்போது இருக்க கேள்வி எதன் அடிப் படையில்NRCயை நிர்ணயிக்கிறார்கள் என்பதே. அஸ்ஸாமை பொறுத்தவரையில் *1971* தான் அடிப்படை. ஆனால் முழு இந்தியாவுக்கு?..

அதிகாரத்தில் இருக்கும் நபர்களின் எண்ணம் மோசமானது. அதனால் இவர்கள் எதனை அடிப்படையாக வைத்திருக்கிறார்கள் என இன்னும் அறிவிக்கவில்லை.

அரசு வெளியிட்டுள்ள NPR வழிகாட்டுதல் படிவத்தின் படி, இந்திய குடியுரிமை சட்டம் *1955* மற்றும் *2003*ன் கீழ் எடுக்கப்படும் இந்த NPR இந்தியாவில்

குடியிருக்கும் அனைவரிடமும் எடுக்கப்படும். அவர்கள் இந்திய குடிமகனாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் NPRக்குள் வந்து விடுவார்கள். இவற்றில் அதிகப்படியான கேள்விகள் கேட்கிறார்கள். ஆதார் கார்டு, பாஸ்போர்ட் எண், வாக்காளர் எண் என பலவற்றை புதிதாக கேட்கிறார்கள்.

இதனாலேயே மக்கள் இதனை எதிர்க் கிறார்கள். எதற்காக சாஹீன் பாக்?.. ஏனென்றால் இதே நடைமுறைப்படுத்துபவர்களின் நோக்கம் மிக மோசமானது. நாங்கள் NPR, NRC யை எதிர்க்கவில்லை. ஆனால், எதனடிப்படையில் இதை எடுக்கிறீர்கள் அதனை சொல்லுங்கள். எந்தெந்த ஆவணங்களை நாங்கள் சமர்பிக்க வேண்டும் அதனை சொல்லுங்கள்.

எந்த சட்டத்தின் கீழ் இந்த NRCயை செய்ய போகிறார்கள் என அரசு அறிவிக்க வேண்டும்.

இந்திய குடியுரிமை திருத்த சட்டம் *1955* மற்றும் *2003*ன் படி என்றால், *1950*லிருந்து *1987* க்குள் இந்தியாவில் பிறந்தவர்கள் இந்திய குடிமக்கள். அதற்கு பிறகு பிறந்தவர்கள் தாய் அல்லது தந்தையை பொறுத்து குடியுரிமை.

இந்தியாவின் அரசியலமைப்பு சட்டம் பிரிவு *3*, இந்தியாவில் பிறந்தவர்கள் அனைவரும் இந்திய குடிமக்கள் என்கிறது.

இதில் எந்த சட்டத்தின் அடிப்படையில் NRC நடைபெற போகிறது என்பதை அரசு அறிவிக்க வேண்டும். என்னென்ன ஆவணங்கள் தர வேண்டும் என்பதை அறிவிக்க வேண்டும்.

NRC எப்போது வருகிறதோ அப்போது வரட்டும். ஆனால் நாம் குறைந்தபட்ச தயாரிப் புடன் இருக்க வேண்டும். நமது பிறந்த சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டையில் உள்ள பெயர்கள், வயது போன்றவற்றை சரி செய்து கொள்ளுங்கள்.

அஸ்ஸாமை பொறுத்தவரை *1950,60,70* என முஸ்லிம்கள் தொடர்ச்சியாக துன்புறுத்து தலுக்கு ஆளானார்கள். அதனால் நாங்களை எப்படியாவது NRCயை கொண்டு வாருங்கள் என்றோம். நாங்கள் அதே சந்திக்க தயாராக

இருப்பதாக கூறினோம்.

நான் இங்கிருக்கும் இளைய தலைமுறை யினரிடம் கேட்கிறேன். நீங்கள் வசிக்கும் ஒவ்வொரு பகுதியில் இருக்கும் மக்களின் ஆவணங்களை முறைப்படுத்தி சரிசெய்து கொள்ள உதவுங்கள். அதற்கு மேல் எதை பற்றியும் கவலை வேண்டாம். இறைவன் நம்முடன் இருக்கிறான்,

இங்கே குலாம் முஹம்மது அவர்களின் தலைமையிலான இந்த அணி இந்த வேலையை முன்னெடுத்திருக்கிறது. இந்தியாவிலேயே இப்படிப்பட்ட வேலையை முஹல்லா அளவில் ஏற்படுத்தியிருப்பது இதுவே முதல் முறை. நான் இந்த அணியை மனதார பாராட்டுகிறேன்.

உண்மையில் இப்போது பிஜேபியினருக்கு தோல்வியை நெருங்கி கொண்டிருக்கிறது. இவர்களுக்கு எதிராக இந்து மக்களும் வர தொடங்கி விட்டார்கள். ராஜஸ்தான், டெல்லி என நிறைய இடங்களில் இவர்களின் அதிகாரம் பறிபோய் விட்டது. இப்போது இந்து மக்களும், முஸ்லிம்கள் நீங்கள் எங்கள் சகோதரர்கள் என்று பேச தொடங்கி விட்டார்கள்.

இது ஒரு ஜனநாயக நாடு. அப்படியே இது இருக்கும். நம் முன்னோர்கள் இப்படியே கொண்டு வந்திருக்கிறார்கள். அஸ்ஸாமில் கூட முஸ்லிம்கள் மட்டும் அரசின் அடக்குமுறைக்கு எதிராக பேசவில்லை. முஸ்லிம்கள் அல்லாதோர், அறிஞர்கள் பலர் இது அநீதி என வீதிக்கு வந்து போராடினார்கள். இங்கே நல்ல மக்களும் நிறைய இருக்கிறார்கள். நாம் அவர்களுடன் ஒன்று திரள்வோம்.

இது முஸ்லிம்களுக்கான பிரச்சனை அல்ல. இது இந்திய குடிமக்களின் பிரச்சனை. நாங்கள் இந்திய குடிமக்கள். அடிமைகளல்ல. நாங்கள் இந்தியாவின் அதிபதிகள். இந்தியாவே உருவாக்கியவர்களில் நாங்களும் ஒருவர். மோடிக்கு என்ன உரிமை இருக்கிறதோ அது முஸ்லிம்களுக்கும் இருக்கிறது.

தொகுப்பு
-அபூ சித்திக்




# ஜமாஅத்துல் உலமா சபை நிர்வாகிகள் திரு. ரஜினிகாந்த் அவர்களுடன் சந்திப்பு

தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபையினர் நடிகர் திரு. ரஜினிகாந்த் அவர்களை 1.3.2020 அன்று சந்திந்து சி.ஏ.ஏ. சட்டம் மற்றும் என்.ஆர்.சி., என்.ஆர்.பி. இவற்றின் பின்விளைவுகளைச் சொன்னார்கள்.

சந்திப்பின்போது, இஸ்லாமிய நாகரீகம், தாலிபானின் பிடியில், விமர்சனங்களை வென்றவர் உள்ளிட்ட நூல்களும், சி.ஏ.ஏ. சட்டம் மற்றும் என்.ஆர்.சி., என்.ஆர்.பி. பற்றிய ஆவணத் தொகுப்புகளும் வழங்கப்பட்டன.

அதில் CAA, WILL LEAVE MUSLIMS STATELESS என்ற ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அண்டோனியோ பவுட்டரஸ் அவர்களின் அறிக்கையைக் கூர்ந்து அங்கேயே படித்தார்.

சிறப்பு விருந்தினர் அவையில் அமரச் செய்து உலமாக்களை கண்ணியப்படுத்தியதோடு நீண்ட நேரம் உறவாடினார்.

மிகுந்த திருப்தியுடன் உலமாக்கள் வெளியே வந்தனர். வெளியே வந்து ஊடகங்களுக்கு ஜமாஅத்துல் உலமா சபையினர் தலைவர் பேராசிரியர் ஹாஜா மெமய்தீன் அவர்கள் பதில் தந்தார்கள்.


இதனை எல்லா ஊடகங்களும், பத்திரிகைகளும் உரிய முக்கியத்துவத்தை தந்து வெளியிட்டது. அனைத்து ஊடகங்களும், இது எதிர்பாராத ஒரு புது திருப்பம் என்பதை குறிப்பிட்டிருந்தது.

இப்படி பிரபல்யங்களைச் சந்தித்து அவர்களுக்கு ஆதாரங்களையும் தந்து ஐயங்களைப் போக்குவது, இனி வரும் நாட்களில் மிகையான நன்மைகளைத் தரும். உண்மைகள் மக்களுக்குத் தெரிந்திட வரும்.


தொடர்ந்து ஜமாஅத்துல் உலமாவினர் இது டெல்லியில் நடந்த இனப்படுகொலையில் பாதிக்கப்பட்டவர்களைச் சந்திக்க சென்றனர்.


## ரஜினிகாந்த் அவர்களுடன் சந்திப்பு ஏற்பட்டது எப்படி?

*1.3.2020* ஞாயிறு அன்று காலை *11* மணியளவில் திரு. ரஜினிகாந்த் அவர்களை தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபையினுடைய மாநில நிர்வாகிகள் தலைவர் P.A. காஜா முயீனுத்தீன் பாகவி, செயலாளர் Dr. V.S. அன்வர் பாதுஷாஹ் உலவி, பொருளாளர் S. முஜீபுர் ரஹ்மான் மஸ்லவி, துணைச் செயலாளர்கள் S. அப்துல் அஜீஸ் பாகவி, K.M. இல்யாஸ் ரியாஜி ஆகியோர் சந்தித்தனர். பிப்ரவரி ஐந்தாம் தேதி நிருபர்களுக்கு










பேட்டியளித்த அவர் அரசியல் கட்சிகள் முஸ்லிம் மதகுருமார்களை தூண்டிவிட்டு மக்களை போராட்டத்தில் ஈடுபடுத்துவதாக கூறியிருந்தார்,

அவருக்கு ஜமாஅத்துல் உலமாவின் சார்பில் அன்றே பதில் தரப்பட்டது. இந்த போராட்டத்தின் எதார்த்த நிலவரம் குறித்து அவரை சந்தித்து விளக்க





விரும்புவதாக அதில் தெரிவித்திருந்தோம். அந்தக் கடிதத்தை படித்த திரு. ரஜினிகாந்த் இக்கடிதம் மிகவும் நாகரீகமாக எழுதப்பட்டிருக்கிறது என்று கூறி சபை நிர்வாகிகளை அவசியம் சந்திக்கிறேன் என்று கூறினார்.

அதனடிப்படையில் ஜமாஅத்துல் உலமா சபையின் மாநில நிர்வாகிகள் அவரை சந்தித்தனர். மிகுந்த மரியாதையோடு அனைவரையும் வரவேற்று அவர் ஜமாஅத்துல் உலமாவின் கருத்துக்களை கவனமாக கேட்டறிந்தார். ஒருமணிநேரம் நடைபெற்ற இச்சந்திப்பில் இந்தியா முழுக்க சி.ஏ.ஏ., என்.பி.ஆர்., என்.ஆர்.சி. சம்பந்தமாக முஸ்லிம்கள் மற்றும் ஜனநாயக சக்திகளிடம் எழுந்துள்ள அச்சத்தின் நியாயங்களை அவருக்கு விளக்கிச் சொன்னபோது அது சரிதான். அதில் நியாயம் இருக்கிறது என்று அவர் ஒப்புக் கொண்டார்.

அத்தோடு இந்த அச்சத்தை போக்குவதற்கு என்ன செய்ய வேண்டும் தங்களைப் போன்ற மதகுருமார்கள் தீர்மானித்து சொன்னால், நாட்டில் ஏற்பட்டுள்ள அச்சம் அகன்று அமைதி ஏற்பட தன்னால் இயன்ற அனைத்தையும் உங்களோடு சேர்ந்து செய்வதற்கு நான் தயாராக இருக்கிறேன் என உறுதியளித்தார்.


ஜமாஅத்துல் உலமா நிர்வாகிகளை சந்திக்க நேரம் ஒதுக்கி அனைத்துக் கருத்துக்களையும் கவனமாக கேட்டறிந்த திரு. ரஜினிகாந்த் அவர்களுக்கு ஜமாஅத்துல் உலமா நிர்வாகிகள் நன்றி கூறி விடைபெற்றனர்.

## திரு. ரஜினிகாந்த் அவர்களுக்கு முஸ்லிம் மதகுருமார்கள் பதில்

மத்திய பா.ஜ.க. அரசு கொண்டு வந்துள்ள சி.ஏ.ஏ. சட்டம் மற்றும் என்.ஆர்.சி., என்.ஆர்.பி. திட்டங்கள் தொடர்பாக திரைப்பட நடிகர் திரு. ரஜினிகாந்தின் கருத்து அதிருப்யளிக்கிறது. ஒரு தரப்பு கருத்துக்களை மட்டுமே ரஜினி பிரதி பலித்துள்ளார். பெரும் பான்மை மக்களின் கருத்துக் களில் உள்ள நியாயத்தை அவர் புரிந்துகொள்ள வில்லை.

சட்ட வல்லுநர்கள், அறிஞர்கள், சிந்தனையா ளர்கள், கல்வியாளர்கள், மாணவர்கள், நாட்டிலுள்ள பெருவாரியான அரசியல் கட்சியினர், முஸ்லிம் மதகுருமார்கள், ஆண்கள், பெண்கள் என அனைத்து தரப்பு மக்களும் சி.ஏ.ஏ. சட்டம் மற்றும் என்.ஆர்.சி., என்.ஆர்.பி. ஆகிய சட்டங்களையும் பா.ஜ.க. அரசின் உள்நோக்கத்தையும் சரியாய் புரிந்துகொண்டதன் விளைவாகவே ஒன்று திரண்டு கடந்த 50 நாட்க ளுக்கு மேலாக போராடி வருகின்றனர். மேலும் இந்தியாவின் 15 மாநிலங்களில் முதல்வர்கள் இச்சட் டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். "தூண்டி விடப்படுகிறார்கள்" "பீதியைக் கிளப்புகிறார்கள்" என்பது போன்ற வார்த்தைகள் ஒரு பெரும் மக்கள் இயக்கத்தை கொச்சைப்படுத்து வதாகும்.

முஸ்லிம் மதகுருமார்கள் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்கு முதல் களப்பலியானவர்கள் என்கிற வரலாற்றை திரு. ரஜினிகாந்த் அவர் களுக்கு நினைவூட்டுகிறோம். அதே பொறுப்புணர் வோடுதான் தற்போது முஸ்லிம் மதகுருமார்கள் ஜனநாயக சக்திகளுடன் இணைந்து பா.ஜ.க. அரசிற்கு எதிராகப் போராடி வருகிறார்கள்.




இப்போராட்டக்காரர்களின் கருத்துக்களை அவர் கேட்க வேண்டும். ஜனநாயக ரீதியாக போராடுகிற மக்கள் ரஜினிகாந்த் தொடர்ந்து அவமதித்து வரு கிறார் என்ற பழியிலிருந்து அவர் விடுபட வேண்டும். அவரை சந்தித்து விளக்கமளிக்க தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா சபை திட்டமிட்டது.

**எனினும் அல்லாஹ் அவன் விரும்புகிறவர்களுக்கு நேர்வழி காட்டுகிறான். (அல்குர்ஆன் 28:56)**


## பாகம்-3

2011 ஆம் ஆண்டிலும் அதற்கு பின்னர் வந்த ஆண்டுகளிலும் நடந்த குண்டு வெடிப்பு வழக்குகளில் தேசிய புலனாய்வு நிறுவனம் கர்கரேவுக்கு முன்பிருந்த விசாரணை கொள்கைகளின் படி விசாரணையைக் மேற்கொண்டது. முஸ்லிம் இளைஞர்களை பொய்யாக சிக்க வைத்தது. மேலும் அது நாடு முழுவதிலும் பல முஸ்லிம் இளைஞர்களை ஐ.எஸ்.ஐ.எஸ். (இஸ்லாமிக் ஸ்டேட் ஆஃப் ஈராக் அண்டு சிரியா) இயக்கத்துடன் தொடர்பு வைத்தவர்கள் என்றும் அல்லது அந்த இயக்கங்களின் சார்புடையவர்கள் என்றும் வழக்குகளை பதிந்தது. இவையனைத்தும் மின்னஞ்சல்கள் மற்றும் சி.டி.ஆர் எனப்படும் கால் டேட்டா ரெக்கார்ட்ஸ் (கைபேசிகளின் அழைப்பு அறிக்கைகளின்) அடிப்படையில் செய்யப்பட்டன. ஆனால் இந்த மின்னஞ்சல்களின் அல்லது இந்த கைபேசிகளின் சொந்தக்காரர்கள் இன்னார் தான் என்பதும், இந்த மின்னஞ்சல்களை எழுதியது இன்னார் தான் என்பதும் நிரூபிக்கப்படவில்லை. அல்லது எப்படி இந்த சங்கேத மின்னஞ்சல்கள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது என்பதும் விவரிக்கப்படவில்லை.

சில இளைஞர்கள் அடிக்கடி ஐ.எஸ்.ஐ.எஸ். இணையதளங்களை இணையத்தில் பார்த்தனர் என்ற காரணத்திற்காக கைது செய்யப்பட்டிருந்தனர். இது எப்படிபட்டது என்றால் ஆபாச இணையதளத்திற்கு சென்று பார்ப்பவர்களை கற்பழிப்பு முயற்சி வழக்கில் கைது செய்வதை போன்றது.

முஸ்லிம் இளைஞர்களுக்கு எதிராக நடத்தப்படும் அநியாயங்களைப் பற்றி இந்த புத்தகத்தில் தான் முதல் முறையாக எழுதப்படுகிறதா என்றால் இல்லை. கடந்த சில ஆண்டுகளாக பல நல்ல புத்தகங்கள் புகழ்பெற்ற சமூகநல ஆர்வலர்களாலும், மதசார்பற்றவர்களாலும், இந்த வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களாலும் எழுதப்பட்டுள்ளன. தீவிரவாத வழக்குகளில் முஸ்லிம் இளைஞர்களை பொய்யாக சிக்க வைப்பது, மனிதத்தன்மையற்ற சித்ரவதைகளில் அவர்களை ஈடுபடுத்துவது, அவர்களுக்கு

# பிராமணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள் முஸ்லீம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்




- எஸ்.எம். முஷ்ரிப்

எதிராக பொய்யான சாட்சியங்களை கையாள்வது, பிராமனிஸ்டுகளுக்கு எதிராக உள்ள மிக உறுதியான ஆதாரங்களைக்கூட தவிர்ப்பது, விட்டுவிடுவது, நீதிமன்றத்தின் கண்டனத்திற்கும் கண்டிப்பிற்கும் உள்ளான தவறான காவல்துறை அதிகாரிகளை தண்டிக்காமல் விட்டு வைப்பது, காவல்துறையின் ஒருதலைப்பட்சமான போக்கு, இந்த சமூகத்தின் ஒருதலைப்பட்சமான போக்கு, ஆட்சி முறை, நீதித்துறையின் சில பகுதிகள், சில வழக்குகளில் மறு விசாரணை செய்யப்பட்ட போது அந்த வழக்குகளில் பிராமனிஸ்டுகளின் தொடர்பு இருந்தது கண்டறிப்பட்டது போன்றவை குறித்து மிக விரிவாக எழுதியுள்ளன.

இந்த புத்தகம் இன்னும் ஓர் அடி ஆழமாக செல்கிறது. ஹேமந்த் கர்கரேவால் உண்மைகள் வெளிப்படுத்தப்பட்டப்பின் மறுவிசாரணை செய்யப்பட்ட வழக்குகளில் மட்டுமோ அல்லது குண்டுவெடிப்பு தாக்குதல் நடத்துவதற்காக தயாரித்த போது தானாக வெடித்து அதன் மூலம் உண்மைகள் வெளியான வழக்குகளில் மட்டுமோ அல்ல, இன்னும் ஆண்டுக்கணக்காக முஸ்லிம் இளைஞர்கள் மீது நிலுவையில் உள்ள வழக்குகளிலும் இன்னும் நீதிமன்றத்தால் முஸ்லிம் இளைஞர்கள் குற்றவாளிகள் என தண்டனை உறுதிசெய்யப்பட்டு, பிராமனிஸ்டுகள் நிரபராதிகள் என தீர்ப்புகள் வழங்கப்பட்ட வழக்குகளிலும் பிராமனிஸ்டு சக்திகளே அந்த குண்டுவெடிப்புகளுக்கு காரணம் என அறிவியல் பூர்வமான மறுக்கவியலாத ஆதாரங்களின் அடிப்படையில் இந்த புத்தகம் கூறுகிறது.

இருப்பினும் இந்த புத்தகத்தின் ஆன்மாவாக அத்தியாயம் 5 முதல் 10 வரை உள்ள அத்தியாயங்கள் ஆறு நீதிமன்ற வழக்குகளின் தீர்ப்புகளை விமர்சன பகுப்பாய்வு செய்துள்ளது. அதில் நான்கு வழக்குகளில் முஸ்லிம் இளைஞர்கள் அவர்களுக்கு எதிராக நம்பத்தகுந்த சாட்சியங்கள் இல்லாதபோதிலும் குற்றவாளிகள் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. 2006 மும்பை புறநகர் வெடிகுண்டு வழக்கு, 2006 வெடிகுண்டுகள் ஆயுதங்கள் குவியல் வழக்கு, ஜெர்மன் பேக்கரி வெடிகுண்டு (புனே 2010) வழக்கு மற்றும் 2013 தில்சுக்நகர் (ஹைதராபாத்) வெடிகுண்டு வழக்கு ஆகிய நான்கு வழக்குகள். அதைத் தவிர்த்து இரண்டு வழக்குகளில் மிகத் தெளிவான பலமான சாட்சியங்கள் இருந்த போதினும் பிராமனிஸ்டுகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். 2003ல் நடந்த முஹம்மதியா மஸ்ஜித் பர்பானி மற்றும் 2007இல் நடந்த மக்கா மஸ்ஜித் (ஹைதராபாத்) வழக்குகள் தான் அவை.

விசாரணை நிறுவனங்கள் தரப்பு, வழக்கு நடத்தியவர்கள் (வழக்குரைஞர்கள்) தரப்பு ஆகியவை மட்டுமன்றி நீதிமன்றங்களும் இந்த வழக்கில் விட்டு விட்ட, சேர்த்திருக்க வேண்டிய விஷயங்கள் குறித்து நான் கீழ்கண்டவாறு விவரித்துள்ளேன்.

## 1. மும்பை புறநகர் இரயில் தொடர்குண்டு வெடிப்பு வழக்கு 2006

(அ) குற்றம் சாட்டப்பட்டவர்களில் சிலர் சமர்ப்பித்த அறிவியல்பூர்வ சாட்சியமான அவர்களது கைபேசிகளின் அழைப்பு அறிக்கைகள் (call detail record ) நீதிமன்றத்தால் கைபேசி ஒரு நபரின் உடல் உறுப்புகள் அல்ல என்ற காரணம் காட்டி ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

(ஆ) குற்றம் சாட்டப்பட்டவர்களின் சாட்சியத்தை உறுதிபடுத்தும் வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் வேண்டுமென்றே வழக்கை நடத்தியவர்களால் நீதிமன்றத்தின் பார்வைக்கு கொண்டு வரப்படவில்லை. நீதிமன்றமும் அந்த ஆதாரங்களை சமர்ப்பிக்க வலியுறுத்தவில்லை.

(இ) முக்கியமான கண்ணால் பார்த்த சாட்சியங்களான அந்த இரயிலில் பிரயாணம் செய்தவர்கள், கார் ஓட்டுனர்கள் போன்றோரின் கைபேசி அழைப்பு அறிக்கைகள் (call detail record) சரிபார்க்கப்படவில்லை. நீதிமன்றமும் அவர்களின் எண்களை வெளிப்படுத்துவதை மறுத்துவிட்டது.

(ஈ) இரயிலின் எண் மற்றும் அதன் நேரம் குறித்து இரயில்வே துறைகளில் கணினி மூலமாக தயாரிக்கப்படும் பிரயாண அட்டவணைகள் நம்பப்படவில்லை. அதற்கு பதிலாக சாட்சியின் வாய்வழி சாட்சியம் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

(உ) குற்றம் சாட்டப்பட்டவர்களின்

ஒப்புதல் வாக்குமூலம், அவர்கள் அதனை மறுத்து விட்ட நிலையிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(ஊ) குற்றம் சாட்டப் பட்டவர்களின் மருத்துவ அறிக்கைகள் அவர்கள் சித்ரவதை செய்யப்பட்டி ருப்பதை தெளிவாக சுட்டிக் காட்டிய பின்னரும் அவை நீதிமன்றத்தில் கருத்தில் கொள்ளப்படவில்லை.

(எ) அவுரங்காபாத்தில் வசித்து வரும் கணேஷ் காண்டெராவ் என்றொருவர் ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர். இவர் இவ்வழக்கில் மிகத் தீவிரமாக சந்தேகிக்கப்பட்டும் விசாரிக்கப்பட வேயில்லை.



(ஏ) வெடிகுண்டுகளை வெடிக்க வைக்கப் பயன்படுத்தப்பட்ட கைபேசிகளின் எண்களை கண்டறிவதற்கான எந்த முயற்சியும் மேற் கொள்ளப்படவில்லை. குண்டுவெடிப்புகள் நிகழ்த்தப்பட்ட இடத்திற்கு அருகில் உள்ள செல்போன் கோபுரங்களின் தகவல் சேமிப்பு கிடங்கில் இருந்து இந்த தகவலை எடுத் திருக்கலாம்.

எனினும், நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்ட 13 முஸ்லிம்களில் 12 பேருக்கு தூக்கு மற்றும் ஆயுள் தண்டனை விதித்தது.

## 2. ஜெர்மன் பேக்கரி (புனே) வெடிகுண்டு வழக்கு 2010

(அ) மும்பை புறநகர் இரயில் வெடிகுண்டு வழக்கை போலல்லாமல் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஹிமாயத் பேக் என்பவரின் இரண்டு கைபேசிகளின் தொலைபேசி அழைப்பு அறிக்கைகள் (call detail record ) அறிவியல் பூர்வமான ஆதாரங்களாக நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் குற்றம் சாட்டப்பட்டவரின் இயக்கங்களை (ஓரிடத்தி லிருந்து வேறோர் இடத்திற்கு சென்றதை) தொலைபேசி அழைப்பு அறிக்கைகளின் படி ஆய்வு செய்ததில் அது காவல்துறையினர் சொன்ன கதையோடு ஒத்துப்போகவில்லை. ஆனால் அதனை நீதிமன்றம் காவல்துறை யினர் உருவாக்கிய இரண்டு சாட்சியங்களின் வாயிலாக நிராகரித்தது. வெளிப்படையாக காவல்துறையால் உருவாக்கப்பட்ட அந்த இரண்டு சாட்சிகளும் குற்றம் சாட்டப்பட்ட வரின் கைபேசிகளை அந்த குறிப்பிட்ட வெடிகுண்டு தாக்குதல் நிகழ்த்தப்பட்ட நேரங் களில் தாங்கள் வைத்திருந்ததாக கூறியதை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

(ஆ) தேசிய பாதுகாப்புப்படையினரும் (National Security Guard) தடயவியல் அறிவியல் ஆய்வகமும் (Forensic Science Laboratory) வெடிகுண்டுகளை வெடிக்க வைக்க ரிமோட் கண்ட்ரோலுடன் கூடிய கைபேசி பயன்படுத் தப்பட்டுள்ளது என தங்களுடைய கருத்தை தெரிவித்திருந்தன. இந்த கருத்து உண்மை என்பதை குண்டுவெடித்த இடத்தின் பள்ளத்தில் கண்டெடுக்கப்பட்ட ஏர்டெல் நிறுவனத்தின் சிம் கார்டு உறுதி செய்தது. ஆனால் உண்மை குற்றவாளிகளின்பால் அழைத்து செல்லக்கூடிய இந்த அறிவியல் ஆதாரத்தின் அடிப்படையில் விசாரணையை நடத்துவதை விட்டுவிட்டு குண்டுவெடிப்பு நிகழ்ந்த இடத்தில் கண்டெடுக் கப்பட்ட கைபேசியின் பின்புற கவரை ஆதாரமாக குற்றம் சாட்டப்பட்ட முஸ்லிமுக்கு எதிராக பயன்படுத்தியது.

*(இ) மட்காவூன் (கோவா) என்ற இடத்தில் 2009இல் நடந்த குண்டுவெடிப்பில் தொடர் புடைய சரங் குர்கர்னி என்பவன் இவ்வழக்கில் மிகத்தீவிரமாக சந்தேகிக்கப்பட்டான். ஆனால் அவனை தேடிக்கண்டுபிடிக்க எந்த தீவிர முயற்சியும் மேற்கொள்ளப்படவில்லை. அவன் இன்னும் தலைமறைவாகத்தான் இருக்கிறான்.*

*(ஈ) ஆர்.டி.எக்ஸ் எங்கிருந்து கிடைத்தது என்பது கண்டறியப்படவில்லை. அப்படி ஒருவேளை கண்டறியப்பட்டிருந்தால் இந்த விசாரணை லெட்டினன்ட் கர்னல் புரோகித்தை நோக்கி அழைத்து சென்றிருக்கும். ஏனெனில் அந்த நேரத்தில் அவரிடம் மட்டும் தான் அவ்வளவு அதிக அளவில் ஆர்.டி.எக்ஸ் கையிருப்பில் இருந்தது.*

இவ்வளவு விஷயங்கள் தீவிரமாக ஆய்வுக்கு நிலுவையில் இருக்க சேர்க்க வேண்டியவைகளும் நீக்க வேண்டியவைகளும் நிலுவையில் இருக்க விசாரணை நீதிமன்றம் இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒரேயோரு நபரான ஹிமாயத் பேக் அவர்களுக்கு தூக்கு தண்டனை வழங்கியது.

## 3. வெடிகுண்டுகள் மற்றும் ஆயுதங்களின் குவியல் - அவுரங்காபாத் 2006

*(அ) இந்த வழக்கில் காவல்துறையினர் வாதத்திற்கு அடிப்படையான, வெடிகுண்டு களையும் ஆயுதங்களையும் கடத்தி வந்த டாடா சுமோ வாகனத்தை துரத்தி சென்று இடைமறித்து கைப்பற்றியதாக சொன்ன வாதம் தீவிரவாதத் தடுப்புப்படையின் உதவி ஆணையாளர் கிஷன் சிங்கால் என்பவரின் சாட்சியத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு உண்மைப்படுத் தப்பட்டது. ஆனால் அவரின் நம்பகத் தன்மை யும் மதச்சார்பின்மையும் சந்தேகத்திற்கிட மானது. இவர் நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணை யின் போது மிக மோசமாக அம்பலப்படுத்தப் பட்டார்.*

*(ஆ) இந்த வாகனத்தை துரத்தி சென்றதாக கூறப்பட்ட காவல்துறை அதிகாரிகளின் கைபேசி அழைப்புகளின் அறிக்கைகள் அவர்கள் துரத்தி சென்றது உண்மை தானா என்பதை அறிய ஆய்வு செய்யப்படவில்லை.*

*(இ) ஆயுதங்களோடு கைப்பற்றியதாக சொன்ன டாடா சுமோ நீதிமன்றத்திலும் ஒப்படைக்கப்படவில்லை. ஆர்.டி.வோ எனப்படும் பிராந்திய போக்குவரத்து அலுவரால் ஆய்வு செய்யப்படவுமில்லை.*

*(ஈ) ஆயுதங்களையும் வெடிகுண்டுகளையும் கொண்ட மற்றொரு டாடா இண்டிகா வாகனம் மூன்று நாட்களுக்கு பிறகு அதாவது 2006ம் ஆண்டு, மே மாதம் 12ம் தேதி கண்டு பிடிக்கப்பட்டதாக காவல்துறையால் கூறப்பட் டது. ஆனால் அந்த கார் வேறோரு நம்பர் பிளேட்டை கொண்டிருந்தது. அந்த வாகனத் தின் உரிமையாளரின் பெயர் வெளிப்படுத்தப் படவில்லை. இந்த வாகனத்தில் பொருத்தப் பட்டிருந்த நம்பர் பிளேட்டிற்கு சொந்தமான வாகனம் குறித்து எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை.*

*(உ) 9 மே 2006 அன்று நடந்த பத்திரிகை யாளர் சந்திப்பொன்றில் காவல்துறையின் மூத்த அதிகாரிகள் டாடா சுமோவும், டாடா இண்டிகாவும் (இது 12 மே 2006இல் தான் கண்டுபிடிக்கப்பட்டது) 9 மே 2006 அன்றே கைப்பற்றப்பட்டதாக கூறினார்கள்.*

*(ஊ) இதையெல்லாம் சுதந்திரமாக ஆய்வு செய்து உறுதிப்படுத்திக்கொள்ளாத நீதிமன்றம் வெவ்வேறு குற்றம் சாட்டப்பட்டவர்களின் ஒப்புதல் வாக்குமூலங்களை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு குற்றத்தை உறுதிபடுத்துவதாக ஏற்றுக்கொண்டது.*

*(எ) யார் இந்த வழக்கில் தீவிரமாக சந்தேகிக்கப்பட்டிருக்க வேண்டுமோ யாரிடம் இவ்வளவு அதிக அளவிலான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கையிருப்பில் இருந்ததோ அந்த லெட்டினன்ட் கர்னல் புரோகித்-ஐ இந்த வழக்கு விசாரணையில் தங்களுக்கு உதவி செய்ய தீவிரவாதத் தடுப்புப்படையினர் சம்மன் அனும்பி இருந்தனர்.*

**இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 12 முஸ்லிம்களுக்கு 8 வருடத்திலிருந்து ஆயுள் தண்டனை வரை தீர்ப்பளிக்கப் பட்டது.**

**- அடுத்த இதழில் தொடரும்**

சிலுவைப் போர்கள் 2.0




# உலகெங்கும் முஸ்லிம்களை அழிக்கும் தொழில்

**புகுமுன்....**

**உலகம், இஸ்லாமோ போஃபியாவின் உச்சத்தில் இருக்கின்றது. அதனால் உலகெங்கும், முஸ்லிம்களை அழிக்கும் தொழில் நித்தமும் நடந்துகொண்டிருக்கின்றது. இஸ்லாமோ போஃபியா என்பது இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்களின் மீதும் வெறுப்பை வளர்ப்பதாகும்.**

இந்த வெறுப்பை வளர்ப்பது உண்மையைச் சொல்லி அல்ல. மாறாக, முஸ்லிம்கள் மீதும், இஸ்லாத்தின் மீதும் இல்லாத பொல்லாத பொய்களை இட்டுக்கட்டியே செய்யப்படுகின்றது.

இது ஏதோ, அங்கொன்றும், இங்கொன்றுமாக செய்யப்படும் ஒய்வு நேர பொய்ப் பிரச்சாரமாகும். அத்தோடு நில்லாமல் பெரிய அளவில் பணம், இதற்காக பொய்யையும், புனைந்துரைகளையும், பரப்புவதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

இதற்காக ஐரோப்பாவெங்கும் ஆயிரக் கணக்கான அறக்கட்டளைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

உண்மையைச் சொன்னால், ஒரு குடிசைத் தொழிலாகத்தான் இது தொடங்கப்பெற்றது. ஆனால் இன்று அது மிகப்பெரிய ஆலையாக கோடிக்கணக்கான டாலர்களை கொட்டும் தொழிலாக அது ஆக்கப்பட்டு விட்டது.

அதாவது, இஸ்லாத்தின் மீதும் முஸலிம்கள் மீதும் வெறுப்பை வளர்க்கும் இந்தப் பொய்ப் பிரச்சாரங்களுக்கு கோடிக்கணக்கான டாலர்கள் செலவு செய்யப்படுகின்றன.

ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் பள்ளிப் பாடங்கள் இந்த அடிப்படையிலேயே நடத்தப்படுகின்ற. பல்கலைக் கழகங்களில் பாடங்கள், இந்த அடிப்படையிலேயே நடத்தப்படுகின்றன.

ஆய்வுகளைச் செய்யும், மாணவர்களுக்கும், ஆராய்ச்சிகளைச் செய்யும், மாணவர்களுக்கும், இஸ்லாத்தின் மீது பொய்களையும், புனைந்துரைகளையும் எப்படியெல்லாம் இட்டுக் கட்டும் என்பதையே ஆய்வாக நடத்துங்கள் எனச்சொல்லி பணத்தையும், இதர வசதிகளையும் அள்ளிக் கொட்டுகின்றார்கள்.

பின்னர் பொய்களையும் புனைந்துரைகளையும் இட்டுக்கட்டுபவர்களுக்கு அமைதியான விருதுகளும், சன்மானங்களும் அள்ளி வழங்கப் படுகின்றன. பின்னர், இவை நூல்களாக ஆக்கப்படுகின்றன. கதைகளாகக் கட்டமைப் படுகின்றன. திரைப்படங்கள் தயாரிக்கப்படு கின்றன. அந்தத் திரைப்படங்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

அடுத்துத் தாங்கள் சொன்ன பொய்களை, புனைந்துரைகளை உண்மையாக்கிட செயல் திட்டங்கள் வகுக்கப்படுகின்றன. குண்டுகள் வைக்கப்படுகின்றன. அப்பாவிகள் கொலை செய்யப்படுகின்றார்கள். குண்டுகளை வைப்ப வர்கள், அந்தந்த நாட்டில் இயங்கும் இஸ்லாமோ போஃபியாவை வளர்த்துக் கொண்டிருக்கும் அமைப்புகள்தாம். அத்தோடு அந்தந்த நாட்டு உளவுத்துறையும் கைகோத்துக் கொள்கின்றன.

குண்டு வைக்கும், அமைப்புகள், அவற்றின் தொண்டர்கள், இவர்களெல்லாம் காப்பாற் றப்பட்டு விடுகின்றனர். இந்த குண்டு வெடிப்பு களில் அரசு அதிகாரிகளுக்கு பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றன.

நம் நாட்டில் டாவேந்தர் சிங் என்பவர்தான் 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13-ம் தேதி நடந்த நாடாளுமன்ற தாக்குதலுக்குத் தேவை யான ஏற்பாடுகளைச் செய்தார். 2019-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் கஷ்மீர் புல்வாமா தாக்குதலுக்கும் ஏற்பாடு செய்தார். 2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம்-26 அன்று குடியரசு தினத்தன்று ஒரு பெரும் தாக்குதலுக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்த போது அவர் பிடிபட்டார்.

ஆகவே இஸ்லாத்தின் மீதும், முஸ்லிம்கள் மீதும் வெறுப்பை வளர்க்கும் முயற்சியின் நடைமுறை ஏற்பாடுகள் இவை. பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்ற அடிப்படை யிலேயே இதைச் சொல்லுகின்றோம்.

இப்படி கோடிக்கணக்கான டாலர்களின் செலவில் லட்சக்கணக்கான மனித ஆற்றல்கள், ஊடகங்களுக்கு அள்ளி வழங்கும் பணம், இவற் றின் வழியாக வளர்க்கப்படுவதே இஸ்லாமோ போஃபியா என்ற இஸ்லாத்தின் மீதும் வளர்க்கப் படும் வெறுப்புக்கள்.

இந்த வெறுப்புப் பிரச்சாரத்தை முனை மழுங்கச் செய்வதே, முஸ்லிம்களின் தலையாயப் பணி. இந்த சதிகளை அம்பலப்படுத்தி, மக்கள் மன்றத்தில் மனித இனத்தின் உண்மையான எதிரிகள் யார்? என்பதைத் தோலுரித்துக் காட்டிட வேண்டும். அப்போது மட்டுமே உலகெங்கும் வியாபித்து நிற்கும், இஸ்லாமோ போஃபியாவை நாம் வேறறுக்க முடியும். இதனை அமெரிக்க முஸ்லிம்களும், ஆங்கில நாடான பிரிட்டன் வாழ் முஸ்லிம்களும் வெற்றிகரமாகச் செய்து வருகின்றனர்.

இப்படி இஸ்லாத்தின் மேல் பாய்ச்சப்படும், பரப்பப்படும் வெறுப்பை வீழ்த்தும் பெரும் பணியில் முஸ்லிம்களின் அடிப்படைக் கடமை யாகிய தாஃவாவும் நடந்து வருகிறது. இதனால் மிகவும் வேகமாக வளர்ந்து வருகின்றது. மேலை நாடுகளில் அல்ஹம்துலில்லாஹ். இதற்கு ஜான் பெஃபர் அவர்களின் இந்த நூல் இஸ்லாத்திற்கு எதிரான சதிகளை நமக்கு அம்பலப்படுத்துகின்றது.

**இப்போது ஜான் பெஃபர் அவர்கள் கூறுவதைக் கேட்போம்...**

**ஜான் பெஃபர் அவர்கள் கூறுவதன் தொடர்ச்சி....**

## உலகம் தழுவிய கிலாபத்

இஸ்லாம் இயல்பாகவே வன்முறையானது; என்பது நமது மேலை நாட்டவர்களின் பிரச்சாரம். இது மேலை நாட்டவர்களின் கலாச்சாரத்திலும் இரண்டற கலந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக நாம் ஓர் அடிப்படை விதியை மக்கள் மனங்களில் விதித்து வருகின்றோம். அது, இஸ்லாம் ஒருநாள் இந்த உலகத்தை ஆட்கொண்டுவிடும் என்பதே!

1095-களில் முதல் சிலுவைப்போரைத் தொடங்கிய போப் அர்பன் II அவர்கள் இப்படிப் பிரகடனப்படுத்தினார். "நமக்கு சொந்தமான இந்தச் சிறிய உலகை, போர்க்குணம் கொண்ட துருக்கியர்களும் சாராசன்ஸ் (அரபுக்களும் எடுத்துக்கொள்வார்கள் போலிருக்கின்றது. ஸ்பெயின்-ஐயும் பால்பேர்க் தீவுகளையும் அவர்கள் முன்னூறு ஆண்டுகளாக ஆட்சி செய்து வருகின்றார்கள். அவர்கள் மீதி உள்ள உலகையும் கையகப்படுத்திடலாம்" என்ற

பீதியில் வாழ்ந்து வருகின்றார்கள். (Source : Noted in Karan Arms Strong Holy war, Page-207)

ஜான் பெஃப்பர் மேலும் கூறுகின்றார்

"தொடக்க நாள்களில் இஸ்லாமிய உலகம் தங்கள் தாருல் இஸ்லாம். இஸ்லாத்தின் வீடு, விரிந்து கொண்டே செல்லும் என எதிர்பார்த் தார்கள். ஆனால் சிலுவைப் போர்களின் தொடக் கத்தின் போது, அவர்களில் ஆரம்ப உற்சாகம் தொய்வைக் கண்டிருந்தது. ஐபீரிய தீபகற்பத் தின் கோலோச்சிக் கொண்டிருந்த இஸ்லாம் அதன் உச்சத்திலிருந்து வீழத் தொடங்கி இருந் தது. கிலாபத்தின் அதிகாரம் இத்தாலியில் செல்லுபடியாகாத நிலைக்கு வந்திருந்தது. அவர்கள் புதிதாகப் பிடித்த இடங்களில் வீழ்ந்தவர்கள் முஸ்லிம்களாக இருந்தார்கள். செஜ்லூக் முஸ்லிம்கள், ஜெரூசலத்தையும் இதர நகரங்களையும் முதலில் முஸ்லிம்களிடமிருந்து தான் கைப் பற்றினார்கள்.




*1099*-இல் இஸ்லாமிய உலகம் பலவாறாகப் பிரிந்துக் கிடந்தது. முதல் சிலுவைப் போரின் போது ஜெரூசலம் அவர்களின் கைகளை விட்டுப்போய்விடும் போலிருந்தது. அந்த நிலையில் ஜெரூசலத்தை மீட்கவும், எதிரிகளைத் திருப்பித் தாக்கவும் ஒன்று படுங்கள் என முஸ்லிம்களில் சிலர் முஸ்லிம் உலகைப் பார்த்து அழைப்புகளை விடுத்தார்கள். ஆனாலும் முஸ்லிம்கள் ஒன்றுபடவில்லை.

(Source : The Clash of Fundamentalis by Thiqalil New York. Verso 2002, Page-39,40)

முஸ்லிம் உலகம் இப்படிச் சிதறுண்டுக் கிடந்த நேரத்திலும் பெர்நார்டு லூயாஸ் போன்ற கிருஸ்தவ அறிஞர்கள். இஸ்லாம் உலகைத் தன் இருக்குப் பிடிக்குள் வைத்துக்கொள்ள முயற்சி களை மேற்கொண்டு வருகிறது. என்பதைப் பரப்பிக் கொண்டே இருந்தார்கள். (Source : Bernaro Lewis : University Press 2010, Page-15)

அதே நேரத்தில் கிறிஸ்தவ உலகம், உலகன் மூலை முடுக்குகளிலொம் தன் ஆதிக்கம் நிலை நாட்டப்பட வேண்டும், எதை துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தது.

கிருஸ்தவத்தைப் பரப்பிட வேண்டும் என உற்சாகப்பட்டவர்களாக அவர்கள் இருந்தார்கள். இது அவர்களை செயல்களத்தில் நிலைத்திருக்க உதவியது.

சார்மிலான் என்பவர் ஐரோப்பாவை முடிந்த அளவுக்கு இஸ்லாத்திற்கு மாற்றிக் கொண்டிருந்தார். இதில் அவர் ஓர் ஆக்கிரமிப்பு மனப்பான்மையுடன் நடந்து கொண்டார். முதல் சிலுவைப் போருக்கு முன்னால் யூதர்களை கிருஸ்தவத்திற்கு கட்டாய மதமாற்றம் செய்யும் பணிகள் நடந்தேறின. பிரான்சிஸ்கேன், டோமினியன் என்ற இரண்டு கிருஸ்தவ பிரச்சார இயக்கங்கள் *13*-ஆம் நூற்றாண்டில், இஸ்லாத்தை முஸ்லிம் நாடுகள் பிரச்சாரம் செய்வதில் மும்முரமாகச் செயல்பட்டன.

ஐந்தாவது சிலுவைப் போரின்போது, அகிகி-யைச் சார்ந்த பிரான்சிஸ் என்பவர், சுல்தான்-அல்-காமில் என்பவருடன் பேச்சு வார்த்தைகளை நடத்தினார். கிருஸ்தவ முஸ்லிம் நாடுகளில் பரப்பிட முகாந்திரங்களைத் தேடி அத்தோடு முஸ்லிம்கள் அத்தனை பேரையும் கிருஸ்தவத்திற்கு மாற்றி சிலுவைப் போரை முடித்துவிடலாம் எனவும் கருதினர்.

இடைக்கால வரலாற்றில் முஸ்லிம்களின் பெருந்தன்மைகளைப் பற்றிப் பேசுபவர்கள் சற்று மிகைப்படுத்தி பேசி இருக்கலாம். ஆனால், முஸ்லிம்களின் ஆட்சியில் கீழ் எல்லா மத நம்பிக்கை உடையவர்களும், மத அமைதியுட னும் மன அணியுடனும் வாழ்ந்தார்கள் என்பதில் எந்த ஐயமுமில்லை. கிருஸ்தவர்களும், யூதர் களும் திம்மிகள் என்ற அந்தஸ்தில் பாதுகாப்பு வரியை செலுத்தி பாதுகாக்கப்பட்டவர்களாக வாழ்ந்தார்கள். ஆனால்அவர்கள் தங்கள் மத நம்பிக்கையயைச் செயல்படுத்துவதில் எந்தத் தடையும் இருக்கவில்லை. அதேபோல் அவர்கள் விரும்பும் தொழிலையும், அவர்கள் சுதந்திரமாகச் செய்தார்கள்.

– இன்ஷா அல்லாஹ் தொடரும். **- MGM**



# மௌலானா ஆசாதின்

# இந்திய சுதந்திரப் போராட்டமும் நம் தலைவர்களின் நடுநிலை மாறாமலும்


## ஹாஜி பி.எம். அப்துல் கரீம், குளச்சல்


மௌலானா அபூல் கலாம் ஆஸாத் சுதந்திரம் பெறுவதற்கு பத்து, இருபது ஆண்டுகளிற்கு முன்பு தலைவர்களாக இருந்த வர்களின் அணுகுமுறையை ஒளிவுமறைவின்றி எழுத்தில் தீட்டியவர் என்பது அவரின் 'இந்தியா விடுதலை வெற்றி' என்ற பறை சாற்றுகிறது.

இந்திய சுதந்திரத்தில் முன்னணி போராளி பத்து பேரில் அவர் ஒருவர். காந்திக்கு அடுத்து ஜவஹர்லால் நேருக்கு நிகராக விளங்கியவர். இந்திய தேசிய காங்கிரஸின் தலைவராக பல ஆண்டுகள் இருந்தவர். சுதந்திர இந்தியாவின் முதல் கல்வி அமைச்சர். 'அல்ஹிலால்' பத்திரி கையின் ஆசிரியர். குர்ஆனை மொழிப் பெயர்த் தவர். பத்து வயதில் குர்ஆனை மனனம் செய்த ஹாபிஸ். முதலாவது கலீபா அபூபக்ர் குடும்ப பெண்ணை இந்திய மார்க்க அறிஞர் மணந்து அத்தம்பதிகளுக்கு மகவாக மக்காவில் பிறந்தவர். எகிப்து 'அல்அஸ்ஹர்' பல்கலைக்கழகுத்தில் பயின்றவர். ஓர் சிறந்த அறிவாளி. இயற்பெயர் முஹியித்தீன் அஹ்மது. சிறப்புப் பெயர் ஆசாத்.

ஆசாதின் செயலாளரும் இந்திய பண்பாட்டு ஆய்வாளருமான ஹீமாயூன்கபீர் ஆசாத் சொல்ல சொல்ல தன் வரலாற்றை எழுதிய நூல் 'இந்தியா விடுதலை வெற்றி' என்ற நூலாகும். இந்நூல் தமிழில் 'அடையாளம்' பதிப்பகம் வெளியிடப்பட்டுள்ளது.

ஆசாத் என்றால் சுதந்திரமானவன் என்பது பொருள். இப்பெயருக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் ஆசாத். அவர் எழுதிய இந்நூலை தம் தோழர் ஜவஹர்லால் நேருவுக்கு சமர்ப்பணம் செய்திருக்கிறார்.

காந்தியை தலைவராக ஏற்ற ஆசாத் காந்தியின் எல்லா முடிவையும் ஏற்காதவர். காந்திஜி சொன்னார் என்பதற்காக பட்டேலும், இராஜாஜியும் ஏற்ற கருத்துக்களை ஆசாத் எதிர்த் துள்ளார். 1905-ஆம் ஆண்டு வங்க பிரிவினை இந்த முஸ்லீமை பகை மூட்ட ஆங்கிலேயர் செய்த சதி என கடுமையாக எதிர்த்தார். பத்திரிகை மூலம் ஆங்கிலேயரை அச்சமடையச் செய்ய ஆங்கில அரசு அவரை கைது செய்தது.

காந்திஜி ஒத்துழையாமை இயக்கத்தை ஆரம்பித்தபோது ஆசாத் அவரோடு சுற்றுப் பயணம் செய்து மக்களிடையே சுதந்திர வேட்கையை ஏற்படச் செய்தார்.

காங்கிரஸின் மாபெரும் தலைவர்களுக் குள்ளே கருத்து மாறுபாடுகள் ஏற்பட்டு சி.ஆர்.தாஸ், மோதிலால் நேரு, ஹக்கீம் அஜ்மலகான் போன்றோர் சுயராஜிய கட்சியை ஆரம்பித்தார்கள். சட்டசபையை கைப்பற்றி சிங்கத்தை அதன் குகையிலே பிடிப்பது என்ற போரை தொடங்கினார்கள். இந்நேரம் ஆஸாத் சிறையிலிருந்தார்.

மௌலானா ஆஸாத் சிறையிலிருந்து வெளியே வந்ததும், காங்கிரஸ் தலைவர்களையும் சுயராஜிய கட்சியினரையும் ஒற்றுமையாக்கி ஒன்றுபடுத்தினார். அப்போது அவருக்கு வயது 35. காங்கிரஸ் இயக்கத்தின் தலைவரானார். மீரட்டில் வைத்து ஆஸாத் கைது செய்யப்பட்டு 18 மாத சிறைத் தண்டனைப் பெற்றார்.

1935-ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டம் நிறைவேறியது. மாகாண சுயாட்சி மத்தியில் பெடரல் ஆட்சிக்கும் அது ஏற்பாடு செய்தது. காங்கிரஸ் கவர்னரின் அதிகாரம் அதிகமாக இருந்ததை விரும்பவில்லை. பீகாரிலும் பம்பா யிலும் காங்கிரஸ் கண்ணியமாக நடக்கவில்லை என்ற தன் மனக்குமுறலை 'இந்தியா விடுதலை வெற்றி'யில் தெளிவுபட எழுதியுள்ளார்.

பம்பாயில் பெரும் தலைவர் நாரிமன் மாகாண அரசை அமைப்பதை சர்தார் படேல் விரும்பவில்லை. காரணம் நாரிமன் பார்சி தலைவர் என்பதால் - நேரு பட்டேலை பகைக்க விரும்பவில்லை. நாரிமன் அரசியலை விட்டு விலகினார்.

பீகாரில் பெரும் தலைவர் டாக்டர் செய்யித் முகம்மது தலைவராக வர வேண்டியவரை இராஜேந்திர பிரசாத் பட்டேலை போல செயல் பட்டார். அதனால் டாக்டர் செய்யது முகம்மது இல்லாமலானார். இம்மாதிரி அன்றைய தலைவர்களிடம் குறுகிய மனப்பான்மை காணப்பட்டதை வேதனையோடு பதிவு செய்துள்ளார் ஆஸாத்.

தேச பிரிவினையின் முதல் வித்தை காங்கிர ஸாரே ஊன்றியதை ஆஸாத் மிக ஆழமாக எழுதிக் காட்டுகிறார்.

வங்காளத்தில் முஸ்லிம்கள் அதிகம். ஆனால், கல்வி கேள்விகளில் மிகவும் பிற்படுத்தப்பட் டிருந்தனர். சி.ஆர்.தாஸ் இந்நிலைமையை அறிந்த வங்கத் தலைவர் "அதிகாரம் காங்கிரஸ் கைக்கு வந்தால் புதிய வேலை வாய்ப்பில் நியமனம் முஸ்லீம்களுக்கு 60% என்றார். இராஜாஜியும், ராஜேந்திர பிரசாத்தும் குற்றம் சாட்டி சி.ஆர்.தாஸை கீழே இறக்கினார்கள். சி.ஆர்.தாஸ் மரணமடைந்தார். காங்கிரஸாரும் அவரை ஒதுக்கினர். பிரிவினையின் முதல்வித்து ஊன்றப்பட்டது.

பத்தாண்டுகளில் காந்திக்கு எதிராக இருந்த நேரு, ஆஸாத்தின் பக்கம் நின்றார். ஆஸாதின் நட்பையும் சிலபேர் பகைமூட்டினார்கள். அதனால் அதிருப்தியுற்று ஆஸாத் ஏற்பட்ட மன வேதனையை பதிவு செய்துள்ளார். நேரு அந்நிலையை தன்னிடம் சொன்னதை ஆஸாத் நேரு தன்னிடம், பிறகு வருந்தியதாக எழுதி யுள்ளார். மேலும் நேரு வருந்தியதை அவரை விட தான் வேதனைப்படுவதாக பதிவு செய்துள் ளார். பெரியோர்கள் பெரியோர்களே!

ஆஸாத் மூன்றாண்டு சிறை வாசம் முடித்து காரில் வீடு நோக்கி வரும்போது ஹவ்ரா பாலத்தின் மீது வண்டி வரும்போது ஆஸாதின் மனதில் பழைய நினைவு வருகிறது. மூன்றாண்டு களுக்கு முன்பு காங்கிரஸ் கூட்டத்திற்கு அவர் புறப்படும் போது வீட்டு வாசலில் அவர் மனைவி அவருக்கு விடை கொடுத்தது நினைவுக்கு வருகிறது.

மூன்றாண்டு கழிந்து இப்போது திரும்பு கிறேன். ஆனால் என் மனைவி கல்லறையில் உறங்குகிறாள். என் வீடு சூனியமாக இருக் கிறது. வொர்ட்ஸ் வொர்த்தின் கவிதை வரிகள் என் நினைவுக்கு வருகிறது. ஆ....அவள் கிடக் கிறாள் கல்லறையில் என் வாழ்வில் தான் என்ன மாறுதல்...!

காரை திருப்பிவிடுமாறு கூற இருந்தவர்களை கேட்டேன். வீட்டுக்கு போவதற்கு முன் அவளது கல்லறைக்கு செல்ல விரும்புகிறேன். கார் நிறைய இருந்த மாலைகளில் ஒன்றை எடுத்து அவளது கல்லறை மீது சமர்ப்பித்தேன். மவுனமாக 'பாத்திஹாவை' ஓதினேன் என எழுதியுள்ளார்.

சுதந்திரம் சும்மா வரவில்லை. மகத்தான மனிதர்கள் செய்த தியாகங்களால் பெற்றதாகும். நான் வியாபாரம் நிமித்தம் டெல்லி சென்ற போது டெல்லி ஜும்ஆ மஸ்ஜிதிற்கு முன்பாக ரோட்டில் பூந்தோட்டத்தோடு இரு சமாதிகள் கம்பி வேலியினுள் நல்லடக்கம் செய்யப் பட்டுள்ளது. சமாதியில் ஒன்று மௌலானா ஆஸாத்தினுடையது. இன்னொன்று சுபாஷ் சந்திரபோஸின் படையில் இருந்த ஷாநிவாஸ் கான் இரு ஸியாரங்களையும் ஸியாரத் செய்யும் பேறு கிடைத்தது.

(ஹிந்து தமிழ்ப் பத்திரிகை, 31-01-2018,
பிரபஞ்சன் எழுதிய கட்டுரையை தழுவி எழுதியது)

# நான் விரும்பும் ஹிஜாப்

**முன்னுரை**

**இறைவன் கூறுகின்றான்:**

நபியே! நீர் உம் மனைவிகளுக்கும், உம் பெண்மக்களுக்கும், ஈமான் கொண்டவர்களின் பெண்களுக்கும், அவர்கள் தங்கள் தலை முன்றானைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக. அவர்கள் (கண்ணியமானவர்கள்) என அறியப்பட்டு நோவினை செய்யப்படாமலிருக்க இது சுலபமான வழியாகும். மேலும் அல்லாஹ் மிக மன்னிப்பவன். மிக்க அன்புடையவன். *(அல்குர்ஆன் 33:59)*

பெண்களாகிய நாம் புர்ஹா அணிவதன் முதல் நோக்கமே இறை கட்டளையை ஏற்றல் என்பதே. அதாவது இறை அச்சத்தின் வெளிப்பாடே.

ஆடை கலாச்சாரம் என்பது நாட்டுக்கு நாடு அவரவர் கலாச்சாரத்தைப் பொறுத்து மாறுபடுகிறது. ஆனால், முஸ்லிம் பெண்களாகிய நம்மைப் பொருத்த வரையில் இறைவன் தீர்மானித்து திருக்குர்ஆனில் கூறியுள்ள அளவே இதில் சிறந்த அளவுகோல்.

மேலும் கண்ணியமான பொருட்கள் கூடுதல் அக்கறையுடனேயே எப்போதும் பார்க்கப்படும். அதைப்போன்றே இஸ்லாத்தில் பெண்களை அதிக கண்ணியத்துடன் கருதுவதால் ஹிஜாப் மூலம் பாதுகாக்கப்படுகிறார்கள்.

இவ்வாறு ஹிஜாபுடன் செல்வதால் பிறர் சீண்டல்களிலிருந்தும் நாம் பாதுகாப்பும் பெற முடியும்.

**பர்தாவைப் பற்றிய சமூகப்பார்வை**

ஹிஜாப் என்பது ஏதோ முஸ்லிம் பெண்கள் மட்டுமே அணியும் ஆடை என்கிற கருத்தே நிலவி வருகிறது.

ஆனால், சாதி, மத பேதமின்றி ஒவ்வொரு பெண்ணும் பேண வேண்டிய கூடுதலான பெண்களுக்கான கண்ணியமிகு சீருடையேஇந்த பர்தா, நான் என்னுடன் பயிலும் பிறமத சகோதரிகளிடமும் கூட எடுத்துக் கூறுவதுண்டு.

நீங்களும் கண்ணிய ஆடையை அணிவதால் பாதுகாப்பும் பெறலாம். அது கீழ்த்தரமான பார்வைகளிலிருந்து பெண்கள் பெறும் பாதுகாப்பையே குறிக்கும்.



இந்த கீழ்த்தரமான பார்வை தான் பெண் உடலின் மீதான வன்முறைக்கு முதல் காரணம்.

பள்ளிகளில் இம்மாதிரியான (ஹிஜாப்) மத அடையாளங்களோடு செல்லலாமா? என்று கருதுபவர்கள் பலர்.

NDTV-ல் ஹிஜாப் பற்றிய கருத்தரங்கம் நிகழ்வை வைகறை (ஏப்ரல்-2008) படித்தபோது அதில் கூறியுள்ள வாதத்தைக் கொண்டு கருத்தை எடுத்து வைத்தோம். அதில்,

பள்ளிக்கூடங்களில் மத அடையாளம் இல்லை. என்பதே முதலில் பொய். மாணவிகள் பொட்டு வைத்துக்கொண்டு வருவதில்லையா? சிலுவை அணிந்துகொண்டு வருவதில்லையா? ஆனால்,

இறைவன் வலியுறுத்துவதோ கண்ணியமான ஆடை அணிவதை, கண்ணியமான முறையில் உடையை அணிய விரும்புவது ஒருவரின் அடிப்படை உரிமையும் கூட.

## சமூக அமைதியில் ஹிஜாபின் பங்கும்

"Prevention is better than cure" என்ற பழமொழி ஒன்றும்.

இதன்பொருள்

"வருமுன் காப்பதே சிறந்தது" இந்த வழிமுறையை சமூக அமைதியைக் காப்பதில் பெண்களும் பின்பற்றிட வேண்டும். ஹிஜாப் அணிவது ஒரு சமூகப் பொறுப்புணர்வாகும்.

பெண்களின் மீதான வன்முறை நிகழாது தடுக்க பெண்கள் தரப்பிலிருந்து எடுக்கும் ஒரு முதல்படி நிலை நடவடிக்கையே இந்த ஹிஜாப்.

ஹிஜாப்அணிவதால் குற்றங்கள் நிகழ்வதி லிருந்து நம்மை தற்காத்துக் கொள்ளலாம். சாதி, மத, பேதமின்றி இந்த ஹிஜாப் முறையை பின்பற்ற முன்வர வேண்டும்.

## ஹிஜாப் ஓர் உரையாடல்

Theological College எனப்படும் கிறித்தவர் களுக்கான இறையியல் கல்லூரியில் இன்றளவும் All Religious Meet" எனப்படும் "சர்வ-சமயக் கூட்டம்" நிகழ்த்தப்படும்.

இதில் 1988-ல் ஹிஜாப் உங்கள் பெண்களை அடிமைப்படுத்துகிறேத ஏன்? என்று கிறித்தவ நண்பர் கேட்ட கேள்விக்கு இஸ்லாமிய சகோதரர் ஒரு சுவாரஸ்யமான வகையில் பதிலளித்த புரிய வைத்த விதம் இங்கு நினைவு கூறத்தக்கது.

அதில், அந்த அறையைச் சுற்றி அவர்களில் சில கன்னியாஸ்திரிகளின் படங்கள் மாட்டப் பட்டிருந்தது. அதைப் பார்த்து இவர்கள் மட்டும் ஏன் இம்மாதிரியான சீருடைய அணிகிறார்கள் என்றார். அதற்கு இவர்கள் கன்னியாஸ்திரிகள் இறைவனின் பிரதிநிதிகள் (Representative of God) இவர்கள் கண்ணியமிக்கவர்கள். அவர்களை கண்ணியப்படுத்தவதற்காகவே இந்த சீருடை என்றார்.

இதைக்கேட்ட இஸ்லாமிய சகோதரர் உங்களது மதம் பெண்களில் ஒரு சிலரை மட்டுமே கண்ணியப்படுத்துகிறது. ஆனால் இஸ்லாமோ எல்லாப் பெண்களையும் கண்ணியமானவர்களாகக் கருதி இந்த ஹிஜாப் என்றும் சீருடையை அணியச் சொல்கிறது. இது எப்படி அடிமைச் சின்னமாக முடியும்? இது கண்ணியத்தின் அடையாளமே என்றார்.!

## மற்றொரு நிகழ்வில்

மாற்றுமத (இந்து) சகோதரர் ஒருவர் முஸ்லிம் சகோதரரைப் பார்த்துப் இப்படி குறைப்பட்டுக் கொண்டார். அதில்,

நான் என் முஸ்லிம் நண்பரின் வீட்டிற்குச் சென்றபோது, நண்பர் இல்லை. நண்பரின் மனைவியோ என்னை வாசலிலேயே நிற்க வைத்து திரை வழியே எட்டிப்பார்த்து, அவர் இல்லை (கணவர்) சென்று வருக என்றார்.

இதுவே எனது மனைவியாக இருந்தால் (இந்து சகோதரிகள்) சிறந்த முறையில் விருந் தினரை உள்ளே அழைத்து உபசரிப்பர். ஆனால் முஸ்லிம்களாகிய நீங்களோ பெண்களை திரைக்குள்ளே போட்டு அடைத்து அவர்களின் உரிமைகளையே பறிக்கின்றீர்கள் என சாடினார்.

இதைக்கேட்ட இஸ்லாமிய சகோதரர் அவரது மனக்குறையை விளக்க, பின்வருமாறு கேட்டார்.

நீங்கள் பேசியதை அப்பெண்மணி கேட்டாரா? - ஆம் கேட்டார்.

பதிலளித்தாரா? - ஆம் பதிலளித்தார்.

உங்களை திரைவழியே இன்னார் என்று அடையாளம் கண்டு கொண்டார் அப்படித் தானே? - ஆம்

நீங்கள் அப்பெண்மணியை பார்த்தீரா? - இல்லை என்றார் அவர்

நண்பரே, இங்கே உங்களது பார்க்கும் உரிமை தானே பறிக்கப்பட்டிருக்கிறது?

அப்பெண்மணிக்கு இல்லையே? என்றார். அத்துடன் ஹிஜாபைப் பற்றி எளிய வடிவில் கூறி புரிய வைத்தார். இதுவும் ஹிஜாபின் ஒர் அங்கமே.

## ஹிஜாபைப் பற்றிய உலகளாவிய பார்வை

உலக நாடுகளில் குறிப்பாக கிறித்தவ நாடுகளான பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம் போன்ற நாடுகளில் ஹிஜாப் தடை செய்யப்பட வேண்டும் என்றே அந்நாடுகள் கருதுகின்றனர். இது இஸ்லாமிய அடையாளம் என்றும், 'அடிமைச் சின்னம்' (A Symbol of Slavary) என்றும் பார்க்கப்படுகிறது.

இவர்கள் பெண்களை ஒரு போகப் பொருளாகவும், விளம்பரங்களில் காட்டப்படும் கவர்ச்சிப் பொருளாகக் கருதுவதே காரணம்.

உண்மையில் பர்தா அடிமைப்படுத்துவதில்லை. சுதந்திரமாகச் செயல்படும் உரிமையைத் தருகிறது.

ஹிஜாப் ஒருபோதும் வேலையைச் செய்வதற்கோ சேவையைச் செய்வதற்கோ தடையாக, முட்டுக்கட்டையாக இருந்ததில்லை என்பதை யுத்த களங்களில், போரில் காயம்பட்டோருக்கு நீர் புகட்டல், மருத்துவ உதவி செய்தல் போன்றவற்றின் மூலம் உம்முல் முஃமினின்கள் (முஃமின்களின் தாய்) நமக்கு உதாரணமாகக்கி சென்ற வரலாறு கூறுகிறது.

மேலும் அகழ் யுத்தங்களில் வீரச் செயல் புரிந்த வீரமங்கை சஃபியா (ரலி) அன்ஹு அவர்களும் மற்றொரு உதாரணமே.

### மாற்றுமத சகோதரிகளின் மறைமுக ஏக்கம்

தினமலர் - வாரமலர் 4-10-09 -ல் "முள்ளு பிளவுஸ் வருமா?" என்ற தலைப்பில் பேருந்தில் பல பெண்கள் வேண்டுமென்றே ஆண்கள் சிலரால் இடுபாடுகளுக்கிடையே மாட்டிக் கொள்வதாலும், சீண்டல்களுக்கு ஆளாவதாலும் தன்னை தற்காத்துக் கொள்ள முள்ளால் ஆன ஆடைகளை பெண்களுக்காக தயாரிப்பாளர்களா? என ஏக்கத்தோடு கேட்பது போன்ற ஒரு செய்தியும் இரும்பாலான ஆடையணிந்த "சேப்டி சியாமளா" என்னும் ஓர் கார்ட்டுன் (குமுதம், சிநேகிதி, ஏப்ரல் 2020ல்) படமும் வெளியானது.

இதற்காக தீர்வை எளிதாக இறைவன் தந்துள்ளானே?

அதுவே ஹிஜாப். இதனால் நாம் நம்மை தற்காத்துக் கொள்ளலாமே? எதற்காக முள்ளாலான பிளவுஸும், இரும்பாலான சேஃப்டியும்?

மேலும் இறைவன் கூறுகின்றான்

"ஆண்களிடம் குழைந்து பேசாதீர்கள்". - அல்குர்ஆன் - 33:32

முஃமினான பெண்கள் தங்கள் பாதங்களை பூமியில் தட்டி நடக்க வேண்டாம். அல்குர்ஆன்- 24:31

இவையும் ஹிஜாபின் ஒரு பகுதியே...

வெளியில் செல்லும் போது நறுமணம் பூசிக்கொள்வதை தவிர்த்தல், மலர்கள் சூடிச் செல்வதைத் தவிர்த்தல், சலங்கையுடைய நகைகள், பிறரை கவர்ந்திழுக்கும் நம்மை நோக்கி திரும்பிப் பார்க்க வைக்கும் மேற்கூறியவற்றை தவிர்ப்பதும் கூட ஹிஜாபே.

மனிதனைப் படைத்த இறைவன் நம் பலம், பலவீனங்களைப் பற்றி அறிந்தே நமக்கு அறிவுறுத்துகிறான்.

"யுவான் ரெட்லி" என்ற இங்கிலாந்து நாட்டின் பிரபல பெண் பத்திரிகையாளர் தாலிபான் படையினரால் பிடிக்கப்பட்டபோது, அங்குள்ளவர்களின் கண்ணியமிகு நடவடிக்கையால் தான் கவரப்பட்டதாகவும், இஸ்லாத்தை அவர் ஏற்க அதுவும் ஒரு காரணமாக அமைந்ததாகவும்,

"Ten days in the hands of Thalibans" என்ற தன்னுடைய புத்தகத்தில் அவர்

குறிப்பிடுகையில்,

ஒருமுறை நான் என் உள்ளாடைகளை பிறர் கண்ணில் படும்படி காய வைத்தேன். இதைப் பார்த்த தாலிபான்களால் இதை அப்புறப்படுத்தி, பிறர் கண்ணில் படாத இடத்தில் போடும்படி அறிவுறுத்தப்பட்டேன். ஏனெனில் இங்குள்ள பிற ஆண்களின் கண்ணில் படும்போது அவை சலனங்களை ஏற்படுத்தக் கூடும் என்று.

இந்நிகழ்வு என்னை சிந்திக்க வைத்தது என்று குறிப்பிட்டிருந்தார் அந்த சகோதரி.

ஆம் இதுவும் ஹிஜாபின் ஓர் அங்கமே.

இதுபோன்றதொரு செய்தி



தினமலர்-வாரமலர் *4-11-07,* பக்.3-ல் "எச்சரிக்கை" என்ற தலைப்பில் வாசகர் கடிதம் ஒன்று வெளியானது. அதில் உள்ளாடைகளை பிறர் கண்ணில் படும்படி உலர்த்துவதால் சில கயவர்கள் அதை கேலி கிண்டல் செய்வதைப் பற்றிய கட்டுரை.

இதைப் போன்றதொரு தினமலர்-வாரமலர் பகுதியில் துணித் தேய்ப்பவர் பெண்ணின் உள்ளாடை அளவுகளை கேலி செய்வதால் - பெண்களே உஷார் - உள்ளாடைகளை வெளியே தேய்க்கக் கொடுக்காதீர்கள் என்ற செய்தியும் வெளியானது.

இதுபோன்ற செயல்பாடுகளை தவிர்ப்பதும் ஹிஜாபின் ஓர் அங்கமே...

முடிவுரை

- இன்றைய நிலையில் முஸ்லிமல்லாத பெண்களும் தங்கள் மீது ஏவப்படும் பாலியல் துன்புறுத்தல்களிலிருந்து (Sexual Harassment) விடுபடவே முற்படுகிறார்கள்.

- இதற்காக அவர்கள் மெனக்கெடவும் செய்கிறார்கள்.

- பணியிடங்களில் ஒரு ஆண் செய்யும் தவறை மற்றொரு ஆண் அதிகாரியிடம் வெட்கத்தை விட்டு புகார் செய்கிறார்கள்.

- பலரும் கண்ணியம் கருதி புகார் வரை செல்லாமல் தங்களுக்குள்ளேயே மனம் புழுகி செய்தவறியாது நிற்கின்றார்கள்.

இத்தகைய பாதிப்புகளிலிருந்து நாம் அவர்களை மீட்டெடுக்க நமக்குள்ளேயே நாம் ஹிஜாபின் பெருமையை பேசிக்கொண்டே நின்று விடாமல் அவர்களுக்கு தாஃவா செய்ய வேண்டும்.

ஒருபடி மேலே சென்று ஹிஜாபைப் பற்றி நாம் அவர்களுக்கு கனிவான வார்த்தைகளால் புரியவைத்து அவர்களுக்கு ஹிஜாபை அன்பளிப்புகளாக வழங்க வேண்டும்.

"இன்னும் முஃமினான பெண்களுக்கும் நீர் கூறுவீராக ; அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும். தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தங்கள் அலங்காரத்தை அதனின்று தெரியக் கூடியதைத் தவிர வெளிக்காட்ட லாகாது. நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, நீங்கள் அனைவரும் அல்லாஹ்வின் பக்கம் திரும்புங்கள்." அல்குர்ஆன் - *24:31*

இறை வழிகாட்டுதலைப் பின்பற்றி அனைவரும் வாழ்வோமாக!

**அல்லல்களிலிருந்தும்,**
**துன்பங்களிலிருந்தும் பெண்களைக்**
**காப்பதால் "நான் விரும்பும் ஹிஜாப் "**
**- மகிழ்வோடு அணிந்து வருகிறேன்.**



சத்தியத்துடன் **யுத்தம்**

# அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் தோற்றது ஏன்?

அமெரிக்கப் படைகள் ஆப்கானிஸ்தானிற்குள் நுழைந்து 18 வருடங்கள் ஆகின்றன.

எதிரணியில் இருப்பவர்களை நாம் வீழ்த்தி கொண்டிருக்கிறோம். நாம் தொடங்கிய இந்த யுத்தத்தில் நாம் ஜெயித்து கொண்டிருக்கிறோம் என்றே இதுவரை அமெரிக்காவில் வீற்றிருந்த ஆட்சியாளர்கள் அவர்கள் நாட்டு மக்களிடம் கூறி வந்துள்ளனர்.

ஆனால் அவர்கள் கூற்றில் எந்த உண்மையும் இல்லை என்பதை வாசிங்டன் போஸ்ட் (Washington Post) ஆதாரப்பூர்வமாக நிறுவியுள்ளது.

அரசிடமிருந்து பெறப்பட்ட ரகசிய ஆவணங்களை கடந்த டிசம்பர் 2019 இல் வெளியிட்டது வாஷிங்டன் போஸ்ட்.

கடந்த 18 வருடங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஆப்கானிஸ்தான் போர் பற்றிய உண்மைகளை அமெரிக்க அதிகாரிகள் மறைத்து விட்டனர். கூறுவது பொய் என்று தெரிந்தும் வெற்றி வெற்றி என்று அறிக்கைகளை விட்டுள்ளனர். யுத்தம் ஜெயிக்க முடியாத கட்டத்தை தாண்டிவிட்டது என்று தெரிந்தும் அதற்கான ஆதாரங்களை மறைத்து விட்டனர் என்ற உண்மைகளை ரகசிய ஆவணங்களை வெளிக் கொண்டு வந்ததன் மூலம் போட்டு உடைத்தது வாஷிங்டன் போஸ்ட்.

அமெரிக்க வரலாற்றில் மிக நீண்ட நாள் நீடித்த யுத்தத்தின் தோல்விக்கான காரணங்களை ஆய்வு செய்தது அரசின் ஒரு நிறுவனம். அது உருவாக்கிய ஆவணங்களைத் தான் வாஷிங்டன் போஸ்ட் வெளியிட்டது.

பேட்டி காணப்பட்டவர்களின் பெயர்கள், அவர்களின் பேட்டிகள் ஆகியவற்றை மறைக்க அமெரிக்க அரசு முயன்றுள்ளது. மூன்று வருட சட்ட போராட்டத்திற்கு பின் தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் இந்த ஆவணங்களை வெளியிடும் அனுமதியைப் பெற்றது வாஷிங்டன் போஸ்ட்.

2000 க்கும் அதிகமான பக்கங்களை உள்ளடக்கிய இந்த ஆவணத்தில் போரில் நேரடியாக பங்கு வகித்த படைத்தளபதிகள், பிரதிநிதிகள், உதவியாளர்கள், ஆப்கான் அதிகாரிகள் ஆகியோர்களின் பேட்டிகள் பதியப் பட்டுள்ளன.

டக்லஸ் லூட். மூன்று நட்சத்திர அந்தஸ்து பெற்ற ராணுவ படை தளபதி. புஷ், ஒபாமா இவர்களின் ஆட்சி காலத்தில் வெள்ளை மாளிகையில் ஆப்கான் போர் பிரதிநிதியாக

பதவி வகித்தவர். 2015இல் அரசிற்கு அளித்த பேட்டியில் அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

" ஆப்கானை பற்றிய அடிப்படை புரிதல்கள் கூட இல்லாதவர்களாக நாங்கள் இருந்தோம். நாங்கள் என்ன செய்து கொண்டிருந்தோம் என்பது கூட எங்களுக்கு தெரியாது. இங்கே என்ன செய்வதற்காக நாம் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்? 2400 மனித உயிர்களை இழந்திருக்கிறோம்."

தங்களுடைய பேட்டிகள் பொதுமக்களின் பார்வைக்கு கொண்டு செல்லப்படாது என்று எண்ணியே பலர் பேட்டி அளித்துள்ளனர். தங்களுடைய யுத்த தந்திரங்கள் முழுத் தோல்வி அடைந்துள்ளது என்பதையும் ஆப்கானிஸ்தானை நவீன தேசமாக உருவாக்க பெருமளவில் பணம் விரயம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அமெரிக்க அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தான் போரில் எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள ஒரு தெளிவான கணக்கீட்டை அமெரிக்க அரசு மேற்கொள்ளவில்லை. ஒரு லட்சம் கோடி டாலர் செலவழிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது.

"ஒரு லட்சம் கோடி டாலர் செலவழித்து நமக்கு என்ன கிடைத்தது? இவ்வளவு தொகையை செலவழித்தது பயனுள்ளதா?"- என்று அரசுக்கு அளித்த பேட்டியில் கேள்வி எழுப்பினார் ஜெப்ரி எக்கர்ஸ். இவர் ஓய்வு பெற்ற கடற்படை அதிகாரி. புஷ், ஒபாமா ஆட்சியில் வெள்ளை மாளிகையில் பணி புரிந்தவர். " ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்ட பின்பு நான் கூறினேன் ஆப்கானிஸ்தானில் நாம் செலவழித்த தொகையை நினைத்து கடலுக்குள் தூக்கி வீசப்பட்ட ஒசாமா அனேகமாக அங்கிருந்து சிரித்துக் கொண்டிருப்பார்".

ஆப்கானிஸ்தானில் நாம் முன்னேறிக் கொண்டிருக்கிறோம். இந்த யுத்தத்தில் கலந்து சண்டையிடுவது அர்த்தம் உள்ளது என்று ஒவ்வொரு வருடமும் அமெரிக்க அதிபர்கள், இராணுவத் தலைவர்கள், பிரதிநிதிகள் அமெரிக்கர்களிடம் உறுதியுடன் கூறி வந்தனர். ஆனால் இவர்கள் கூற்றோடு முரண்படுகின்றன ஆவணங்கள்.

இந்த விஷயத்தில் பொதுமக்களை வேண்டுமென்றே தவறாக வழி நடத்த தொடர் முயற்சிகளை அமெரிக்க அரசு எடுத்துள்ளது என்பதை பேட்டி காணபட்டவர்களில் பலர் விவரித்துள்ளனர். புள்ளி விபரங்களை திரித்து அமெரிக்கா இந்த போரில் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கிறது என்று மாற்றியமைக்கும் பணி காபூலிலும் வெள்ளை மாளிகையிலும் வீற்றிருக்கும் ராணுவ தலைமையகத்தில் நடைபெறுவது வழக்கமான ஒன்று. ஆனால் நிலைமையோ வேறு என்றும் பேட்டி அளித்துள்ளனர்.

"எவ்வளவு சிறப்பான பிம்பத்தை காட்ட முடியுமோ அந்த அளவிற்கு ஒவ்வொரு தரவுகளும் மாற்றியமைக்கப்பட்டன." பாப் கிரவ்லி அரசுக்கு அளித்த பேட்டியில் கூறியது இது. இவர் 2013, 2014 இல் அமெரிக்க ராணுவத்திற்கு அறிவுரை வழங்கிடும் மூத்த அதிகாரியாக பணியாற்றிய ராணுவப் படைத் தலைவர். "நாம் செய்து கொண்டிருந்தது சரியே என்று கூறும் முற்றிலுமாக நம்பமுடியாத ஆய்வு மதிப்பீடுகள் தான் வலிய திணிக்கப்பட்டது. சுய இருப்பைத் தக்கவைத்துக் கொள்பவர்களாக நாம் மாறி விட்டோம்." என்றும் பாப் தெரிவித்துள்ளார்.

ஜான் சோப்கோ - இப்பேட்டிகளை கண்ட அரசு நிறுவனத்தின் தலைவர். அமெரிக்க மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுள்ளனர் என்பதையே ஆவணங்கள் சுட்டிக்காட்டுவதாக வாஷிங்டன் போஸ்ட்டிடம் ஒப்புக்கொண்டுள்ளார் அவர்.

சிகார் (Office of the Special Inspector General of Afghanistan Reconstruction) என்றழைக்கப்படும் ஆப்கானிஸ்தான் புனரமைப்பிற்கான சிறப்பு பொது காவல்துறை அலுவலகம் என்ற அரசு நிறுவனம் தான் இப்பேட்டிகளை கண்டது. யுத்த களத்தில் ஏற்படும் கழிவுகளையும் மோசடிகளையும் விசாரணை செய்வதற்காக 2008ல் காங்கிரஷால் (அமெரிக்க சட்டமன்றம்) உருவாக்கப்பட்டதே இந்த அரசு நிறுவனம்.

2014ல் சோப்கோவின் வழிகாட்டுதலின்படி தனது வழக்கமான பணியை விட்டுவிட்டு வேறொரு முயற்சியில் இறங்கியது சிகார்.

ஆப்கானிஸ்தானில் தாங்கள் கடைபிடித்த கொள்கைகளில் ஏற்பட்ட தோல்வியை கண்டறிய 17 மில்லியன் டாலர் செலவில் ஒரு

செயல்திட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த செயல் திட்டத்திற்கு "கற்றுக் கொண்ட பாடங்கள்" எனபெயரிடப்பட்டது. அமெரிக்கா இன்னொரு முறை வேறு நாட்டில் நுழையும் போதோ அல்லது சிதைந்துபோன தேசங்களை புனரமைக்க முயற்சி செய்யும் போதோ இதே போன்ற தவறுகளை மீண்டும் செய்யாமல் தடுப்பதே இதன் நோக்கம்.

போரில் கலந்துகொண்ட முதல்நிலை அனுபவம் கொண்ட 600க்கும் மேற்பட்டவர் களை இந்த செயல் திட்டத்தின் பணியாளர்கள் பேட்டி கண்டுள்ளனர். பேட்டி காணப்பட்டவர் களில் பெரும்பாலோர் அமெரிக்கர்கள். மேலும் நேட்டோ கூட்டணிகளை பேட்டி காண சிகாரை (SIGAR) சேர்ந்தவர்கள் லண்டன், பிரசெல்சு ( பெல்ஜிய தலைநகர்), பெர்லின் ஆகிய நகரங்களுக்கு பயணம் செய்துள்ளனர்.

2016 இல் இருந்து ஏழு முறை கற்றுக் கொண்ட பாடங்கள் அறிக்கைகளை வெளியிட் டுள்ளது சிகார். ஆனால் இதில் கடுமையான நேர்மையான விமர்சனங்களை சேர்க்காமல் விட்டுள்ளது. பேட்டி காணபட்டவர்களில் 90 சதவிகித நபர்களின் பெயர்களையும் சேர்க்க வில்லை.

அரசியல் சம்பந்தப்பட்ட விவகாரங்களில் சச்சரவுகள் வராமல் தடுப்பதற்காக பேட்டி காணப்பட்டவர்களின் பெயர்களை வெளியிட மாட்டோம் என்று கூறியே பேட்டி கண்டுள்ளது சிகார்.

கற்றுக்கொண்ட பாடங்களின் அறிக்கை களை பெறுவதற்காக ஆகஸ்ட் 2016இல் தகவல் பெறும் சுதந்திர சட்டத்தின் கீழ் முயற்சி செய்தது வாஷிங்டன் போஸ்ட். பொதுமக்கள் இந்த ஆவணங்களை பார்ப்பதற்கு உரிமை படைத்தவர்கள் அல்ல என்று வாதிட்டு தர மறுத்தது சிகார்.

ஆவணங்களை சிகார் வெளியிட வேண்டும் என்று கோரி நீதிமன்றத்தில் இருமுறை வழக்கு தொடுத்தது வாஷிங்டன் போஸ்ட்.

இறுதியாக அதுவரை வெளியிடாத 2000 பக்கங்கள் உள்ளடக்கிய குறிப்புகளையும் 428 பேட்டிகளின் எழுத்துப் படிவங்களையும், எண்ணற்ற ஒலி பேழைகளையும் சிகார் வெளியிட்டது.

கைவிட்டுப்போன போரில் அமெரிக்கா மாட்டிக்கொண்டதை பார்க்கும் பொழுதும் அமெரிக்க அரசு பொது மக்களிடம் இருந்து உண்மையை மறைக்க முயற்சி செய்வதை பார்க்கும் பொழுதும் வியட்நாம் போர் பற்றிய ரகசிய வரலாற்றை கூறும் பெண்டகன் பேப்பர் களோடு ஒத்துபோகின்றன "கற்றுக்கொண்ட பாடங்களின்" அறிக்கைகள்.

அல்-கொய்தாவிற்கு பதிலடி கொடுக்க வேண்டும். 11 செப்டம்பர் 2001 இல் நடந்த தாக்குதலை போன்று மீண்டும் ஒரு தாக்குதல் வராமல் தடுக்க வேண்டும். இவற்றை இலக்காகக் கொண்டே ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா படையெடுத்தது.

ஆனால் யுத்தம் தொடர்ந்து நீடித்ததால் போரின் இலக்கு மாறிக்கொண்டே இருந்ததை பேட்டிகளின் மூலம் அறிய முடிகிறது. ஆப்கானிஸ்தானை ஜனநாயகத்தை நோக்கி அழைத்துச் செல்ல இந்த போரை பயன்படுத்த வேண்டும் என்று சில அமெரிக்க அதிகாரிகள் விரும்பினர். ஆப்கானிஸ்தான் கலாச்சாரத்தை மாற்ற வேண்டும். பெண்களின் உரிமைகளை உயர்த்த வேண்டும் என்றும் சிலர் விரும்பினர். பாகிஸ்தான், இந்தியா, ஈரான், ரஷ்யா ஆகிய நாடுகளிடையே காணப்படும் பிராந்திய அதிகார பகிர்வை மீண்டும் மாற்றவும் இதன் மூலம் சிலர் விரும்பினர்.

"நான் ஒரு வரைபடத்தை காட்ட வேண் டும். அதில் நல்லவர்கள் எங்கே வசிக்கிறார்கள் தீயவர்கள் எங்கே வசிக்கிறார்கள் என்று கூறுவேன் என அவர்கள் (அமெரிக்க அரசு) நினைத்தனர்."ராணுவ சிறப்பு படைக்கு ஆலோசகராக பணியாற்றிய பெயர் வெளியிடப் படாத அதிகாரி 2017 இல் அரசிற்கு அளித்த பேட்டியில் கூறியவை இது. "என்னிடத்தில் அதுபோன்ற விவரங்கள் இல்லை என்பதை புரிந்து கொள்ளவே பல உரையாடல்கள் அவர்களுக்கு தேவைப்பட்டது."

அமெரிக்க ஆக்கிரமிப்பிற்கு எதிராக போராடுபவர்களையே தீயவர்கள் என்கிறார்கள் கயவர்கள்.

இது மட்டுமில்லாமல் ஆப்கானிஸ்தானில்



ஒரு திடமான ஜனநாயக அரசை நிறுவ முயற்சி செய்தது. ஆப்கானிஸ்தானை கட்டியெழுப்பு வதற்காக ஒதுக்கப்பட்ட டாலர்கள். அவற்றில் நடந்த ஊழல்கள். போதை மருந்தான அபினை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சிகள். அதில் அவர்களே சூடு பட்டு கொண்டது

(அதாவது அபின் உற்பத்தி மேலும் அதிகமாகியது) போன்ற பல பிரச்சனைகளை பேசுகிறது ஆவணங்கள்.

வியட்னாமில் ஏற்பட்ட அதே நிலைமை ஆப்கானிஸ்தானிலும் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சம் ஆரம்பத்திலிருந்தே அமெரிக்கர்களுக்கு இருந்தது. தாலிபான்களின் மீது குண்டு வீசப் பட்ட சில தினங்களுக்குப் பின் 11 அக்டோபர் 2011 அன்று அதிபர் புஷ் இடம் ஒரு நிருபர் கேட்டார் " வியட்நாம் புதை குழியில் விழுந்ததை போல் ஆப்கானிஸ்தானிலும் நடக்காமலிருக்க உங்களால் தடுக்க முடியுமா?"

வியட்நாமில் இருந்து சில முக்கியமான பாடங்களை நாம் கற்றுக் கொண்டுள்ளோம் என்று பதிலளித்தார் புஷ். அல் கொய்தா அமைப்பை நீதியின் முன் நிறுத்தும் வரை இந்த யுத்தம் தொடரும் என்றும் அவர் மக்களிடம் கூறினார்.

வியட்நாமில்ஏற்பட்ட நிலைமைஆப்கானிஸ் தானிலும் ஏற்படும் என்று அன்றைய நாட்களில் சில அமெரிக்க தலைவர்கள் சாடினர்.

உண்மையை கண்டறிவதற்காக ஆப்கானிஸ்தான் சென்ற ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரியான பேரி மெகாப்ரே அங்கிருந்து திரும்பிய பின் இப்படி எச்சரித்தார். "தாலி பான்கள் மீண்டும் எழுச்சியுடன் நிற்கின்றனர். அடுத்த இருபத்தி நான்கு மாதங்களில் விரும்பத் தகாத சம்பவங்களை நாம் எதிர்நோக்க கூடும்".

தலிபான் போராளிகளை சமாளிப்பதற்காக உடனடியாக படைகளை அனுப்புங்கள் என்று ஜெப்ரியும் அமெரிக்க போர் தளபதிகளும் காபூலில் வேண்டிக் கொண்டிருந்த வேளை யிலும் நாம் திடமாக முன்னேறிக் கொண்டிருக் கிறோம் என்று 2008 இல் பேட்டி அளித்தார் ஜெப்ரி. (Maj.Gen. Jeffrey schloesser - Commander of the 101st Airborne Division).

இரண்டு வருடத்திற்கு பின், அமெரிக்க நேட்டோ படையில் உயிரிழப்புகளும் காய முற்றவர்களின் எண்ணிக்கையும் அதிகரித் திருந்த வேளையில் காபூலில் நடந்த ஒரு பத்தி ரிகையாளர் சந்திப்பில் Let. Gen. டேவிட் (David Rodriguez) கூறினார் "திட்ட மிட்டபடி நாம் உறுதியாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம் "என்று.

அமெரிக்காவின் வியூகம் வெற்றி பெறுகிறதா? இன்று சில சட்ட வல்லுனர்கள் மார்ச் 2011 இல் இராணுவ தளபதி டேவிட் பெட்ரேயசை நோக்கி கேட்டனர்.

"கடந்து போன எட்டு மாதங்கள் முக்கிய மானது. ஆனாலும் கடினமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம்" என்று பதிலளித்தார் அவர்.

ஒரு வருடத்திற்குப் பின் பாதுகாப்புச் செய லாளர் லியோன் பெனட்டா விடமும் இதே போன்ற கேள்வி கேட்கப்பட்டது. அவரும் முன்னேறிக் கொண்டிருக்கிறோம் என்ற

பதிலை அளித்தார்.

ஜூலை 2016ல் தாலிபான்களின் தாக்குதல்கள் அதிகரித்து இருந்தது. அப்போது அமெரிக்க படைகளுக்கு தளபதியாக இருந்த ஜான் நிக்கல்சன் "சில முன்னேற் றங்கள் தெரிகிறது" என்றே நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

எதிர்த்தரப்பில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கையை சுட்டிக்காட்டி அதை வெற்றி யின் அளவீடாக காட்டினர்.

தோல்வியை மறைக்க பல பொய்களைச் சொல்ல வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டனர் அமெரிக்க அதிகாரிகள். எனினும் உண்மையை அவர்களால் தொடர்ந்து மறைக்க இயலவில்லை. தாலிபான்களை தீர்த்து விட்டோம் என்றனர். ஆனால் இப்பொழுது அவர்களிடம் சமாதானம் பேச முயல்கின்றனர்.

எப்படி ஒரு சிறிய கூட்டம் ஒரு பெரும் படையை பணிய வைத்தது? தொழில் நுட்பங் களிலும் ஆயுத வலிமைகளிலும் நம்மை அசைக்க முடியாது என்று மார் தட்டிக் கொள் பவர்கள் எப்படி ஆப்கான் போராளிகளிடம் வீழ்ந்தார்கள்? புரிந்து கொள்ள முடிகிறதா?. இதோ அதற்கான பதில்.

ஆக்கிரமிப்பாளர்கள் - அவர்கள் எத்தகைய வலிமை படைத்தவர்களாக இருந்தாலும் அவர்களை புறங்கண்டேயாக ஆகவேண்டும் என்னும் உறுதி.

இறைவனின் பாதையில் மேற்கொள்ளும் இந்தப் போரில் வெற்றிபெற்றாலும் அல்லது இறந்துபட்டாலும் மரணத்திற்குப் பின்னால் வரும் மறுமை வாழ்க்கையில் வெற்றி உண்டு என்ற அசைக்க முடியாத நம்பிக்கை.

இறைவனின் பாதையில் போர் புரிந்து மரணத்தை தழுவி மறுமை வெற்றியை அடைந்தே தீர வேண்டும் என்ற உத்வேகம்.

இவற்றையே இலக்காகக் கொண்டு வாழும் ஒரு இலட்சிய கூட்டத்தை வெற்றி கொள்வது என்பது சம்பளத்திற்கு சண்டையிடும் பட்டா ளத்துக்கு சாத்தியமானதல்ல.

(ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் தியாக வரலாறு)

- அபூஹாசின்





# வீடு விற்பனைக்கு

**கோட்டூர் மஸ்ஜிதே ஹபீப் அருகில்**

**மேற்கு நோக்கிய மனையின்**

**பரப்பளவு - 1350 சதுரடி**

**கட்டுமான விபரம்**

**தரைத் தளம் : 1034** ச.அடி
**(2 BHK+CCP+STORE ROOM)**

**2-வது தளம் : 1060** ச.அடி

**முதல் தளம் : 1100** ச.அடி
**(3 BHK +1** பால்கனி**)**

**(2 BHK / KITHCHEN CUM DINING + 2** பால்கனி - அளவு **(2½"x8" & 8"x3")**

- TOP FLOOR - 1 BHK – 500 ச.அடி
  Open Space Covered TIN Roof – 550 ச.அடி & 1 WBC (Servant use)
  1 HEAD ROOM - 160 ச.அடி
- ALL ROOMS WITH ATTACHED WBC
- G + 2 FLOORS
- 3 PHASE EB CONNECTION
- ALL BED ROOMS AND KITCHEN HAVE WOOD WORK WITH LOFT AND CUPBOARD
- 2 OVER HEAD TANKS – EACH 6000 LTRS CAPACITY FOR METRO AND BOREWELL WATER
- 2 BORE WELLS AND BOTH SWEET WATER
- ALL WINDOWS WITH STAINLESS STEEL MOSQUITY NET WITH SHUTTERS

தொடர்புக்கு
**M Mohamed Gani**
அலைபேசி எண்
**98840 22155**



# எதற்கெடுத்தாலும் பாகிஸ்தானா?

**ஆர்.எஸ்.எஸ்.-ஸின் அரசியல் பிரிவான பி.ஜே.பி. பிரித்தாளும் சூழ்ச்சியின் மூலம்தான் அரசியல் செய்து வருவது நாம் அறிந்ததே!**

பிரிட்டிஷார் இந்தியாவில் இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஒன்று சேரவிடாமல் எவ்விதம் அரசியல்செய்தார்களோ, அதே பாட்டையில் பா.ஜ.க.வும் அரசியல் செய்து வருவது கண்கூடு. அதன் எதிரொலி மூச்சுக்க மூச்சு முஸ்லிம் நாடான பாகிஸ்தானை இணைக்காமல் எந்த அரசியல் பேச்சும் மோடிக்கு அமையாதது ஆச்சரியமே! பிரதமர் மோடியின் பேச்சுக்களை கவனித்து வருபவர்கட்கு, அவரது கட்சியினரின் பேச்சுக்கள் உட்பட பிரிவினை வாத நெடி வீசுவதை தெள்ளென விளங்கும்.

*13-1-2020*-ல் புதுதில்லியில் சோனியாகாந்தி தலைமையில் கூடிய எதிர் கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்தில் தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டுக்கான (NRP) பணிகளை மத்திய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியது. தேசிய மக்கள் தொகை பதிவேடு என்பது தேசிய அளவிலான குடிமக்கள் பதிவேடு (NRC) கணக்கெடுப்புக்கான அடிப்படை வடிவமாகும்.

எனவே குடியுரிமைத் சட்டத் திருத்தத்தை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும் அத்துடன் தேசிய குடிமக்கள் பதிவேடு தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டுக்கான பணிகளை உடனடியாக நிறுத்த வேண்டும். ஏனெனில் மேற்கண்டவை அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு எதிரானவை.

மேலும் ஏழைகள், சமூகத்தில் பின் தங்கியவர்கள், தாழ்த்தப்பட்டோர், பழங்குடி யினர், மொழி மற்றும் மத ரீதியிலான சிறுபான்மையோர் ஆகியோருக்கு குறிவைத்து மத்திய அரசு இந்த நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்று மிகத் தெளிவாக எதிர்க்கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதற்குரிய சரியான பதில் அறிக்கையை அளிக்கத் திராணி இல்லாமல் பா.ஜ.க.வின் மூத்த தலைவரும் மத்திய சட்டத்துறை அமைச் சருமான ரவிசங்கர் பிரசாத், "எதிர் கட்சிகளின் தீர்மானம் பாகிஸ்தானை மகிழ்ச்சியடையச் செய்கிறது" என்று கொச்சைப்படுத்தியுள்ளார். இந்தியாவில் நடக்கும் மேற்படி பிரச்சனைக்கும் பாகிஸ்தானுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

பா.ஜ.க.வினருக்கு பாகிஸ்தானைச் சம்பந் தப்படுத்தாவிட்டால் தூக்கம் வராது போலிருக் கிறது. தேவையில்லாமல் பக்கத்து நாட்டைச் சம்பந்தப்படுத்துவது இந்தியாவுக்கு அழகு தானா? வங்க தேசத்திலிருந்தும், ஆப்கானிஸ் தானிலிருந்தும் மியான்மரிலிருந்தும்தான் அகதிகள் வந்திருக்கிறார்கள். எதிர்க்கட்சிகளின்

தீர்மானம் அந்நாடுகளையும் மகிழ்ச்சியடையச் செய்கிறது என்றும் கூறி இருக்கலாமே! ஏன் கூறவில்லை? ஆப்கானும் வங்க தேசமும் நட்பு நாடுகள்! பாகிஸ்தானை பரமவைரி நாடு என்று பிரதமர் மோடியும் பா.ஜ.க.வினரும் கருதுகிறார்கள். அப்படித்தானே?

"நாடு முழுவதும் என்.ஆர்.சி. கணக்கெடுப்பு தேவையற்றது. அதை நியாயப்படுத்த எந்தக் காரணமும் இல்லை. நாடு முழுவதும் என்.ஆர்.சி. கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று நாங்கள் நினைக்கவில்லை. இது தொடர்பாக பிரதமர் மோடி தெளிவாகக் கூறிவிட்டார். 10 ஆண்டுகட்கு முன்பு தேசிய மக்கள் தொகை கணக்கெடுப்பு எவ்வாறு நடத்தப்பட்டதோ அதேபோல, இப்போதும் கணக்கெடுப்பு நடத்தி மத்திய அரசு ஒப்புக் கொண்டது." என்று பீகார் முதல்வர் நிதிஷ்குமார் பா.ஜ.க.வின் கூட்டனி கட்சியான ஐக்கிய ஜனதா தளம் இவ்வாறு அறிவித்துள்ளதே என்று பேசியுள்ளார்.

குடியுரிமை திருத்தப் போராட்டங்கள் காரணமாக பாகிஸ்தானில் சிறுபான்மையினர் மத ரீதியிலான துன்புறுத்தல்கள் அனுபவித்தது உலக மக்களின் கவனத்திற்கு வந்துவிட்டது. இந்த நேரத்தில் உலக நாடுகட்குப்பதில் சொல்லியாக வேண்டிய நிலையில் பாகிஸ்தான் உள்ளது.

மோடியின் பேச்சு குறித்து அம்மிஷனின் பொதுச் செயலர் கருத்துக்கூற மறுத்துவிட்டார். ஆனாலும் அவர் முத்தாய்ப்பாக சொன்ன வார்த்தைகள் மோடியின் மத ரீதியிலான பிளவுபடுத்தும் நோக்கத்துடன் இயற்றப்பட்ட குடியுரிமைச் சட்டத்திற்குச் சரியான சூடு கொடுக்கும் பதிலாக அமைந்துவிட்டது. எதிர் பாராது, "எங்கள் அமைப்பில் ஹிந்து, இஸ்லாம், கிறிஸ்துவ மதங்களின்மீது நம்பிக்கை கொண்ட வர்கள் இருக்கிறார்கள். நாங்கள் ஒரு தாய் மக்களை விட மேலாக ஒற்றுமையுடன் வாழ்கிறோம். ஆகையால் மேற்படி சட்டம் குறித்து கருத்துக்கூற மாட்டோம்" என்று தெளிவாக மோடிக்கும் அமித்ஷாவுக்கும் புத்தி புகட்டும் வகையில் இராமகிருஷ்ண மிஷனின் பொதுச் செயலர் குறிப்பிட்டு, முஸ்லிம் அகதிகளை மட்டும் பிரித்து நாடற்றவர்களாக்கும் சதி முயற்சியை அம்பலப்படுத்துவதுபோல் உள்ளதையும் அவர்களின் செயல்பாடுகள் அநீதியானது என்பதை மறைமுகமாகவும் உணர்த்திவிட்டார்.

இந்தியாவில் நமக்கு எந்த அளவுக்கு உரிமை இருக்கிறதோ, அதே அளவுக்கு பாகிஸ்தானி லிருந்து அகதிகளாகக் குடியேறிய ஹிந்துக்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், கிறிஸ்துவர்கட்கு உரிமை உள்ளது என்று அமித்ஷா கூறியுள்ளார். மேலும் அவர்கள் இம்மண்ணின் மைந்தர்கள் என்றும் அவர்களை இந்த தேசம் அரவணைக் கும்" என்கிறார். இதில் முஸ்லிம் அகதிகளை மட்டும் ஏன் ஒதுக்குகிறார்? அவர்களும் இந்த மண்ணின் மைந்தர்கள் இல்லையா? அவர்களும் பிரிவினைக்கு முன்பு ஒன்றுபட்ட இந்தியாவில் வாழ்ந்தவர்கள்தானே! ஒரு வாதத்திற்கு சிறுபான்மையினரான சீக்கியர்கள், பௌத்தர்கள் ஆகியோரை இந்து மதம் இந்துக்களாகக் கருதுவதால் அவர்களுக்கு குடியுரிமை வழங்கப்படும் என்று வைத்துக் கொள்வோம். கிறிஸ்துவர்கள் தனி மதத்தினர் தானே! எப்படி ஆரம்ப காலத்தில் இந்தியாவுடன் ஆப்கான், பாக், வங்க தேசம் அனைத்தும் சேர்ந்து ஒரே பிரதேசமாக இருநத காலக்கட்டத்தில் இந்துக் களாக இருந்தவர்கள்தான் கிறிஸ்துவர்களா கவோ முஸ்லீம்களாகவோ மனம் விரும்பி மாற்று மதத்தை வாழ்வியல் நெறியாக ஏற்றுக் கொண்டவர்கள்தானே! இதில் துன்புறுத்தப் பட்டு அகதிகளாக நுழைந்த கிறிஸ்தவர்கள் மட்டும் ஏற்பதும், முஸ்லிம் அகதிகளை கை விடுவதும் எந்த வகையில் நியாயம்? அவ்விதம் முஸ்லிம்களை மட்டும் குறிவைத்து அவர்கள் திரும்ப தன் நாட்டுக்கும் போக முடியாமல் இந்தியாவிலும் வாழ முடியாமல், நாடற்றவர்களாக தடுப்பு முகாம்களில் அடைக்கும் அமித்ஷா வகுத்த கொடூர திட்டம்தானே, குடியுரிமைத் சட்டத் திருத்தம் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தின் அப்பட்டமான முஸ்லிம் துவேஷத்தைதானே இவர்கள் செயல் படுத்தத் துடிக்கிறார்கள். இந்த அநீதி சாதாரண மானவர்கட்கும் எளிதில் புரியுமே! அமெரிக்க நண்பர் டிரம்புக்குப் பயந்து கொண்டுதானே கிறிஸ்துவர்களை குடியுரிமை வழங்க இணைத்துக் கொண்டுள்ளார் அமித்ஷா! இது சிறுபிள்ளைக்கும் புரியுமே!

முஸ்லிம் அகதிகள் குறித்து அரபுலகம்

கண்டுகொள்ளாது. வாய்த் திறக்காது என்கிற பயமின்மையால், அமித்ஷாவின் முஸ்லிம் குரோத மனப்பான்மையின் வெளிப்பாட்டை காண்பிக்கிறது குடியுரிமைச் சட்டம்.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான், லஷ்கர்-ஏ.கொய்பா பயங்கரவாத அமைப்பின் தலைவர் ஹமீது ஸயீது ஆகியோர் CAA / NRC / NRP சட்டங்கள் குறித்து, காங்கிரஸ் தலைவர்களின் கருத்துக்களையும் கூறியுள்ளனர்.

சம்பத்மிஸ்ரா இவ்வாறு பா.ஜ.க.வில் ஆளுக்கு ஆள் பாகிஸ்தானை இழுத்துப்போட்டு அரசியல் செய்து உலக அரங்கில் இந்தியா விற்குக் கெட்டபெயர் தேடுகிறார்கள்.

கேரள முதல்வர் பினேராயி விஜயன், உச்ச நீதிமன்றத்தில் குடியுரிமைச் சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து மனு தாக்கல் செய்துள்ளார். அதில் அரசமைப்புச் சட்டத்தின் முக்கிய சாராம்சமான மதச் சார்பின்மை கொள்கையை இந்தச்சட்டம் மீறுகிறது. ஆகவே இந்தச் சட்டத்தை அரசமைப்புக்குச் சட்டத்திற்கு எதிரானது என அறிவிக்க வேண்டும் என்கிறார். கேரள முதல்வரின் போர்க்கொடி, பாகிஸ்தானை மகிழ்வடையச் செய்கிறது என்று பா.ஜ.க. கூறுமா? மேலும் கேரள முதல்வர் அரசமைப்புச் சட்டத்துக்கு எதிராக இயற்றப்படும் சட்டத்திற்கு கேரளத்தில் இடமில்லை என்று மத்திய அரசின் பொட்டில் அறைந்திருக்கிறார்.

மத்தியஅரசின் அடிவருடி எடப்பாடி பழனிசாமியும்"தேசிய மக்கள் தொகை பதிவேடு, தேசிய குடிமக்கள் பதிவேடு ஆகிய இரண்டும் வெவ்வேறானவை. யாருடைய குடியுரிமையும் பறிக்கப்படாது" என்கிறார். எதிர்க்கட்சித் தலைவர் ஸ்டாலின் தனது அறிக்கை ஒன்றில் நாடு முழுவதும் பொதுமக்களின் போராட்டம் பெருகிவரும் இச்சமயத்தில் மேற்கண்ட இருவகைப் பதிவேடுகட்கும் வித்தியாசம் தெரியாமல் முதல்வர் மௌனம் காத்து வருவது அதிர்ச்சியளிக்கிறது. மத்திய அரசு தேசிய மக்கள் தொகை பதிவேடு கொண்டு வருவதன் உள்நோக்கம் தேசிய குடிமக்கள் பதிவேடு தயாரிப்பதற்குத்தான் என்கிற அடிப்படை உண்மையை மறைக்கும் முயற்சியில் தமிழக அரசு ஈடுபடுவது கவலை அளிப்பதாகும்.

சிறுபான்மையினருக்கு மட்டுமல்ல ஒட்டு மொத்த தமிழகத்துக்குமே இந்த தேசிய மக்கள் தொகை தயாரிக்கும் பணியில் பெரும்பாதிப்பு உள்ளது என்பதைத் தெரிந்துதான் இப்பிரச்சனை எழுப்பப்படுகிறது. மேலும் என்.ஆர்.பி. தயாரிக்கும் பணிக்கு தற்போது புதிய படிவம் வெளியிடப்பட்டிருக்கும் செய்திகளும், மக்கள் தொகை கணக்கெடுப்புக்கு கேட்கும் விவரங்கள் அனைத்தும் என்.ஆர்.சி. பதிவேடு தயாரிக்கும் பணிக்குத் தேவையானவை என்கிற விபரங்களும் பொதுவெளிக்கு வந்துவிட்டன.

ஆகவே மேற்படி இருபதிவேடுகளும் தயாரிக்கும் பணியை தமிழ்நாட்டில் அனுமதிக்க மாட்டோம் என்று எடப்பாடி அறிவிக்க வேண்டும். இல்லாவிடில் நாடு திரும்பிப் பார்க்கும் அறப்போராட்ம் பொது மக்கள் மற்றும் இணக்கமான கட்சிகளுடன் நடத்தப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் மு.க.ஸ்டாலின் எதிர்க்கட்சித் தலைவரின் மேற்கண்ட அறிக்கையால் பாகிஸ்தான் சந்தோஷப்படும் என்று அறிவிக்கத் தயாரா அமித்ஷா?

மதச் சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையம் (USCIRF) குடியுரிமைச் சட்டத் திருத்தம் தவறான திசையை நோக்கிய ஆபத் தான பயணமாகும். இது இந்தியாவின் பன்முகத் தன்மைக்கும் நம்பிக்கைக்கும் அப்பாற்பட்டு சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்பதை உறுதி செய்யும் அரசியலமைப்புச் சட்டத்திற் கும் எதிரானது. இதனால் பல மில்லியன் இஸ்லாமிய மக்கள் சிறைகளில் அடைக்கப்படு வார்கள். ஹிட்லர் யூத மக்களை சிறையில் அடைத்ததுபோல் இந்திய நாடு முழுவதும் சிறைகள் உருவாகும். பல லட்சம் மக்கள் வெளியேறுவார்கள். மசோதாவைக் கொண்டு வந்த அமித்ஷாவுக்கு, அமெரிக்க வர தடை விதிக்க வேண்டும் என அறிக்கை வெளியிட் டுள்ளது. (தினமணி *15-12-2019*)

இத்தகு சூழ்நிலையில் மத்திய அரசும் சரி, தமிழ் மாநில அரசும் சரி, "யாருடைய குடியுரிமையும் பறிக்கப்படாது. எதிர்க்கட்சிகள் பொய்யைப் பரப்புகின்றன" என்கிற ஒரே பல்லவியை கிளிப் பிள்ளைபோல் பாடிக் கொண்டிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இந்தியாவுக்கும் பாகிஸ்

தானுக்கம் இடையே பிரச்சனையை தூண்டும் வகையில் இந்திய ராணுவத் தளபதியும் பிரதமரும் தொடர்ந்து பேசி வருவது கண்டு கவலைப்படாமல் இருக்க முடியாது. பிராந்தி யத்தின் அமைதி, பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை கட்குப் பங்கம் ஏற்பட்டு விடாமல் நடந்து கொள்ள வேண்டிய பொறுப்பை இந்தியா பாகிஸ்தான் இரு நாடுகளுமே உணர வேண்டிய தருணமிது.

பாகிஸ்தான் மட்டும்தான் சிறுபான்மை மக்கள் கொடுமைப்படுத்தப்படுவதை எதிர்த்துப் போராடுங்கள், அதுபற்றிப் பேசுங்கள் என்று எதிர்க்கட்சிகளைத் தூண்டிவிடுவதுபோல் பேசுவது பிரதமருக்கு அழகல்ல. பாகிஸ்தானைப் போலவே, வங்க தேசத்திலிருந்தும், ஆப்கானிஸ்தானி லிருந்தும் இடம் பெயர்ந்து வந்துள்ள அகதிகளும் இங்கு வாழ் கிறார்கள். அதற்காக ஆப்கானுக்கு எதிராக, வங்க தேசத்துக்கு எதிராக அங்குள்ள சிறுபான்மையினர் துன்புறுத்தப்படுவதை எதிர்த்துப் பேசவும், போராட்டம் செய்ய பிரதமர் தூண்டுவாரா? மாட்டார் ஏன்? ஆப்கானும் வங்க தேசமும் நெருங்கிய நட்பு நாடுகள். ஏன் இந்த பாரபட்சம்? அகதிகள் விஷயத் தில் பொறுப்புடன் பேச வேண்டி யிருப்பதுடன் மற்ற அண்டை நாடுகளின் இறை யாண்மைக்கும் நாம் மதிப்பளிக்க வேண்டும். அகதிகளின் விஷயத்தில் ஐ.நா. சபையின் சட்டத் திட்டங்களைப் பேண வேண்டும்.

மேலும் குடியுரிமை கொடுப்பதென்றால் ஜாதி, மதம், இனம் பார்க்காமல் இந்தியாவில் தஞ்சமடைந்த அனைத்து அகதிகட்கும் அளிக்க வேண்டும். கூடாது என்று முடிவெடுத்தால் எவருக்குமே கொடுக்கக்கூடாது என்பதே நேர்மையானதும், நியாயமானதும் அரசியல் சாசனத்துக்குட்பட்டதாகும் என்கிற நிதர்சனத்தை மத்தியில் முரட்டு பலத்தில் குளிர்காயும் இந்த ஆட்சியாளர்களுக்கு யார் எடுத்து விளக்குவது?

அஸாமில் தடுப்புக்காவலில் உள்ள 19 லட்சம் பேரில் 12 லட்சம் பேர் இந்துக்கள், 7 லட்சம் பேர்கள்தான் முஸ்லிம்கள் என கண்கெடுப்புக் கூறுகிறது. இந்த 19 லட்சம் பேரும் திருட்டுத் தனமாக வந்தவர்கள் என்று எப்படி கூற முடியும்? 150 ஆண்டுகட்கு முற்பட்ட காலங்கட்கு முன்னரே கிழக்கு வங்கா ளத்திலிருந்து அஸ்ஸாமுக்கு இந்துக்களும், முஸ்லிம்களும், நல்வாழ் வாதாரங்களை நாடித் தான் இடம்பெயர்ந்து வந்துள்ளனர். இவர்கள் அந்நியர்களோ அல்லது சட்ட விரோதமாக குடியேறியவர்களோ அல்லர். அதனால்தான் அஸ்ஸாமில் NRC க்கு எதிராக ஹிந்து அமைப்புக்களே தீவிரமாக போராட்டத்தில் குதித்துள்ளன. இந்நிலையில் எதிர்க்கட்சிகள்




பொய்ப் பிரச்சாரம் செய்கின்றன என்று அமித்ஷா தினமும் கூறிவருவது நாட்டு மக்களை ஏமாற்றும் பச்சை மோசடித் தனமில்லையா?

அதேபோல குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து நாடு முழுவதும் இடைவிடாமல் போராட்டங்கள் நடந்துவரும் வேளையில் ஜார்க்கண்ட் மாநில தேர்தல் பிரச்சார கூட்டத்தில் பேசினார். "குடியுரிமை சட்டத்தை காங்கிரஸ் எதிர்த்து வருகிறது. அப்படி என்றால் பாகிஸ்தானியர்கட்கு இந்தியக் குடியுரிமை வழங்க அந்தக் கட்சித் தயாரா? எனச் சவால் விடுத்தார். இதற்குப் பதிலளிக்கும் விதமாக ப.சிதம்பரம் தனது டுவிட்டரில் "பிரதமர்" விடுத்த சவாலில் என்ன அர்த்தம் இருக்கிறது? பாகிஸ்தானில் ஏற்கனவே குடியுரிமை பெற்றிருப்பவர்கட்கு இந்தியக் குடியுரிமை ஏன் வழங்க வேண்டும்? என்று பதிலளித்தார். எப்படி எல்லாம்

இந்தச் சட்டம் தொடர்பாக அரசியலில் கேலிக்கூத்தாக்கப்படுகிறது என்பதை கவனிக்க வேண்டும். ஒவ்வொரு கூட்டத்திலும் பாகிஸ் தானை இழுக்காமல் பிரதமருக்கே பேச்சே வராதுபோல் தெரிகிறது.

அமித்ஷாவால் தீப்பற்றி எரிய வைத்துள்ள இப்பிரச்சனைப்பற்றி குடியுரிமைச் சட்டத்துக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் மீது காவல்துறை அடக்குமுறை போக்கைக் கடைப்பிடிப்பது கவலை அளிப்பதாக ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரஸ் தெரிவித்துள்ளார். மேலும் ஐ.நா. மனித உரிமைகள்ஆணையத்தலைவரின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில் "இந்தச் சட்டத்தில் மத ரீதியில் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது. இந்த அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட் டுள்ளது" என்று கூறியிருந்தார்.

சிவசேனாவின் அதிகாரப்பூர்வமான சாமனா தலையங்கத்தில் "நாட்டில் உள்ள மக்கள் பலபிரச்சனைளை எதிர்கொண்டு வருகின்றனர். அவற்றிற்கு தீர்வு காண்பதுதான் நமது பணி. அதைவிட்டு, குடியுரிமை சட்டத் திருத்தத்துக்கு எதிரான போராட்டங்களுக்கு பாகிஸ்தான் காரணம்" என்று பிரதமர் மோடி குற்றம் சாட்டுகிறார். ஒருபுறம் துல்லியத் தாக்கு தல்கள் மூலமாக பாகிஸ்தானுக்குப் பாடம் கற்பித்துவிட்டோம் என்று பா.ஜ.க. கூறுகிறது.

மறுபுறம் நாட்டிலுள்ள பதற்றமான சூழலுக்கு பாகிஸ்தான் காரணம் என்று கூறுகிறது. இதில் எது உண்மை? என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. எதற்கெடுத்தாலும்பாகிஸ் தானை குற்றஞ் சாட்டுவதிலேயே நாளொரு மேனி பொழுதொருவண்ணம் காலத்தை ஓட்டும் நரேந்திரமோடி, மேற்படி சட்டத்திற்கு எதிராக நாடு முழுவதும் ஏன் பற்றி எரிகிறது? என்பதற்கு பா.ஜ.க. முதலில் பதில் அளிக்க வேண்டும் என்றும் சாமனா தலையங்கம் கூறுகிறது.

மேற்கு வங்க மாநிலம் சிலிகுரி பொதுக் கூட்டத்தில் பேசிய முதல்வர் மம்தா பானர்ஜி "பிரதமர் மோடி இந்தியாவை அடிக்கடி பாகிஸ் தானுடன் ஒப்பிட்டுப் பேசி வருகிறார். அது ஏன் என்ற கேள்வி எழுகிறது? அவர் இந்தியாவுக்குப் பிரதமரா? இல்லை பாகிஸ்தானுக்குத் தூதரா?" என விமர்த்திருக்கிறார். நாட்டு மக்களும் வாசகர்களாகிய நாமும் இதே கேள்வியைத்தான் கேட்கிறோம். எதற்கெடுத்தாலும் பாகிஸ்தானை குற்றஞ்சாட்டுவது ஏன்?

இறுதியாக "போர் ஏற்பட்டால் பாகிஸ் தானை இந்தியா 10 நாட்களிலேயே வீழ்த்தி விடும்" என்று தேசிய மாணவர் படை (NCC) வருடாந்திர பேரணியில் பிரதமர் மோடி முழங்கி யுள்ளார். இதன் தொடர்பாக பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் ஓகாரா பகுதியின் ராணுவ கட்டுப்பாட்டு அதிகாரி ஆசிஃப் கஃபூர் என்பவர் கூறியதாவது...

'எங்களுக்கு எதிராக இந்தியா போரைத் தொடங்கலாம். ஆனால், அந்தப் போரை நாங்கள்தான் முடித்து வைப்போம். அப்படி ஒரு போர் ஏற்பட்டால் அந்தப் போர் 7 நாட்களிலோ, 10 நாட்களிலோ முடிவது முக்கியமல்ல. அந்தப் போருக்குப்பிறகான நிலை என்ன என்பதுதான் முக்கியம்'

பாகிஸ்தான்-இந்தியா இடையே கடந்த ஆண்டிலேயே போர் ஏற்படுவதற்கான சூழல் நெருங்கியது. எனினும் தகுந்த பதிலடி தயார் நிலை காரணமாகவே (30 ஆண்டுகளாக பாகிஸ் தானில் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக் கைகளால் எந்த ஒரு சூழலையும் எதிர் கொள்ளும் தயார் நிலை) காரணமாகவே பாகிஸ்தான் ராணுவம் அந்தச் சூழலை மட்டுப்படுத்தி அமைதியை உறுதி செய்தது. அப்போது இராணுவத் தளபதி கமர்ஜாவத் பஜ்வாவின் சிறந்த வியூகத்தால் மிகப்பெரிய பேரழிவில் இருந்து தெற்காசியா தப்பியது. எதற்கு ஆசியப் பிராந்தியத்தில் அமைதி நிலவு வதையே பாக். அரசும் இராணுவத் தலைமையும் விரும்புகின்றன. அமைதியின் முக்கியத்துவத்தை இந்திய அரசின் தற்போதைய தலைமையும் இராணுவத் தலைமையும் உணர்ந்து கொள்ள வேண்டும்" என்று ஆசிஃப் கஃபூர் கூறியுள்ளார். (தினமணி 31-1-2020)( என்ன ஒரு அமைதியான அடக்கமான பதில். இதற்குப் பிறகு இந்திய தரப்பில் எவ்வித அறிக்கையும் வெளியிடப்படவில்லை.

**ஆக பிரதமர் மோடியும் அமித்ஷாவும் தீக்குள் விரலை விட்டு விட்டார்கள். அதன் விளைவு என்னவாகும் என்பதை காலம் உணர்த்தும். - ப. சையத் அஹ்மத்**



# CAA-2019 குடியுரிமை சட்டத் திருத்தத்தால் யாருக்கு என்ன பாதிப்பு?

என ஆவேசமாகப் பேசினார் சட்ட மன்றத்தில் முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள். அதற்குப் பதிலாக....

**CAA குறித்து சில தகவல்கள்...**

- சிலரை விட்டு, விட்டு சிலரை குடிமக்களாக்கும் சட்டங்கள் வரலாற்றில் என்னென்ன செய்தன? என்பதை சற்றே ஏறெடுத்துப் பார்த்தால் சிகிகி பற்றிய பல உண்மைகள் நமக்குப் புரியும்.

## ஹிட்லரின் ஜெர்மனி : 1935 சட்டம்

ஹிட்லர் 1938-களில் தொடங்கில் 1944 வரை யூதர்களைக் கூட்டுப் படுகொலைச் செய்தார். அதற்கு வழி விடவும், வகை செய்தி டவும் ஓர் சட்டத்தை 1935-இல் இயற்றினார். அதுதான் வரலாற்றில் Reich Law : Sept, 15-1935. இதனை, "ஜெர்மானியர்களின் இரத்தத்தையும், கண்ணியத்தையும் காக்கும் சட்டம்" என அழைத்தார். 1934-இல் "ஆரியன் சட்டம் எதற்கு?" என்றொரு பிரசுரத்தை வெளியிட்டன. அதில் யூதர்கள் ஜெர்மானிய சட்டங்களுக்கு உட்பட்டு அடிமைகளாக இருக்கலாம். ஆனால், அவர்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றது. ஹிட்லரின் இந்தச் சட்டம்தான் 1935 முதல் 1943 வரை ஜெர்மனியில் வாழ்ந்த யூதர்களை ஒட்டு மொத்தமான இன அழிவுக்கு ஆளாக்கியது.

## மியான்மர் : 1982 சட்டம்

இது ரொகினிய்யா முஸ்லிம்களின் குடியுரிமையைப் பறித்தது. "ரக்கைன்" பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் அந்தப் பகுதியின் பூர்வ குடிகள் அவர்களின் உரிமைகளைப் பறித்தது. அதன்பின் 2016 முதல் அந்த மக்கள் லட்சக்கணக்கான முஸ்லிம்கள் இனப்படுகொலைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். நாடற்றவர்களாக ஆக்கப்பட்டார்கள்.

இப்போது மியான்மர் அரசு, இனப்படு கொலைகளுக்காக உலக நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டு நிற்கின்றது.

## CAA சர்வதே கண்ணோட்டங்கள்

இந்தியாவில் (சங்கப்பரிவாரத்தினர் கால மெல்லாம் நடத்திவரும் (Hote Speech) வெறுப்புப் பிரச்சாரம். இனப்படுகொலை களிலேயே முடியும் என்கின்றார் அடாமா டெயிங் என்பவர். ADAMA Dieng, இவர் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளருக்கு இனப் படுகொலைகளைத் தடுப்பது தொடர்பான ஆலோசகர். இந்த இனப்படுகொலைகளுக்கு உதவி செய்யும் அரசியல் ஆயுதங்களே CAA : என்ற குடியுரிமை சட்டத் திருத்தம். NRC என்ற குடிமக்கள் பதிவேடு என்கிறார் அடாமா டெயிங். ஆதாரம் : Are Fears Over CAA, Misplaced, TH 19-12-19

CAA முஸ்லிம்களை நாடற்றவர்களாக ஆக்கிடும். ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் Secretary General ஆண்டோனியோ கட்டரஸல் கூறுகின்றார்.

இன்னும் கூறுகின்றார்



"உலக நாடுகள் சட்டங்களை ஏற்றும்போது இந்தியாவின் குடியுரிமை சட்டத் திருத்தங் களைப் போன்ற சட்டங்களை இயற்றாமலிருக்க வேண்டும்."

"இந்தச் சட்டங்கள், குடிமக்கள் சிலரை நாடற்றவர்களாக ஆக்குகின்றது."

"இந்தியாவில் இந்தச் சட்டம் பெருவாரியான முஸ்லிம்களை நாடற்றவர்காக ஆக்குகின்றது. நான் தனிப்பட்ட முறையில் இந்தியாவிலுள்ள மத சிறுபான்மையினரைப் பற்றிக் கவலைப்படுகின்றேன்" என்றார் அவர்.

இன்னும் கூறுகின்றார்

கஷ்மீரை இரும்புத் திரைக்குள் பூட்டி வைத்த பின், அங்கு நடந்த மனித உரிமை மீறல்களை மிகவும் சீரியஸாக எடுத்திட வேண் டும் என்றும் கூறினார். The Hindu, Dt. 20-2-2020

CAA : குடியுரிமைச் சட்டத் திருத்தம், முஸ்லிம்களை அந்நியப்படுத்திடும் - (USCIRF)

எனக் கூறுகின்றது United States Commission on Inter National Religious Freedom

அமெரிக்காவின், சர்வதேச மத உரிமை ஆணையம் இப்படிக் கூறுகின்றது.

இந்தியாவில் இயற்றப்பட்டிருக்கும் குடியுரிமை சட்டத் திருத்தத்தின் நோக்கம், பாரதீய ஜனதா கட்சியின் அரசியல்வாதிகளின் பேச்சுக்களிலிருந்து தெளிவாகின்றது. குடியுரிமை சட்டத் திருத்தம் இயற்றப்பட்டு விட்டதால், முஸ்லிம்கள்தாம், எல்ல கஷ்டங்





களையும், நஷ்டங்களையும், தண்டனைகளையும் அனுபவிப்பார்கள்.

இதில் அவர்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள், நாடற்றவர்களாக ஆக்கப்படுவார்கள், நாடு கடத்தப்படுவார்கள், தடுப்புக்காவல் முகாம்களில் பல ஆண்டுகள் இருப்பார்கள்.

இதையே ஐக்கிய நாடுகளின் சிறப்புப் பார்வையாளர்களும் குறிப்பிட்டிருப்பதாக அந்த அறிக்கை கூறுகின்றது.

அமெரிக்க மத உரிமைகள் ஆணையம். பாரதீய ஜனதா கட்சியின் தலைவர்கள், புதிய இந்து நாட்டை உருவாக்குவோம் எனக் கூறி இருப்பதை, சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், உத்திரப் பிரதேச மாநிலத்தின் முதல்வர் யோகி ஆதியானந் 2005 முதலே நாங்கள் இந்துக்கள் இல்லாத அனைவரையும் இந்தியாவிலிருந்து துடைத் தெறிவோம் எனக் கூறியுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளது அந்த அறிக்கை.

குடியுரிமை சட்டத் திருத்தம், இந்தியாவின் மத சுதந்திரத்தை அதல பாதாளத்தில் தள்ளி விட்டது. இந்தச் சட்டத்திற்கெதிரான எல்லா எதிர்ப்புகளையும் அரசு இரும்புக் கரம் கொண்டு அடக்குகின்றது.

நாட்டின் உள்துறை அமைச்சர் அமித்ஷா - நாங்கள் எல்லா ஊருவல்காரர்களையும், வெளியே வீசி விடுவோம் எனக் கூறியுதையும் குறிப்பிட்டுள்ளது. (The Hindu, 21-2-2020)

**குடியுரிமை சட்டத் திருத்தம் - 2019**

கிரேட் பிரிட்டன் ஹிரி என்ற ஆங்கில நாட்டின் விவாதம்

ஆங்கில நாட்டின் நாடாளும் மன்றத்தில், இந்தியாவில் இயற்றப்பட்ட குடியுரிமை சட்டத் திருத்தம் 2019 பற்றிய விவாதம் ஒன்று நடைபெற்றது. பெப்ருவரி 27/28, ஆகிய தேதிகளில்

இதில் பேசிய பல நாடாளுமன்றம் உறுப்பினர்களும், இந்தச் சட்டம் மக்களை இரு கூராகப் பிரிக்கும் சட்டம். முஸ்லிம்களுக்கு எதிரான சட்டம் எனக் கூறினார்கள். இந்த பிரிவினை ஆங்கில நாட்டில் குடியேறி இருக்கும் இந்தியர்களையும் பாதிக்கும் என்பதால், ஆங்கிலேயே நாடாகிய நாங்களும் இதுபற்றிக் கவலைப்பட்டிட வேண்டியது வருகின்றது எனக் குறிப்பிட்டார்கள் நாடாளு மன்ற உறுப்பினர்கள்.

இந்தியாவில் இயற்றப்பட்டிருக்கும் குடியுரிமை சட்டத் திருத்தம் (2019) சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதிக்கும் என்பதில்



எள்ளவும் ஐயமில்லை. ஆங்கில நாட்டிலும் ஏராளமான இந்தியர்கள் வாழுகின்றார்கள் அதனால் நாங்களும் கவலைப்பட வேண்டியது இருக்கின்றது என "House of Lords" ஆங்கில நாடாளும் மன்றத்தின் மேல் சபையில் உறுப்பினர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

இந்தியா மனித உரிமைகள் தளத்தில் கீழே இறங்கிக் கொண்டிருக்கின்றது. அது இதுகுறித்து சிந்திக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

The new law in India is discriminatory against Muslims and there may be a need for India to be on the "Foreign and Commonwealth Office (FCO) Human Rights List. He called on the British Government. to Urge Mr. Modi to Carry Out a review of CAA and its Effect on Indian Muslims" (Crossbenutpeer, The Earl of Sandwitch. TOI : 29-02-2020) (Report of Naomicanton)

இதன் பொருள் : மனித உரிமைகள் தளத்திலிருந்து இந்தியா வெளியாக்கப்பட்டு விடும் என்பது.

குடியுரிமை சட்டத் திருத்தம் 2019 - இயற்றப்பட்ட 79 நாட்களில் 70 உயிரிழந்தனர். சாவு எண்ணிக்கைத் தொடருகின்றது.

டிசம்பர்-11,2019 அன்று குடியுரிமை சட்டத் திருத்தம் - 2019 செயலில் வந்தது. அன்று முதல் பெப்ருவரி 29 முடியு 79 நாட்கள் ஆகின்றன. இதில் (CAA) கணக்கில் அசாம் 6 பேரும், உத்திரப்பிதேஷில் 19 பேரும், கர்னாடக மாநிலத்தில், 02 பேரும், தமிழ்நாடு 01 பேரும், டெல்லியில் 42 பேரும், ஆக (70 பேர்) இறந்திருக்கின்றார்கள்.

டெல்லியில் காவல்துறையினரும் சங்கப் பரிவாரத்தினரும் கொலை செய்யப்பட்ட முஸ்லிம்கள், சாக்கடைகள், கால்வாய்கள், குப்பைத் தொட்டிகள், இவற்றில் எறியப்பட்டிருந்தனர். இவற்றில் பிணங்களைத் தேடிடும் பணி தொடருகின்றன. இன்னும் பல பிணங்கள் கண்டுபிடிக்கப்படவில்லை. ஏனெனில் ஏராளமானவர்கள் காணாமலாக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் பிணமாக்கப்பட்டிருக்கலாம்.

அகில இந்திய அளவிலான கணக்கெடுப்பில் வண்ணாரப் பேட்டையில் இறந்த முஸ்லிமின் மரணம் கணக்கிடப்படவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

தி இந்து ஆங்கில நாளிதழ் வெளியிட்ட அறிக்கையில் 29.2.2020-ல் 69 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இதில் அகில இந்திய அளவில் காயம்பட்டவர்கள் பல ஆயிரங்களைத் தாண்டும். (2.3.2020) இப்போது இன்னும் பல பிணங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

இத்தனையும் இருக்க குடியுரிமை சட்டத் திருத்தத்தால் என்ன பாதிப்பு எனக் கேட்பவர்களை என்னவென்று சொல்வது? - **MGM**



# இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்) நூருத்தீன் ஸங்கி (ரஹ்) சுல்தான் ஸலாஹூத்தீன் அய்யூபி (ரஹ்)

## ஓர் அறிமுகம்

**வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹூத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.**

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக கி.பி.1095-இல் போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப் போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் தாங்கள் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். இந்த அநியாயங்களில் அவர்கள் கிறித்தவர்களையும் கூட விட்டு வைக்கவில்லை. அவர்களையும் கொலை செய்தனர். சிலுவைப் படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்பவர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத கையறு நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன் முதலில் அவர்களை நோக்கி எதிர் தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள்

கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த இஸ்லாமிய சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நினைவுப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னா பின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப் பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள்.

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங் கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து "எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட் டோம். பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது" என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத் தீன் அய்யூபி அவர்கள் கிறித்தவர்களுக்கு கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே...

## நூருத்தீன் ஸங்கியின் உடல்நலக்குறைவு

நூருத்தீன் ஸங்கி அவர்கள் பிடிபட்ட ஃபிரான்குகளை ஆயுதங்களுடன் ஊர்வலமாக டமாஸ்கசில் கொண்டு வந்தது ஃபிரான்குகளின் மனோ உறுதியை முற்றுலுமாக குலைத்து விட்டது.

இதர ஃபிரான்குகள் பனியா கோட்டையின் ஆட்சியாளர் ஹம்ப்ரே என்பவரையும் அவருடைய படையினரையும் காப்பாற்றுவது என முடிவு செய்தனர். அந்த நேரத்தில் ஹம்ப் ரேவும் அவருடைய படையினரும் மரணத்தின் விளிம்பில் நின்று கொண்டிருந்தனர். அவர் களை காப்பாற்றுவதற்கு இதர ஃபிரான்கு களுக்கு இருந்த ஒரே வழி நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் உயிர் பிச்சை கேட்டு மன்றாடு வது. எனவே, ஃபிரான்குகள் நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் மன்றாடினர். கோட்டையில் இருந்த ஃபிரான்குகளின் உயிர்களையும் உடை மைகளையும் விட்டு விடும்படி கோரிக்கை வைத்தனர். அந்த கோரிக்கைக்கு நூருத்தீன் ஸங்கி அவர்கள் எந்த பதிலும் அளிக்கவில்லை.

பனியா கோட்டையை முஸ்லிம்கள் முற்றுகையிட்டு அதற்கான சாலைகளையும் பாதுகாத்து கொண்டிருந்தனர். ஆனாலும் ஃபிரான்குகளின் மன்னன் ஒருவன் ரகசியமாக நைட் டெம்ப்ளர்களுடன் ஒரு மலைப்பாதையின் வழியாக பனியா கோட்டையினுள் நுழைந்து அங்கு கைது செய்யப்பட்டிருந்தவர்களை தப்பிக்க வைத்தான். அப்போது பனியா கோட்டை முற்றலுமாக சிதைந்து போய் இருந்தது.

எனவே, அவர்கள் அந்த கோட்டையை மீண்டும் புனர்நிர்மானம் செய்வது கடினம் எனக் கருதி அதனை கைவிட்டனர்.

## அடுத்த ஆட்சியாளர்

ரமளான் மாதத்தின் சில நாட்கள் கழிந்தன. இப்போது நூருத்தீன் ஸங்கி அவர்கள் நோய்வாய்ப்பட்டார். நாளாக நாளாக அந்த நோய் கடுமையாகிக் கொண்டே இருந்தது. நிலைமை கைமீறிப் போன நிலையில் நூருத்தீன் ஸங்கி அவர்கள் தன் சகோதரர் நஸ்ரத்தீன் அமீர் அமீரான், அசதுதீன் ஷிர்கு மற்ற இதர ஆளுனர்களை வரவழைத்தார். அவர்களிடம் கலந்தாலோசித்தார். தான் உயிர் பிழைப்பது அரிது, எனவே தனக்கு பின்னர் யார் அவர்களின் தலைவராக தேர்ந்தெடுப்பது என்பதை முடிவு செய்யும்படியும் கூறினார்.

அவர்கள் அனைவரும் ஒருமனதாக நூருத்தீன் ஸங்கி அவர்களின் சகோதரர் நஸ்ரத்தீன் அவர்கள் அடுத்த தலைவராக இருப்பார் எனவும் அவர் அலெப்போவில் தங்கி ஆட்சி செய்ய வேண்டியது எனவும் முடிவெடுத்தனர். அதேப்போல் அசதுதீன் அவர்கள் டமாஸ்கசில் தங்கி நஸ்ரத்தீன் அவர்களுக்கு கீழ் ஆட்சி செய்வார் எனவும் முடிவு செய்யப்பட்டது.

இப்போது நூருத்தீன் ஸங்கி அவர்களின் உடல்நிலை மேலும் மோசமானது. அவர் அலெப்போவிற்கு சென்று அங்குள்ள கோட்டை ஒன்றில் தங்கி விட்டார். நூருத்தீன் ஸங்கி அவர்களின் உடல்நிலை குறித்த செய்தி இரகசியமாகவே வைக்கப்பட்டது. இருப்பினும் இந்த செய்திகள் ஃபிரான்குகளுக்கு சென்று விட்டது. அதன் பின்னர் அனைவருக்கும் இந்த செய்தி பரவலாகி விட்டது. ஃபிரான்குகள் இப்போது முஸ்லிம்களை தாக்கும் மன வலிமையை பெற்றனர்.

இதற்கிடையே அசதுதீன் அவர்கள் டமாஸ்கசை நோக்கி சென்றார். இதற்கிடையே நூருத்தீன் ஸங்கி அவர்களின் உடல்நிலை குறித்த செய்தியினால் முஸ்லிம்களின் மனோ உறுதி குலைந்தது. அவர்களுக்கிடையே பிரச்னைகள் உருவாகின. இந்த வாய்ப்புகளை ஃபிரான்குகள் பயன்படுத்தி கொள்ள நினைத்தனர். அவர்கள் நைட் டெம்ப்ளர்களுடன் ஷைசர் நகரை முற்றுகையிட்டு பல முஸ்லிம்களை கொன்றனர். பலரை சிறை பிடித்தனர். ஆனால் அவர்களின் எண்ணம் வெற்றி பெறவில்லை. ஏற்கனவே நூருத்தீன் ஸங்கி அவர்களிடம் பெற்ற பயிற்சியின் காரணமாக பல திசைகளில் இருந்தும் முஸ்லிம்களின் படையினர் ஒன்றிணைந்து ஃபிரான்குகளை சின்னாபின்னமாக்கினர். அவர்களில் பலர் கொல்லப்பட்டனர். பலர் சிறைபிடிக்கப்பட்டனர்.

## நஸ்ரத்தீன் அலெப்போ வருகை

நூருத்தீன் ஸங்கி அவர்களின் கட்டளைக்கிணங்க நஸ்ரத்தீன் அவர்கள் அலெப்போவிற்கு வந்தார். ஆனால் அலெப்போவின் கவர்னர் மஜ்தத்தீன் நஸ்ரத்தீன் அவர்கள் வந்த செய்தியை கேள்விப்பட்டு தன்னுடைய கோட்டையின் கதவுகளை மூடிக்கொண்டார். அதை திறக்கவில்லை. காரணம் நூருத்தீன் ஸங்கி தான் இல்லையே, நாமே இந்த கோட்டையை சுயமாக ஆளலாம் என்ற எண்ணம். ஆனால், கோட்டைக்குள் இருந்த பல இளைஞர்கள் இதன் காரணமாக ஆத்திரமடைந்தனர். கோபத்துடன் "வந்திருப்பவர் நமது மன்னர், நமது தலைவர். இந்த ஆளுனரின் ஆசையின் காரணமாக அவரை நாம் அவமதிக்கக்கூடாது. நாம் அவரை ஆதரிக்க வேண்டும்" என்று கூறி கோட்டையின் கதவுகளின் தாழ்ப்பாளை உடைத்து கதவை திறந்து விட்டனர். நஸ்ரத்தீன் கோட்டைக்குள் நுழைந்து தன் படையினருடன் அங்கேயே தங்கி விட்டார்.

இதற்கிடையே நூருத்தீன் ஸங்கி அவர்கள் மெல்ல குணமடைய தொடங்கினார். அவர் சில செய்திகளை தன் சகோதரர் நஸ்ரத்தீன் அவர்களுக்கு அனுப்பி வைத்தார். நூருத்துன் ஸங்கி குணமடைந்து வரும் செய்திகள் எல்லா திசைகளுக்கு பரவத்தொடங்கின. எனவே, குழப்பமும் பயமும் கொண்டிருந்த முஸ்லிம்கள் இந்த செய்தியினால் மன உறுதி கொள்ளத் தொடங்கினர். பெருநாளைப் போல அங்கங்கே இந்த செய்திகளை கொண்டாடத்தொடங்கி விட்டனர்.

இப்போது நூருத்தீன் ஸங்கி அவர்களிடமிருந்து செய்தி வந்தது. "நீங்கள் ஏன் சோர்ந்து விட்டீர்கள், மீண்டும் சென்று ஃபிரான்குகளை தாக்குங்கள்" என்பதே அந்த செய்தி.

## ஷைஸர் கோட்டை




ஷைஸர் என்பது ஹமாவிற்கு அருகில் உள்ள ஒரு கோட்டை. இரண்டிற்கும் இடையில் அரைநாள் பயணதூரம். அந்த கோட்டை மலைக்கு மேல் பாதுகாப்பாக உள்ளதொரு கோட்டை. அதற்காக வழி மலையை குடைந்து போடப் பட்டிருந்தது. அந்த கோட்டை பனு முன்கித் என்பவர்களிடம் இருந்தது. அதன் ஆட்சி யாளராக அப்போது அபூ அல் முஷ்ரஃப் இப்னு அலி என்பவர் இருந்தார். கி.பி. 1098 இல் தான் இறக்கும் வரை அதன் ஆட்சியாளராக அபூ அல் முஷ்ஃப் இருந்தார்.

தான் இறக்கும் போது தன் சகோதரர் அபூஸலமா முர்ஷித் என்பவரை தனக்கு பின் ஆட்சியாளராக தேர்ந்தெடுத்தார். ஆனால் அபூஸலமா அவர்களோ "அல்லாஹ்வின் மீது சத்தியமாக நான் ஷைஸரின் ஆட்சியாளராக இருக்க மாட்டேன். நான் எப்படி வெறுங்கை யோடு இந்த உலகிற்கு வந்தேனோ அதேப் போல் வெறுங்கையோடே நான் திரும்ப செல்ல விரும்புகிறேன்" என்று கூறி மன்னர் பதவியை மறுத்துவிட்டார். அவருக்கு நிறைய பிள்ளை கள். அவர்கள் மிகப் பெரிய தளபதிகளாகவும் பின்னாளில் மாறினர். அவர்களில் இஸ்ஸத் தவ்லா, முஅய்யித் தவ்லா ஆகியோர் முக்கிய மானவர்கள்.

இதன் பின்னர் அபூ அல் முஷ்ரஃப் தன்னுடைய இன்னொரு சகோதரர் அபூ அல் அஸாகிர் சுல்தான் என்பவரை பனூ முன்கித்-இன் ஆட்சியாளராக நியமித்தார். இவருக்கோ ஆண் பிள்ளைகள் கிடையாது. எனவே, இவர் இயல்பாகவே தன் சகோதரர் மீது பொறாமை கொண்டிருந்தார். தன் மருமகன்களை காணும் போதெல்லாம் அவருக்கு இந்த பொறாமை அதிகரித்துக் கொண்டே இருந்தது.

இந்த பொறாமை உணர்வை பயன்படுத்திக் கொண்ட சிலர் அபூஸலமாற்கும் அபூ அல் அஸா கிருக்கும் இடையே சண்டையை உருவாக்க முயன்றனர். இதற்கிடையே கி.பி. 1136இல் அபூ ஸலமா காலமாகி விட்டார். இந்த சந்தர்ப் பத்தை பயன்படுத்தி அபூ அல் அஸாகிர் அவர்களை ஷைஸர் கோட்டையை விட்டு துரத்த முடிவு செய்தார். இதற்கொரு முக்கிய காரணம் இருந்தது.

முஅய்யித் தவ்லா அவர்கள் சிறந்த பலசாலி யாகவும் வீரராகவும் இருந்தார். அப்போது தஜ்லா என்னுமிடத்தில் ஒரு பெரிய சிங்கம் ஒன்று நாட்டுக் குள்ளே நுழைந்துவிட்டதாக சிலர் அவரிடம் கூறினர். அவர் அந்த சிங்கத்தை கொல்ல உடனே கிளம்பிவிட்டார். யாரிடமும் எதையும் சொல்ல வில்லை. காரணம் அவர்கள் தன்னை தடுத்து விடக்கூடாது என்பதற்காக. தன் குதிரையில் சிங்கத்தை தேடி கிளம்பினார். சிங்கத்தை கண்டார். மெதுவாக சிங்கத்தை நோக்கி நடந்தார். சிங்கமும் அவரை பார்த்து விட்டது. ஆக்ரோஷத்துடன் சிங்கம் அவரை நோக்கிப் பாய்ந்ததது. அதிலிருந்து லாகவமாக தப்பி தன் வாளால் அந்த சிங்கத்தை குத்தி கொன்று விட்டார்.

பின்னர் அந்த சிங்கத்தின் தலையை வெட்டி அதனை ஒரு பையில் சுற்றி எடுத்து வந்து தன் தாயிடம் அதைக் காட்டினார். நடந்த எல்லாவற்றையும் கூறினார். அவருடைய தாய் உடனே அவரிடம், மகனே "உடனடியாக ஷைஸரை விட்டு வெளியேற தயாராகு,. அல்லாஹ்வின் மீது ஆணையாக உன்னுடைய மாமன், உன்னுடைய துணிச்சலுக்கும் வீரத்திற் கும் உன்னையும் உன் சகோதரர்களையும் விட்டு வைக்க மாட்டார்" என்று கூறினார். அப்படியே தான் நடந்தது.

முஅய்யித் தவ்லா தனியொரு ஆளாக சிங்கத்தை கொன்று அதன் தலையை கொண்டு வந்த செய்தியை கேள்விப்பட்ட உடன், அடுத்த நாளே அபூ அல் அஸாகிர் அவர்களை நாட்டை விட்டு வெளியேறும்படி கட்டளையிட்டார். எனவே, அவர்கள் ஷைஸரை விட்டு வெளியேறி நூருத்தீன் ஸங்கி அவர்களை நோக்கி சென்றனர்.

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்



# அதிரை சாஹின் பாக்கில் போராட்டத்தில் NRC, NPR, CAA

அதிராமப்பட்டினத்தில் 1.03.2020-ல் சாஹின்பாக் போராட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக வைகறை வெளிச்சம் பத்திரிகையாளர் அபுசித்தீக் அவர்கள் பேச அழைப்பு கொடுக்கப்பட்டது.

அதிராமப்பட்டினத்தை தொடர்ந்து அடுத்த படியாக பட்டுக்கோட்டை சாஹின்பாக்கிலும் பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். அங்கேயும் NRC, NPR, CAA பற்றிய விரிவான தகவல்கள் கொடுக்கப்பட்டது.

இரு இடங்களிலும் வைகறை வெளிச்சம் மாதஇதழின் பத்திரிக்கையாளன் என்றே அறிமுகம் செய்து தொடங்கி கிடைத்த நேரத்தில் பல தகவல்களை கொடுத்து முடித்தார்.

அதிராமப்பட்டினத்தில் மக்களிடம் பேரன்பு கிடைத்தது. கூடியிருந்த மக்கள் நம்மிடம் சொல்லியது 'இது போல் யாரும் தெளிவாக சொன்னதில்லை. அவ்வளவு தெளிவாக விளக்கினீர்கள்' என்றார்கள்.

அடுத்தபடியாக பட்டுக்கோட்டைக்கு சென்ற போது அங்கு நேரம் அதிகமாக கொடுக்கப்பட்டது. கேள்வி-பதில் நிகழ்வாகவும் மாற்றி இறுதியாக முடிக்க இரவு 10 மணி ஆகிவிட்டது.

மக்கள் நம்மிடத்தில் சொல்லியது "இதுவரை 12 நாட்களாக நாங்கள் போராடி வருகின்றோம். வருவோரெல்லாம் அரசியலை தான் பேசினார்கள். ஆனால் நீங்கள் ஆவணங்களோடும், ஆதாரங்களை கண்களின் முன்னால் காட்டி பேசியது மிகச்சிறப்பாக இருந்தது என்று கூடியிருந்த மக்கள் கூறினார்கள்."

அடுத்ததாக

பட்டுக்கோட்டை சாஹின்பாக்கில் பெண்களில் சிலர் இன்னும் நிறைய பெண்கள் வரவில்லை. அவர்கள் இந்த தகவல்களை தவறவிட்டு விட்டார்கள்" என்றும் கவலைபட்டார்கள். அதிராமப்பட்டினம் மற்றும் பட்டுக்கோட்டை இரண்டு ஊர்களிலும் மீண்டும் நீங்கள் வந்து பேச வேண்டும். உங்களுக்கென்று ஒரு நேரத்தை ஒதுக்குகிறோம் என்றார்கள்.

எல்லாவற்றையும் கடந்து மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் அதையும் மீறி மக்கள் 12 நாட்களுக்கும் மேலாக போராட்டக் களத்தில் இரவும் பகலும் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு சரியான தகவல் போய்ச் சேரவில்லை என்ற வருத்தமும் இருந்தது.

நான் அவர்களிடம் சொல்லி விட்டு வந்தது "நிகழ்ச்சி தொகுப்பாளர்கள் வந்து பேசும் பேச்சாளர்கள் பேசி முடித்த பிறகு மக்களிடம் கேள்வி கேட்க சொல்லுங்கள்" நம் கோசங்கள் பெரிய பலனை தராது. அமர்ந்திருப்பவர்கள் அதனை தெரிந்து கொண்டு போராட வேண்டும் என்றேன். நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள் முழுவதுமாக ஏற்றார்கள்.

அல்லாஹ் போதுமானவன்.

-அபூ சித்தீக்



# 2019 வாக்கு இயந்திரம் மோசடி அம்பலம்..!

## எரிக்கப்பட்டு விட்ட ஒப்புகைச்சீட்டு

2019 இல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பல முறைகேடுகள் நடந்துள்ளன என்று ஊடகங்களில் பல செய்திகள் வந்து கொண்டிருந் தாலும் சில வாரங்களுக்கு முன்பு 2 அரசு சாரா அமைப்புகள் தேர்தல் ஆணையத்தின் மீதும் இந்திய அரசாங்கத்தின் மீதும் தொடுத்த வழக்கு மிகுந்த கவனத்தை பெற்றன.

உச்சநீதிமன்றம் இந்த இரண்டு அமைப்புகள் கொடுத்த கோப்புகளை ஆராய்ந்து வாக்கு இயந்திரத் தில் மோசடி நடந்திருப்பது தெளிவாக உள்ளதாக கருதுவதால் அது தேர்தல் ஆணையத்திடம் பதில ளிக்குமாறு கேட்டு கொண்டது. இதுவரைக்கும் தேர்தல் ஆணையம் எந்த பதிலையும் சொல்ல வில்லை. ஒவ்வொரு வாக்கு இயந்திரத்துடன் ஒரு ஒப்புகை சீட்டு வழங்கும் இயந்திரம் சேர்க் கப்பட்டிருந்தது நாம் யாருக்கு வாக்களித்தோம் என்பதை அறிந்து கொள்வதற்காகவும் பின்பு வாக்குகள் இயந்திரத்தில் சரியாக செய்யப்பட் டுள்ளதா என்பதை ஆராய்ந்து கொள்வதற்காகவும் இதனை தேர்தல் ஆணையம் 2019 அனைத்து இடங்களிலும் வைத்தனர்.

எதிர்க்கட்சிகள் பல ஒப்புகை சீட்டை வைத்து தான் வாக்கு என்ன வேண்டும் என்று பல போராட் டங்களை முன்னெடுத்தார் தேர்தல் ஆணையம் முடிவு அறிவிப்பதில் தாமதம் ஏற்படும் என்று சொல்லி அதனை தட்டிக்கழித்து விட்டது. இப்படி தேர்தல் ஆணையம் எதற்கும் ஒத்து வராமல் இருந்தது பல நடுநிலை அவர்களை கேள்வி எழுப்ப வைத்தது. அதன் ஒரு பகுதியை இரண்டு தனியார் தொண்டு நிறுவனங்கள் தொடுத்த வழக்கும் கூட.

இந்த நிலையில் பிரிண்ட் என்கின்ற இணைய தளம் தேர்தல் ஆணையத்திற்கு தகவல் அறியும் சட்டத்தின் கீழ் ஒரு கேள்வியை அனுப்பியது அதில் 2019 ஒப்புகை சீட்டு எங்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றது போன்ற கேள்விகள் இருந்தன.

இதற்கு பதிலளித்த தேர்தல் ஆணையம் செப்டம் பர் 2019 மாதமே அனைத்து மாநில தேர்தல் ஆணையத்திற்கும் மற்றும் யூனியன் பிரதேசங் களுக்கும் ஒப்புகைச் சீட்டுகளை அழித்து விடுமாறு உத்தரவு அனுப்பிய கடிதத்தையும் இணைத்து இவை அனைத்தும் அழிக்கப்பட்டு விட்டதாக தெரிவித்துள்ளது.

94b 1961 சட்டப்படி அனைத்து ஒப்புகை சீட்டுகளும் ஒரு வருடத்திற்கு பாதுகாக்கப்பட வேண்டும் என்பது ஆணை.

ஆனால் தேர்தல் ஆணையம் எதற்கு இதில் இவ்வளவு அவசரம் காட்டியது என்பது அனைவரும் அறிந்ததே. ஒப்புகை சீட்டு உடன் வாக்குப்பதிவு எண்களை பின்னால் யாரேனும் ஆராய்ந்தால் இதில் நடந்த முறைகேடு அனைத்தும் வெளிப்பட்டு விடும் என்பதற்கு இந்த அவசரம்.

2020 டெல்லி தேர்தலில் 5 மணி அளவில் 45 சதவீதமாக இருந்த வாக்கு ஒரு நாள் கழித்து 61% ஆனதும் இதில் ஏதேனும் தவறுகள் நடந்திருக்க வாய்ப்பு உள்ளது என்பதை உறுதிப்படுத்துகின்றன அதனால் நாம் இப்போதே டெல்லி ஒப்புகைச்சீட்டு எங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது எவ்வளவுநாள் பாதுகாக்கப்படும் போன்ற கேள்விகள் அடங்கிய ஒரு மனுவை RTI வாயிலாக அனுப்பி உள்ளேன்.

- அபூதாஹிர்

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1, Mannady Street, Mannady, Chennai - 600 001.
Editor M. Gulam Mohamed, Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFSET PRINTERS,**
19/1, 21/2, Kitabath Khan Bhadhur Street, Chennai - 600 002.